சோழ வேந்தர் பரம்பரை வன்னிய பாளையக்காரர் வரலாறு



- நடன. காசிநாதன்

சோழ வேந்தர் பரம்பரை

வன்னியப் பாளையக்காரர் வரலாறு

தொல்லியலறிஞர்

நடன. காசிநாதன்

தமிழ்நாடரசு தொல்லியல் துறை
மேனாள் இயக்குநர்

அண்ணல் வெளியீடு

4, 2ஆம் முதன்மைச் சாலை,
கலைமகள் நகர், ஈக்காட்டுத் தாங்கல்
சென்னை - 600 097. தொலைபேசி : 044 - 22328407

நூல் விவரங்கள்

நூலின் பெயர்	:	**சோழ வேந்தர் பரம்பரை வன்னியப் பாளையக்காரர் வரலாறு**
ஆசிரியர்	:	**நடன. காசிநாதன்**
பதிப்பாளர்	:	**ஆறு. அண்ணல்**
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாறு
பதிப்பு ஆண்டு	:	2005
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	14.6 டெல்டா கிரீம்வேவ்
நூலின் அளவு	:	14 x 22 செ.மீ. டெம்மி
அச்சு எழுத்து	:	12 புள்ளி
ஒளிஅச்சு	:	சிவம்'ஸ், சென்னை-18
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் எண்டர்பிரைசஸ், வடபழனி, சென்னை - 24
பக்கங்கள்	:	152
நூலின் விலை	:	ரூ.50.00
வெளியீடு	:	அண்ணல் வெளியீடு 4, 2ஆம் முதன்மைச் சாலை கலைமகள் நகர், ஈக்காட்டுத் தாங்கல் சென்னை - 600 097. தொலைபேசி : 044 - 22328407
முன் அட்டைப் படம்	:	மகாராஜராஜ ஸ்ரீமான் ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழனார்
பின் அட்டைப் படம்	:	மகாராஜராஜ ஸ்ரீமான் தி.ஆண்டியப்ப சூரப்ப சோழனார்.



படையல்

சோழப் பெருவேந்தர்களின் வழித்தோன்றல்களான பிச்சாவரம் பாளையக்காரர்களின் குல முதல்வரும், எனது தந்தையின் பெயரான நடனசபாபதிக்குக் காரண நாயகருமான தில்லை கூத்தபிரானின் திருவடிக் கமலங்களில் இந்நூலைப் படைக்கின்றேன்.

நடன. காசிநாதன்

நூலோன் உரை

நான் தொல்லியல் துறை இயக்குநர் பணியில் இருந்தபோது பணி தொடர்பாகச் சிதம்பரத்துக்கு முகாம் செல்ல நேர்ந்தது. அப்போது என்னுடன் எனது கெழுதகை நண்பரும், எமது அலுவலகக் கல்வெட்டாய்வாளருமான திரு. வெ.இராமமூர்த்தியும் வந்திருந்தார். அவருக்குச் சிதம்பரத்தில் மருத்துவராக விளங்கும் திரு. நடராசன் எம்.பி.பி.எஸ்., மிகவும் நெருங்கிய நண்பர். அவர் எழுப்பியிருக்கும் ஒரு தங்கும் விடுதியில் நாங்கள் தங்கியிருந்தோம். எங்கள் முகாம் பணி முடித்துவிட்டு இரவில் ஓய்வாக இருந்தபோது மருத்துவர் நடராசன் எங்களைத் தங்கும் விடுதிக்குவந்து சந்தித்தார். அவரோடு நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது தாம் தில்லை நடராசர் மீது மிகவும் பக்தி கொண்டவர் என்றும்; அங்கு ஆருத்திரா தரிசனம் நடக்கும்போது 'சோழ மண்டகப்படி' என்று இரண்டு மண்டகப்படிகள் நடத்தப் பெறுன்றன என்றும்; இம்மண்டபகப் படியைச் சோழர் வழியில் வந்தவர்கள் என்று கூறப்பெறும் பிச்சாவரம் ஜமீன் பரம்பரையின் வாரிசு நடத்துகிறார் என்றும்; அவர் தற்போது மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளார் என்றும், அவரால் முன்னாளில் நடத்தியது போன்று பெரும் பொருள் செலவிட்டுச் சிறப்பாக நடத்த இயலவில்லை என்றும்; தெரிவித்தார். ''ஆதலால் அப்பாளையக்காரருக்கு முன்பிருந்த மரியாதை, மதிப்பு நடராசர் ஆலயத் தீட்சதர்களிடம் தற்போது இல்லை. அது மிகவும் வருத்தமாக உள்ளது. நடராசர் ஆலயத்தில் பிச்சாவரம் பாளையக்காரர்களுக்குப் பண்டை நாளில் இருந்த மதிப்பையும், மரியாதையையும் நாம் நிலைநிறுத்தியாக வேண்டும். அதற்காகப் பிச்சாவரம் பாளையக்காரர்களின் முழு வரலாற்றையும் தேடிக் கண்டுபிடித்து எழுதி முடித்தல் வேண்டும். அது தங்களால்தான் முடியும். நீங்கள் எழுதித் தருதல் வேண்டும்'' என்று என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்.

''நான் முயற்சி செய்வேன். முடிந்த வரையில் பிச்சாவரம் பாளையக்காரர்களின் வரலாற்றை எழுதி முடிப்பேன்'' என்று அவரிடம் வாக்குறுதி அளித்தேன்.

நான் 1998ல் பணி ஓய்வு பெற்ற பிறகு எனது நெடுநாளைய விருப்பமான 'வன்னியர் வரலாறு' எழுதும் பணியில் ஈடுபட்டேன். அதற்கான சான்றுகளைத் தேடுகையில் வன்னியர் பற்றிக் கூறும் பல செப்பேடுகளைக் காண நேர்ந்தது. குறிப்பாகச் சேலம் மாவட்டம், மல்லிகுந்தம் என்னும் ஊரில் கிடைத்த செப்புப் பட்டயத்தைப் படித்துப் பார்த்தபோது 'பிச்சிவரத்து பண்டாரத்தார்' என்ற குறிப்பு மன்னர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. அப்பட்டயத்தைப் படித்து வெளியிட்டவர் பட்டயத்தின் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு எனத் தெரிவித்திருந்தார். சற்றேறக்குறைய இரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே பிச்சாவரப் பாளையக்காரர்கள் இருந்திருக்கிறார்கள் என்று என்னால் அறிய முடிந்தது.

பிறகு மூதறிஞர் திரு. க.சண்முகசுந்தரனார் வெளியிட்டு வந்த 'பல்லவரையர்' என்ற பருவ இதழ் மூலமும், சமூக முன்னேற்ற சங்கம் வெளியிட்ட ஐம்பெரும் விழா மலரில் கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் உரை வெளியீட்டின் மூலமும் பிச்சாவரம் பாளையக்காரர்கள் பற்றிய மேலும் சில செய்திகளையும் அறிந்தேன். அத்தோடு க.துரைசாமி நாயகரால் வெளியிடப் பெற்ற 'வன்னிகுலாதிக்கம்' என்னும் நூலில் கவிச்சிங்கம் அர்த்தநாரீச வர்மா பாடியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு பாட்டில் வன்னியப் பாளையக்காரர்கள் பற்றிய பட்டியலிலும் பிச்சாவரம் பாளையக்காரர் இடம்பெற்றிருந்ததையும் கண்டேன். மேற்கூறப் பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு வன்னியப் பாளையக்காரர் (பிச்சாவரம்) என்று ஒரு பகுதியை எம் 'வன்னியர்' நூலில் எழுதினேன். அதில் அப்பாளையக்காரர்கள் சோழர் வழிவந்தவர்களாக இருக்கலாம் என்று தெரிவித்திருந்தேன்.

அதனைப் படித்த நண்பர்கள் சிலர் பிச்சாவரம் பாளையத்தைச் சார்ந்த பாளையக்காரர்கள் தற்போது எங்குள்ளனர் என்று கண்டறிய தீவிர முயற்சி மேற்கொண்டார்கள். அவர்களில் திருவாளர்கள் ஆறு. அண்ணல் எம்.ஏ, எம்.ஃபில், மற்றும் நா.முரளி பி.ஏ ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அவர்களின் தூண்டுதலால் சென்ற

செப்டம்பர்த் திங்கள் நானும், திருவாளர்கள் மா. சந்திரமூர்த்தி, தொல்லியல் துறை மேனாள் துணை இயக்குனர், புலவர் முத்து. எத்திராசன், மேனாள் தமிழாசிரியர், சன் தொலைக்காட்சியின் துணைச் செய்தி ஆசிரியர் ஆறு. அண்ணல், சென்னை தாம்பரம் விமானப்படை அலுவலக அலுவலர் நா. முரளி ஆகியோர் சிதம்பரம் சென்று பிச்சாவரம் பாளையக்காரர் மகா.ரா.ரா.ஸ்ரீ ஆ. சிதம்பரநாத சூரப்பசோழகனாரையும் அவரது குடும்பத்தினரையும் சந்தித்தோம். அவர்களிடம் அப்பாளையம் பற்றிய சில செய்திகளைச் சேகரித்துக் கொண்டு, பின்பு சிதம்பரத்துக்கு அருகாமையிலுள்ள பிச்சாவரம் ஊருக்கு அவ்வரசர் குடும்பத்தோடு சென்றோம். அங்கு ஊர் மக்கள் சிலர் மூலமாகப் பிச்சாவரம் பாளையக்காரர்களுடைய பூர்வீகம் பற்றியும் மற்றும் அவர்களது வாழ்க்கை வசதி பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டதோடு, பிச்சாவரம் பாளையக்காரர்களின் அரண்மனை இருந்த இடத்தையும், அவ்வூரின் அருள்மிகு குட்டியாண்டவர் கோயிலையும் பார்த்தோம்.

அருள்மிகு குட்டியாண்டவர் கோயிலின் உண்ணாழியில் ஒரு கல்வெட்டு உள்ளது என்று அறிந்து மூவிகேமரா வெளிச்சத்தின் உதவியால் அதனைப் படித்தேன். அது கி.பி. 1583ல் எழுதப் பெற்றுள்ளது என்பதையும், 'விட்டலேசுர சோழ கோனார்' என்ற பிச்சாவரம் பாளைய மன்னர் ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறிந்து நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தோம். கி.பி. 16-ஆம் நூற்றாண்டளவிலேயே பிச்சாவரம் மன்னர் ஆட்சி புரிந்திருக்கிறார் என்பது பெருமகிழ்ச்சியையும், பிச்சாவரம் பாளையம் பற்றிய எங்களது ஆய்வை மேலும் முனைப்போடு செய்ய வேண்டும் என்ற உந்துதலையும் எங்களுக்கு அளித்தது. அப்பொழுது மாலை 6.00 மணி தொடர் மழையும் பெய்தது.

அதற்குப் பிறகு அரச குடும்பத்தாரையும் அழைத்துக் கொண்டு, மன்னரின் தாயார் வாழ்ந்துவரும் செல்லப்பன் பேட்டைக்கு இரவு 10.00 மணி அளவில் சென்றோம். செல்லப்பன் பேட்டை, நாகை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம், பந்த நல்லூருக்கு மேற்கே மூன்று கல் தொலைவில், பந்தநல்லூர் - திருப்பனந்தாள் சாலையில் அமைந்துள்ளது. செல்லப்பன் பேட்டையிலிருந்த இவர்களது வீடு விரிந்த அளவில் சிறு அரண்மனை போன்று காட்சி தந்தது. ஆனால் உள்ளே நுழைந்து பார்த்த பிறகுதான் அது சரியாகப் பராமரிக்கப் படாததால் எந்த அளவுக்குக் கலனாகியிருக்கிறது என்பதை அறிய முடிந்தது.

அவ்வீட்டில் மன்னர் ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழகனாரின் தாயார் ஜலஜகந்தி இராஜாத்தி ஆயாள் அவர்களையும், மன்னரது இளைய சகோதரர் திரு. இராஜகுமார் சூரப்ப சோழகனார் அவர்களையும், அவரது இல்லத்தரசி மற்றும் இரு குமாரர்களையும் கண்டோம். மற்றொரு சகோதரர் திரு. சம்பத்குமார் சூரப்ப சோழகனார் அவர்கள் அவ்வூரிலேயே வேறொரு வீட்டில் வாழ்ந்து வருவதாகக் கூறினார்கள். அவரோடு அவரது இல்லத்தரசி மற்றும் இரு குமாரர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

இரவு 12.00 மணி வரை அங்கிருந்து அவர்களிடம் சில விபரங்கள் கேட்டறிந்தோம். மேலும் அவர்கள் காண்பித்த அரசு கிரீடம், உடைகள், படைக்கலன்கள், நிழற்படங்கள் ஆகியவற்றை வீடியோ படம் எடுத்ததோடு, ஆவணங்கள் சிலவற்றிலிருந்து குறிப்புக்களையும் எழுதிக் கொண்டு புறப்பட்டு, மறுநாள் விடியற்காலை 2.00 மணி அளவில் தில்லை வந்தடைந்தோம்.

பிச்சாவரம் ஜமீன் வரலாறு உரிய சான்றுகளுடன் விரிவாக எழுதப்படுதல் வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டி வரும் மருத்துவர் நடராசர், அவரது தங்கும் விடுதியில் நாங்கள் தங்குவதற்கு, ஏற்பாடு செய்திருந்தார். மறுநாள் காலை அப்பெருமகனாரையும் மற்றும் சிதம்பரம் நகர மன்ற மேனாள் தலைவர் திரு. சந்திரபாண்டியன் அவர்களையும் சந்தித்து அதுவரை நாங்கள் திரட்டிய வரலாற்றுச் செய்திகள் பற்றி எடுத்துக் கூறினோம். அவர்களிருவரும் இவ்வரலாறு எழுதுவதற்குத் தங்களாலியன்ற ஒத்துழைப்பு நல்வதாக உறுதியளித்தார்கள். அன்று நண்பகல் நாங்களனைவரும் மன்னர் அவர்களோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக உள்ள திருவேட்களத்துத் தெற்கிருப்புக்குச் சென்று அங்கிருந்த சிவப்பணிச் செல்வர் இயலிசைக் கலைஞர் தேவார சங்கீத பூஷணம் திரு. க.சி.து. நாராயணசாமி அவர்களைச் சந்தித்தோம். அவரிடமிருந்து சில குறிப்புக்களையும், நூல்களையும் பெற்றுக் கொண்டு, பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் செயலாளரும், துணைப் பதிவாளரும், எனது பள்ளிப் படிப்புக் காலம் தொட்டு நெருங்கிய நண்பராக இருந்து வருபவருமான திரு. சபா. பாலசண்முகனாரை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

பிச்சாவரம் ஜமீன் பற்றி லண்டன் மாநகர், எடின்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் ஃபெய்த் (David Faith) ஆய்வு செய்திருக்கிறார் என்று கேள்விப்படுகிறோம்; அவரது ஆய்வறிக்கைக் கிடைக்கக்கூடுமா என்று கேட்டோம். அவர் இது குறித்துப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் சுப்பையா அவர்களைக் கேட்டுத் தகவல் தருவதாக வாக்களித்தார். அன்று இரவு புறப்பட்டு நாங்கள் சென்னைக்குத் திரும்பி விட்டோம்.

சென்னைக்கு வந்த பிறகு சில இலக்கியங்கள் மூலமாகவும், சில செப்பேடுகள் வாயிலாகவும் பிச்சாவரம் ஜமீன் பற்றி மேலும் சில செய்திகளை என்னால் திரட்ட முடிந்தது. மேலும் ஆதாரங்கள் பெற வேண்டுமானால் சென்னை ஆவணக் காப்பகம் சென்று, பிரிட்டிஷாருக்கும் பிச்சாவரம் ஜமீன்தார்களுக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களையும், தென்னார்க்காடு மாவட்ட விவரக் குறிப்பு (South Arcot District Gazetteer) மற்றும் டிஸ்ட்ரிக்ட் மேனுவல் (District Manual) களையும் படித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். அத்தோடு பிச்சாவரம் பாளையக்காரர்களோடு உறவு கொண்டிருந்த அண்டை பாளையக்காரர்களான உடையார்பாளையம், அரியலூர், முகாசாபரூர், வடகால், மயிலாடுதுறை, கடலங்குடி ஆகிய பாளையக் காரர்களின் ஆவணங்களையும் படித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

மேற்காணும் பணிக்குக் காலம் அதிகமாகும் என்ற காரணத்தால் தற்போது கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு வரலாற்றுச் சிறு நூல் முதலில் எழுதி வெளியிடலாம் என்று முடிவு செய்து இந்நூலை எழுதியுள்ளேன்.

இந்நூல் எழுதுவதற்குச் சில முக்கிய சான்றுகளைத் திரட்டித் தந்தவர்கள் திருவாளர்கள் ஆறு. அண்ணலும், நா.முரளியும் ஆவார்கள். அவர்களுக்கும் மற்றும் நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நண்பர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள நிழற்படங்கள் திருவாளர்கள் புலவர் முத்து. எத்திராசன், ஆறு. அண்ணல், நா.முரளி ஆகியோர் அன்போடு எமக்கு அளித்து உதவியவை ஆகும். அதற்காகவும் மேற்குறிப்பிட்ட மூவருக்கும் நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். பிச்சாவரம் மன்னரின் முன்னோர்களின் நிழற்படங்கள் 'திருக்கைவளம்' என்னும் நூலிலிருந்தும் நகல் எடுத்துச்

சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால் அந்நூல் பதிப்பாளர் மற்றும் உரையாசிரியர் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

நான் இந்நூல் எழுதுவது சம்பந்தமாகச் சிதம்பரம் செல்லும் போதெல்லாம் எமக்கு உண்டியும் உறைவிடமும் அளித்துதவும் எம் தங்கை திருமதி. மணிமொழிக்கும், மைத்துனர் திரு. வி. விஜயராகவன், எம்.ஏ., எம்.எட்., தலைமை ஆசிரியர், கிள்ளை உயர்நிலைப் பள்ளி ஆகியோருக்கும் எம் மனம் கனிந்த நன்றி.

நான் குடும்பப் பணியில் அவ்வளவாக அக்கறை காட்டாமல் நூல் எழுதும் பணியில் மூழ்கும் போதெல்லாம் எந்தவிதத் தடங்கலும் எமக்கு ஏற்படுத்தாமல், காலம் தவறாமல் எனக்கு உண்டியளித்து எம்மை ஊக்குவித்து வரும் எம் துணைவியார் திருமதி கா.திலகவல்லி, மருமகள் திருமதி. ஜெயந்தி கதிரவன், மகன்கள் திரு. கா. கதிரவன், திரு. கா. அருண்மொழி, திரு கா. ஆதித்யன், பெயர்த்தி க. ஹரிணி ஆகியோருக்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டவன் ஆவேன்.

இச்சிறு நூலின் உதவியால் சோழவேந்தர் வழிவந்த பிச்சாவரம் வன்னியப் பாளையக்காரர் பற்றி தமிழுலகம் ஓரளவுக்கு அறிந்து கொள்ள முடியுமானால் அது எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன். இந்நூல் அப்பாளையத்தைப் பற்றிய ஒரு அறிமுக நூலேயாகும். வெகு விரைவில் விரிவான நூல் எழுதப் பெறும் என்பதையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

நடன. காசிநாதன்

136, 5வதுதெரு,
மல்லீஸ்வரி நகர்,
சேலையூர், சென்னை - 600 073
தொலைபேசி : 044 - 22290757

பதிப்பாளர் உரை

வன்னியர் குல சத்திரியர்களின் வரலாறுகளை சமூக ஏடுகள் வழியாகவும் நூல்கள் மூலமும் வெளிக் கொண்டு வந்தவர்களில் சூளை திரு. சுப்பிரமணிய நாயகர் (மறைவு) மற்றும் அவரது மகனார் திரு. சு. துரைசாமி நாயகர் ஆகியோருக்கு முக்கியப் பங்கு உண்டு. அவர்கள் வெளியிட்ட 'வன்னி குலச் செல்வர்களின் உயில்கள்', 'தமிழ் மன்னர்கள்' ஆகிய இரு நூல்களைச் சிறு வயதில் படித்திருக்கிறேன். அந்த நூல்களில் பிச்சாவரம், அரியலூர், உடையார்பாளையம், சிவகிரி, அளகாபுரி, ஏழாயிரம் பண்ணை போன்ற வன்னியர் பாளையங்களை (நாடுகளை) ஆண்ட மன்னர்களின் படங்களும், அவர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் இடம் பெற்றிருந்தன. தொல்லியலறிஞர் திரு.நடன. காசிநாதன் அவர்கள் எழுதிய 'வன்னியர்' நூலிலும் அவர்களைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அவற்றில் மூழ்கிப் படித்த எனக்கு, மேற்கண்ட மன்னர் குடும்பத்தினரைச் சந்திக்க வேண்டுமென்றும், அவர்களது தற்போதைய நிலையை அறிய வேண்டுமென்று ஆவல் ஏற்பட்டது. பின்னர் எம்.ஃபில் பட்டப் படிப்புக்கு 'வன்னியர் வரலாறும் வாழ்வியலும்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன்.

இதன் தொடர்பாக வன்னியர் குல சத்திரியர்கள் பற்றிய பல்வேறு நூல்களைத் தேடிப் பிடித்துப் படித்தேன். அப்போது வன்னியர் சமூக வரலாற்றை வெளிக் கொணர்வதில் தீராத ஆர்வமும் முயற்சியும் கொண்ட திரு நா. முரளியின் (நாயகர்) நட்புக் கிடைத்தது. அவருடன் இணைந்து பல தகவல்களைச் சேகரித்தேன். இதில் சைவர்களின் முதன்மை கோயிலும், சோழ வேந்தர்களின் குல தெய்வ கோயிலுமான தில்லை நடராச பெருமான் கோயிலில் அன்று சோழ வேந்தர்களுக்கு 'திருமுடி' சூடும் பொழுது எவ்விதமான மரபுகள் கடைப்பிடிக்கப் பட்டனவோ அதே மரபுகள் சென்ற இருபதாம் நூற்றாண்டிலும் பித்தர்புரம் ஜமீன்தார்களுக்கு கடைப்பிடிக்கப்பட்டன என்பதை தெரிந்து நான் மிகவும் மகிழ்வுற்றேன். மேலும் தில்லை வாழ் அந்தணர்களுள் ஒருவரான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்

இந்திய மொழிப்புல முதன்மையர், தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் அ. ஆனந்த நடராசன் அவர்கள், தேவார சங்கீதபூஷணம் க.சி.து. நாராயணசாமி அவர்கள் எழுதிய நூலின் அணிந்துரையில் ''பித்தர்புரம் எனும் பிச்சாவரம் ஜமீன்தாரர்கள் சோழர்களின் தில்லைக் கோயில் மண்டகப்படியை மரபுரிமையுடன் ஏற்றுச் செய்து வருகின்றனர்'' என்று எழுதியுள்ளார். இதன் மூலம் பிச்சாவரம் ஜமீன்தாரர்கள் சோழ வேந்தர் வழிவந்தவர்களே என்ற வரலாற்று உண்மை புலப்பட்டது.

இதைத் தொடர்ந்து சோழ மன்னர்களின் வாரிசுகளான பிச்சாவரம் பாளையக்காரர்கள் பற்றி விரிவான நூலொன்றைக் கொண்டு வர வேண்டுமென்றும், அவர்களுடைய மறைந்திருக்கும் புகழை வெளியுலகிற்குப் பறைசாற்ற வேண்டுமென்றும், தற்போதைய மன்னரின் மரபினர்க்கு முடிசூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நானும் முரளியும் திட்டமிடலானோம்.

இதன்படி 2004-ம் ஆகஸ்ட் திங்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று. கடலூரைச் சேர்ந்த உறவினர் தேவநாதன் வழிகாட்டுதலில் சிதம்பரத்தில் உள்ள பிச்சாவரம் பாளையக்காரர் வீட்டுக்குச் சென்றோம்.

மூவேந்தர்களில் முதன்மையானவரும், கடல் கடந்து தென்கிழக்கு ஆசிய நாடுகள் வரை அரசாட்சி செய்தவரும், சைவ சமயத்தை அழிவிலிருந்து காக்க விலை மதிக்க முடியாத கோயில்களை எழுப்பியும், தமிழர்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாட்டை தரணிக்கு வெளிப்படுத்தி, சோழர் காலமே தமிழகத்தின் ஒரு பொற்காலம் என்று விளங்க செய்த அந்த சோழ வேந்தர் மரபின வாரிசுகள், சின்னஞ்சிறிய ஓட்டு வீட்டுக்குள் நடமாடுவதைப் பார்த்து திடுக்கிட்டோம். மன்னர் பரம்பரையில் வந்தவர்களின் இல்லம் மழைத்துளிகள் விளையாடும் மனையாக நிற்பதை கண்டு மனம் வெதும்பியது. வீட்டில் கனம் மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனாரும் அவரது பட்டத்தரசி திருமதி. சாந்தி தேவி மற்றும் பிள்ளைகளும் சூழ்ந்திருந்தனர்.

அவர்களது வறிய நிலை எங்களை வேதனைக்குள்ளாக்கியது. அக் குடும்பத்தாருடன் விரிவாக கலந்துரையாடி விட்டுச் சென்னை திரும்பினோம்.

பின்னர், 15.08.2004 அன்று சென்னை ஈக்காட்டுத்தாங்கல், கலைமகள் நகரில் உள்ள எமது இல்லத்தில் நான், எனது தந்தையார் கவிஞர் காவிரிநாடன், தொல்பொருள் துறையின் மேனாள் துணை இயக்குனர் திரு. மா. சந்திரமூர்த்தி மற்றும் முரளி ஆகியோர் கலந்துரை செய்தோம். இதில் ''ஒரு குழுவாக சிதம்பரம் சென்று, பிச்சாவரம் பாளையக்காரர்கள் பற்றி விரிவாக ஆய்வு செய்வது'' என்று முடிவாயிற்று.

பிச்சாவரம் பாளையக்காரர்களின் தற்போதைய வறிய நிலையைப் போக்க சிறிது காலத்திற்காவது அவர்களுக்கு ஏதேனும் பொருளாதார உதவி செய்வது என்றும் தீர்மானித்தோம்.

இதுபற்றி அடுத்தடுத்த நாட்களில் புலவர் திரு. முத்து எத்திராசன், தொல்பொருள் துறையின் மேனாள் இயக்குனர் திரு. நடன. காசிநாதன், புகழ்மிகும் ஓவியர் திரு. வீர. சந்தானம், மின்சாரத் துறை முன்னாள் பொறியாளர் திரு. வீரமுத்து மற்றும் திரு. அர்ஜுனன் ஆகியோரிடம் நானும் முரளியும் விரிவாக உரையாடினோம்.

நீண்ட ஆலோசனைகள் மற்றும் முன்னேற்பாடுகளுக்குப் பிறகு 04.09.2004 அன்று மதிப்பிற்குரியவர்களான திரு. நடன. காசிநாதன், புலவர் திரு. முத்து எத்திராசன், திரு. மா. சந்திரமூர்த்தி, நான் மற்றும் முரளி ஆகியோர் சிதம்பரம் சென்று சிதம்பரநாத சூரப்ப சோழனார் குடும்பத்தாருடன் கலந்துரையாடினோம். இக்காட்சிகளையும், சோழனார் வீட்டிலிருந்த புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களையும், உறவினர் அரியலூர் செந்தில் குமாரால் அனுப்பப்பட்ட நண்பர் திரு. மதன் வீடியோவில் பதிவு செய்தார்.

05.09.04 அன்று மன்னர் மற்றும் அவரது மனைவியுடன், ஆய்வுக் குழுவினர் கார் மூலம் பிச்சாவரத்தில் அரண்மனை இருந்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டோம். அச்சமயத்தில் சோழ மன்னரை அப்பகுதி மக்கள் இன்றும் 'ராஜா' என்றே அழைப்பது வியப்பை ஏற்படுத்தியது. பிச்சாவரத்தில் இருக்கும் 'குட்டியாண்டவர்' கோவிலை திரு. நடன. காசிநாதன், திரு. சந்திரமூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

பின்னர் நாகை மாவட்டம் செல்லப்பன்பேட்டை கிராமத்திற்குப் பயணமானோம். அங்கு சோழனாரின் கடைசித் தம்பியான ராஜகுமார் சூரப்ப சோழனார் மற்றும் அவரது தாயார் ராசாத்தி ஆயாள் ஆகியோரிடம் நீண்ட நேரம் உரையாடி பல்வேறு ஆவணங்களையும்

பெற்றுக் கொண்டோம். சிதம்பரத்தில் தங்கியிருந்த போது, சிதம்பரநாத சூரப்ப சோழனாரின் முடிசூட்டு விழாவை படமெடுத்த 'கெம்பு ஸ்டூடியோவை' அணுகினோம்.

திரு. முரளி இரண்டு நாட்கள் அந்த ஸ்டுடியோவிலேயே இருந்து, சிதம்பர நாதரின் முடிசூட்டு விழாவின் போது எடுத்த அரிய புகைப்படங்களைக் கண்டெடுத்தார்.

பனையளவு உதவி புரியாவிடினும் திணையளவு உதவியேனும் செய்யத் துணிந்து சோழர் குடும்பத்துக்கு மாதம்தோறும் ஒரு சிறு தொகையை நாங்கள் அளித்து வருகிறோம்.

மேலும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள பிச்சாவரம் பாளையக்காரர் தி. ஆண்டியப்ப சூரப்ப சோழனார், திருவண்ணா மலையில் 1943-ல் நடைபெற்ற வடஆர்க்காடு ஜில்லா வன்னிய குல ஷத்திரிய சங்க வெள்ளி விழாவில் ஆற்றிய உரை அடங்கிய சிறு நூலை வாலாஜாப்பேட்டை ஆசிரியர் திரு. வெங்கடேசன் அளித்துதவினார்.

மேற்கூறப் பெற்ற அனைவருக்கும், இந்த அரிய வரலாற்று நூலை வெளியிட எனக்கு ஒப்புதல் அளித்த தொல்லியல் துறை மேனாள் இயக்குனர் அறிஞர் திரு. நட.ன. காசிநாதனுக்கும் எனது நன்றிகள்...

குலப்பற்று கொண்ட உறவினர்களும், வரலாற்று ஆர்வலர்களும், தமிழ் மக்களும் இந்த நூலை வாங்கி ஆதரிப்பார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

- ஆறு. அண்ணல்

4/38, 2 ஆம் முதன்மைச் சாலை,
கலைமகள் நகர்,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 97
தொலைபேசி : 044 - 22328407.

பொருளடக்கம்

1. பிச்சாவரம் பாளையமும் கோயிற் புராணமும் 15
2. பிச்சாவரம் பாளையக்காரர் பற்றிய அடிப்படைச் சான்றுகள் 25
3. பிச்சாவரம் பாளையக்காரர்கள் 34
4. பிச்சாவரம் பாளையக்காரர்கள் சோழ வேந்தர் வழி வந்தவர் 67
5. பிச்சாவரம் பாளையக்காரர்களின் மண உறவு 71
6. பிச்சாவரம் பாளையக்காரர்கள் பற்றி அறிஞர்கள் கூற்று 75
7. பிச்சாவரம் ஜமீன் பற்றிய சில ஆவணங்கள் 79
8. பிச்சாவரம் ஜமீன் தாழும் நிலை 84

பிற்சேர்க்கை

I. உமாபதி சிவாச்சாரியார் எழுதிய கோயிற் புராணத்தில் வரும் திருவிழாச் சருக்கம் 94
II. பிச்சாவரம் பாளையக்காரர்களும் தோராய காலமும் 121
III. பிச்சாவரம் அரசர்களும் மணமுடித்த அரசிகளும் 122
IV. பிச்சாவரம் பாளையக்காரர்களின் ஆவணங்கள் 123
V. மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனாருக்கு தில்லை நடராஜர் கோயிலில் நடந்த முடிசூட்டு விழா காட்சிகள். 137
VI. களப் பணியாளர்கள் 141
VII. ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு 142
VIII. அண்ணல் வெளியீடு பதிப்பித்து வரும் நூல்கள் 150

முதல் பகுதி

பிச்சாவரம் பாளையமும் கோயிற் புராணமும்

பிச்சாவரம் அமைவு:

கடலூர் மாவட்டம், சிதம்பரத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரையை ஒட்டி அமைந்திருக்கும் ஒரு சிறு கிராமமான பிச்சாவரம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஒரு சிறு பாளையத்தின் தலைநகராக விளங்கியிருந்திருக்கிறது என்பது சில தெளிவான சான்றுகளால் புலனாகிறது. இவ்வூர் அக்காலத்தில் 'பித்தர்புரம்' என்று வழங்கி வந்திருக்கிறது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பிச்சாவரம்

'திருவாசகம் எனும் தேனை'ப் பாடிய மாணிக்கவாசகர் பித்தர்புரத்தில்தான் தவம் புரிந்தார் என்றும், அங்கிருந்து புறப்பட்டுத் தில்லைக்குச் சென்றுதான் இலங்கையிலிருந்து வந்த புத்தத் துறவிகளோடு வாதிட்டு வெற்றி பெற்றார் என்றும் தெரிகிறது.[1] அவர் வாழ்ந்த காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

அருள்மிகு குட்டியாண்டவர் கோயில்:

இவ்வூரின் மத்தியில் அமைந்துள்ள அருள்மிகு குட்டியாண்டவர் கோயிலின் கட்டட அமைப்புகளைக் கொண்டு பார்க்கையில் பிற்காலச் சோழனான விக்கிரம சோழன் காலம் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) தொட்டு இவ்வூர் செல்வாக்குடன் விளங்கியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இக்கோயிலின் கருவறையில் சகம் 1505-க்குச் சரியான கி.பி. 1583-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு காணப்படுகிறது.[2]



பிச்சாவரம் அருள்மிகு குட்டியாண்டவர் சுவாமியைத் தரிசித்து விட்டு மன்னர் வெளிவருதல்

பிச்சாவரம் அரண்மனை:

இவ்வூரில் பித்தர்புரம் பாளையக்காரர் கட்டி வாழ்ந்த அரண்மனை, இன்று முழுதும் அழிந்து மண்மேடிட்டு காணப் பெறுகிறது. ஊர் மக்களில் சில பெரியவர்கள் இந்த மேடான பகுதியில்தான் அரண்மனை மிகுந்த பொலிவுடன் காட்சி தந்தது என்று கூறுகிறார்கள். இவ்வரண்மனை 1980 முடிய நல்ல நிலையில் இருந்திருக்கிறது என்கின்றனர். பாளையக்காரரின் சொத்துக்களை ஏலம் எடுத்தவர்கள் அரண்மனையிலிருந்த நிலைகள் மற்றும் சன்னல்களை எடுத்து விற்பதற்காக அரண்மனைப் பகுதிகளை இடித்து விட்டனராம்.

பாளையக்காரர் பற்றிய ஆவணங்கள்:

இங்கு ஆட்சி செய்த பாளையக்காரர்கள் பற்றி அண்மைக்காலத்தில் சில செப்பேடுகள், ஒரு கல்வெட்டு, இலக்கியங்கள் ஆகியவை கிடைத்துள்ளன. இப்பாளையத்தின் வழிவந்த மகா-ரா-ரா.ஸ்ரீ ஆ.சிதம்பரநாத சூரப்ப சோழனாரையும், அவரது தாயார் மற்றும் குடும்பத்தினரையும் அண்மையில் நாங்கள் சந்தித்த போது சில செய்திகளை அவர்கள் மூலம் சேகரிக்க முடிந்தது.[3] மேலும்

அவர்களிடமிருந்து சில ஆவணங்களையும் பார்த்துக் குறிப்பு எடுத்துக் கொள்ள முடிந்தது.

முதல் நூல்:

இப்பாளையம் பற்றி விரிவாக எழுத வேண்டுமென்றால் இவர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நிகழ்ந்த கடிதப் பரிமாற்றங்கள் மற்றும் மாவட்ட விவர நூல் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இவர்களுக்கு உறவினர்களாக இருந்த அரியலூர், உடையார்பாளையம், முகாசா பரூர், வடகரல், கடலங்குடி மற்றும் மயிலாடுதுறை பாளையக்காரர்களின் ஆவணங்களையும் பார்த்தல் வேண்டும். மேலும் கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப் பெற்ற சிற்றிலக்கியங்களையும் படித்தல் வேண்டும். அதற்குக் காலம் அதிகமாக ஆகும். ஆதலால் தற்போது கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு முதலில் ஒரு சிறு நூல் வெளியிடுதல் நன்மையாக இருக்கும் என்ற நோக்கில் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

உமாபதி சிவாச்சாரியார் கூற்று:

இப்பாளையத்தின் தொடக்கம் பற்றி தில்லைத் தீட்சதர்களில் ஒருவராக கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் தாம் எழுதியுள்ள "கோயிற் புராணம்" என்னும் நூலில் இரணியவன்மச் சருக்கம் மற்றும் திருவிழாச் சருக்கங்களில் கீழ்வருமாறு கூறுகிறார்.[4]

இரணியவன்மச் சுருக்கம்:

"விராடதேசம், அயோத்தி, அஸ்தினாபுரம், கூர்ச்சரம், நிடதநாடு முதலான நாடுகளைத் தன்னகத்தே கொண்ட கௌட தேசத்திலிருந்து சீருடனும் சிறப்புடனும் ஆண்ட மன்னன் மனு. இம்மனு மரபில் ஒருவர் பின் ஒருவராகத் தனித்தனியே எழுபத்தொரு சதுர்யுகம் அரசாட்சி செய்து, நான்கு மனுக்களுக்குப் பிறகு ஐந்தாவது மனுச்சக்கரவர்த்திக்கு மனைவிகள் இருவர் இருந்தனர். அவர்களுள் மூத்த மனைவிக்கு, உடம்பு முழுவதும் சிங்கம் போல வெண்ணிறமுடைய சிங்கவன்மன் என்னும் ஒரு மகனும், இளைய மனைவிக்கு அழகிய இரு குமாரர்களும் பிறந்தார்கள். அவர்கள் வேதவன்மன், சுவேதவன்மன் எனப் பெயர் சூட்டப்பட்டார்கள்.

சிங்கவன்மனார் தாம் உடற் குற்றமுடைமையால் தம் தந்தையாராகிய மனுச் சக்கரவர்த்தியினிடம் ''நான் இராச்சியம் ஆளத் தகுதியற்றவன்; தம்பிமார்களில் மூத்த பிள்ளைக்கு முடிசூட்டுங்கள்; யான் தேச யாத்திரை சென்று பல தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து இறைவனை வணங்கித் தரிசித்து வழிபட வேண்டுமென உறுதி செய்துக் கொண்டு உள்ளேன்; உத்தரவு கொடுங்கள்'' என்று வேண்டி வணங்கி நின்றார். மனுச்சக்கரவர்த்தியும் தம் மைந்தனை ஆசீர்வதித்து உத்தரவு கொடுத்து தென் தேச ஸ்தல யாத்திரைக்கு வழியனுப்பி வைத்தார். அவர் பல தலங்களைத் தரிசித்துவிட்டு தில்லைவனத்தை அடைந்தார்.

வியாக்ரபாத முனிவர்:

ஒரு குளக்கரையில் புலி போன்ற கால்களையுடைய முனிவர் ஒருவர் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கக் கண்டு சிங்கவன்மனார் அவர்முன் சென்று இருகரம் கூப்பி நின்றார். முனிவர் தமது சந்நிதியிலே நின்ற சிங்கவன்மனாருடைய வரலாறனைத்தையும் தம் யோக சக்தியினால் அறிந்து அகம் மிக மகிழ்ந்து ''சிங்கவன்மனே!'' என்று விளித்தார். உடனே சிங்கவன்மனார் உரோமஞ்சிலிர்ப்பக் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக நிலத்திடை வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றார். வியாக்கிரபாதர் ''உன் வரலாறு என்ன?'' என்று வினவியருள, ''முனிவர் பெருமானே! அடியேன் கௌட தேச அரசனாகிய மனுச்சக்ரவர்த்தி அவர்களின் குமாரன்; அடியேனுக்குத் தம்பிகள் இருவர். அடியேன் உமது திருவருளினால் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்ய வந்தேன்'' என்று கூறிப் பணிந்து நின்றார். அது கேட்ட முனிவர் அவர்கள், ''உன் தந்தையார் மிக முதிர்ந்த நிலையில் உள்ளார். இனி அரசாளும் பேறு உன்னால்தான் ஆக வேண்டும். ஆகையால், நீ தவஞ்செய்ய விரும்புவதும், எண்ணுவதும் தகாத செயல்'' என்று அருளிச் செய்தார். சிங்கவன்மனார், ''அடியேன் உடற்குறைபாட்டினால் அரசாளத் தகுதியுடையவனல்லன், தந்தைக்குப் பின்னர் அடியேனின் தம்பிமார்கள் அரசாளத் தகுதியுடையோர்கள். அடியேன் முத்தியின்பம் அடையும் பொருட்டு அருள் செய்ய வேண்டுகின்றேன்'' என்று விண்ணப்பஞ் செய்தார். முனிவர், இவன்தன் உடற்குற்றம் நீங்கினால் அரசாளத் தகுதியுடையவன் ஆவான்; நடராஜப் பெருமானின் தனிப்பெருங் கருணையிருக்குமாயின் தில்லை ஆலயத் திருப்பணிக்கு இவனே ஆளாகக் கூடியவன் எனத் திருவுளங்கொண்டு,

''சிங்கவன்மனே! யாம் வரும் வரையில் இங்கிரு'' என இருக்கச் செய்து; பின்னர், பதஞ்சலி முனிவரிடம் சென்று சிங்கவன்மனாருடைய வரலாற்றை அவருக்குச் சொல்லியருளினார். முனிவர்கள் இருவரும் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப் பெருமானைக் காணச் சென்று நிருத்த தரிசனக்காலம் வரை இருவரும் வணங்கி, ''எம்பெருமானே! கௌடதேச மனுச்சக்ரவர்த்தி குமாரன் இங்கே வந்துள்ளான். அவனுக்குள்ள உடற்குற்றத்தை நீக்கி அவனை அடிமை கொண்டருள்க'' என்று விண்ணப்பஞ்செய்து வேண்டினர். ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவுள்ளம் மகிழ்ந்து முனிவீர்காள்! நீங்கள் சிங்கவன்மனை சிவகங்கையில் ஸ்நானம் செய்வித்து இங்கே அழைத்து வாருங்கள்'' என்று பணித்தருளினார்.

சிவகங்கையில் நீராடல்:

முனிவர்கள் இருவரும் விரைந்து சென்று சிங்கவன்மனாரை சிவகங்கையான பொற்றாமரை வாவியில் ஸ்நானம் செய்வித்தார்கள். அவ்வளவில் சிங்கவன்மனாரின் முன் வடிவம் நீங்கி பொன்மயமான இராஜவடிவம் பெற்றார். வியாக்கிரபாத முனிவர் சிங்கவன்மனாருக்கு 'திருஐந்தெழுத்து' மந்திரத்தை உபதேசித்தருளினார். பின் முனிவர்கள் இருவரும் அவரை அழைத்துக் கொண்டு சென்று கனகசபையிலிருந்த சிற்றம்பலவனை நமஸ்கரிக்கச் செய்தனர். ஆனந்த நடராஜப் பெருமான் அச்சிங்கவன்மனாருக்குத் தம் நிருத்த தரிசனத்தைக் காட்டியருளினார். அவ்வளவில் சிங்கவன்மனார் உடல் நடுநடுங்கி, நெஞ்சம் நெக்குருகி, இரு கண்களிலிருந்தும் ஆனந்தக்கண்ணீர் அருவியெனப் பெருகி, உடலெங்கும் உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தப் பரவசமாகி, பூமியில் வீழ்ந்து வணங்கி நமஸ்கரித்து துதி செய்து எழுந்து நின்றார். சிற்சபேசர் திருவுள்ளம் மகிழ்ந்து, எல்லாரும் கேட்குமாறு ''இரணியவன்மனே! நீர் எமக்கும் எம்போன்ற வியாக்கிரபாத முனிவருக்கும், பதஞ்சலி முனிவருக்கும், தில்லை மூவாயிரம் அந்தணர்களுக்கும் தொண்டு செய்வாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மனுச்சக்கரவர்த்தி சுவர்க்கம் அடைதல்:

இவ்வாறிருக்கின்ற காலத்தில் கௌட தேசத்து மனுச்சக்கரவர்த்தி, தமது இராச்சியத்தைத் தம்முடைய மூத்த குமாரனாகிய சிங்கவன்மனுக்கு முடிசூட்டி வையுங்கள் என்று தம் குலகுருவான வசிட்டமாமுனிவருக்கு விண்ணப்பம் செய்துவிட்டுத் தாம் அடைய வேண்டிய சுவர்க்கம்

அடைந்துவிட்டார். வசிட்டமாமுனிவரும் அப்படியே ஆகட்டும் என்று கூறியருளினார். அதன்பிறகு மனுவின் இரு குமாரர்களையும் கொண்டு தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகள் அனைத்தையும் செய்விக்கச் செய்தார். வேதவன்மன், சுவேதவன்மன் ஆகிய இருவரும் வசிட்ட மாமுனிவரிடம் வேண்டுகோள் விடுக்க, அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கிய முனிவர் தென்திசை நோக்கித் தில்லைக்கு வந்தார்.

வசிட்டமாமுனிவர், வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர் போன்ற முனிவர்களுடன் கலந்தாலோசனை செய்தபொழுது, வசிட்டர் ''கௌட தேசத்தைச் சிங்கவன்மனான இரணியவன்மன் அரசாள வேண்டுமென்பது மனுச்சக்கரவர்த்தியின் இறுதி விருப்பம். ஆகவே, அவனை அழைத்துச் செல்ல வந்துள்ளேன்'' எனக் கூறினார். முனிவர்கள் பலரும் இரணயவன்மனாரை அழைத்து, ''உன் கருத்து யாது?'' என வினவினர். இரணியவன்மனார் வியாக்கிரபாதர் திருவடி பணிந்து, ''எம் பெருமானே! அடியேன் சிற்றம்பலநாதருக்கும், தங்களைப் போன்ற மெய்யடியார்களுக்கும் செய்யும் வழிபாட்டையேயன்றி பிறிதொன்றனையும் விரும்பேன்'' என்றார். வியாக்கிரபாத முனிவர், ''உன் கருத்து இதுவாயின் நீ வசிட்டமாமுனிவருடன் சென்று இராசக்கிரீடம், இரத்தினம், பொன் போன்றவற்றையும், யானை, குதிரை, தேர், காலாள் போன்ற நால்வகைப் படைகளையும், தம்பிகள், அமைச்சர் பெருமக்கள் போன்றவர்களையும் அழைத்துக் கொண்டு வரும்பொழுது, இங்கு எம்முடன் நிருத்த தரிசனம் கண்டு கொண்டிருந்த அந்தணர் மூவாயிரவரும் கங்கைக் கரையில் உள்ள அந்தர்வேதியில் இருக்கின்றார்கள், அவர்களையும் அழைத்துக் கொண்டு வருவாயாக'' என்று பணித்தருளினார்.

இரண்யவன்மன் மீண்டும் கௌடதேசம் செல்லல்:

இரணியவன்மனார் ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமானை வணங்கி அவர் தம் திருவருள் பெற்று, பின்பு பதஞ்சலி முனிவர் போன்ற முனிவர்களையும், வியாக்கிரபாத முனிவரவர்களையும், அவர்தம் தர்ம பத்தினியாகிய தாயார்களையும் வணங்கி நல்லாசி பெற்று, வசிட்டமாமுனிவருடன் கௌடதேசம் சென்றார். நகர எல்லையிலேயே நகர மக்களும், அமைச்சர் பெருமக்களும், தம்பிமார்களும் எதிர் சென்று வணங்கி பெருமகிழ்ச்சி கொண்டு அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

தில்லைக்குத் திரும்புதல்:

சில நாட்கள் கழித்து இரணியவன்மனார், தம்பிகள், வசிட்டமா முனிவர், அமைச்சர்கள் முதலானவர்களுடனும், இராசகிரீடம், பொன் முதலான பொருள்களுடனும், நால்வகைப் படைகளுடனும் தில்லைக்குப் புறப்படுமுன் அன்னையின் அடி பணிந்து நல்லாசியும் பெற்றார். அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் அந்தர்வேதியிலிருந்த அந்தணர்கள் மூவாயிரவரையும் வணங்கி அவர்களைத் தேரில் ஏற்றிக்கொண்டு தில்லைவனத்தின் வடமேற்குத் திசையில் தேரை நிறுத்தி விட்டு, இரணியவன்மனார் தாம் விரைந்து சென்று வியாக்கிரபாத முனிவரையும் பதஞ்சலி முனிவரையும் வணங்கினார். அப்பொழுது தில்லை மூவாயிரவரும் வர அவர்களை இரணியவன்மனார் எண்ணிக் காட்டுகையில் மூவாயிரவர்களில் ஒருவர் குறைய காணாது திகைத்து நின்றார். அப்பொழுது அனைவரும் கேட்கும்படியாகச் சிவபெருமான் ''இவ்வந்தணர் எல்லோரும் நம்மைப் போல் ஒப்பாவார்'' என்றருளினார். அது கேட்டு அனைவரும் ஒருவரையொருவர் வணங்கிக் கனகசபையில் சூழ நின்றனர்.

தில்லை நடராசர் கோயில் திருப்பணி:

பின்பு இரண்யவன்மனார், தில்லைக்கும், தில்லைச் சிற்றம்பலவனின் தென்கிழக்கில் ஸ்ரீ சற்குணாம்பிகா (நல்லநாயகி) சமேத ஸ்ரீ பாசுபதேஸ்வரர் (ஈஸ்வரன்) எழுந்தருளி வீற்றிருக்கின்ற திவ்விய க்ஷேத்திரமான திருவேட்களத்திற்கும் மத்தியில் உள்ள பவித்திர மாணிக்க நல்லூரில் (கொற்றவன்குடி) புதிய அரண்மனையொன்று அமைத்து அவ்வரண்மனையிலிருந்தே நல்லாட்சியை நலமுடன் சீரும் சிறப்புமாக முறை செய்து காப்பாற்றி வந்தார். அரசனுக்குக் கொற்றவன் என்ற பெயர் உண்டாதலால் ''கொற்றவன்குடி'' என்ற பெயர் அவ்வூருக்கு வழங்கி வருகின்றது. இங்கிருந்தே இரணியவன்மனார் தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குச் சிவ ஆகம விதிப்படி ஆலயம் அமைத்தல், சிவகங்கையைச் சீர்படுத்தல், திருச்சுற்று மாளிகை எழுப்புதல், இராஜகோபுரம் கட்டுதல், ஸ்ரீ நடராஜர் எழுந்தருளியுள்ள சிற்சபை, கனகசபை, நடன சபை, தேவ சபை, இராஜசபை ஆகிய ஐந்து சபைகள் அமைத்தல், தேரோடும் வீதி அமைத்தல், நாள் வழிபாடான ஆறுகால பூஜை, சிறப்பு வழிபாடுகள் செய்தல் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

இவ்வாறிருக்கும் நாளில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளினால் வியாக்கிரபாத முனிவர் ''இரணியவன்மன் இப்பூமியை ஆளக்கடவன்; இவன் தம்பிமார்கள் கௌட தேசத்தை ஆளக்கடவர்'' என்றருளினார். அது கேட்ட பதஞ்சலி, வசிட்டர், உபமன்யு, தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் மகிழ்ந்து ''அப்படியே ஆகுக'' என்றனர்.

இரண்யவன்மனுக்குச் சோழர் முடிசூட்டல்:

தில்லைக் காட்டைத் திருத்தித் தேவாலயமாகப் பிரதிஷ்டை செய்யப் பெற்ற **தில்லை ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியில், ஸ்ரீ பஞ்சாக்ஷரப்படியின் மீது இரணியவன் மனாருக்கு வசிட்டர், பதஞ்சலி, உபமன்யு, தில்லை மூவாயிரவந் தணர்கள் திருமுன்பு, பகல் தீவர்த்தியேற்றி, புலிக்கொடி கொடுத்து, ஆத்திமாலை அணிவித்து, சோழக் குலமகள் ஒருத்தியைத் தேர்ந் தெடுத்து வியாக்கிரபாத முனிவர், திருமணம் செய்வித்து, முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்து சோழ மன்னனாக விளங்கச் செய்தார்.**

இரணியவன்மனாரின் தம்பிமார்கள், வசிட்டமா முனிவருடன் நால்வகைச் சேனையுடனும் கௌடதேசத்தை அடைந்து, அங்கு வசிட்டமாமுனிவர், மூத்தவனான வேதவன்மனுக்கு வேத விதிப்படி முடிசூட்டி அந்நாட்டை ஆட்சி புரிய அருளாசி வழங்கினார்.

இரண்யவன்மன் பல்லவர் வழித்தோன்றல்:

கௌட தேசத்தை ஆண்டு வந்த மனு வழியில் வந்தவராகக் கோயிற் புராணத்தில் கூறப்படும் இரணியவன்மன், பல்லவர் வழித் தோன்றலாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முடிய தமிழகத்தின் வட பகுதியான தொண்டை மண்டலத்தைப் பல்லவர் ஆட்சி செய்தனர். இவர்களில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சிம்மவர்மனுக்கு சிம்மவிஷ்ணு என்றும், பீமவர்மன் என்றும் இரு புதல்வர்கள் இருந்தனர். அதில் சிம்மவிஷ்ணு பட்டம் ஏற்று, பின்னர் அவரது வழி வந்தோர் தொடர்ந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் முடிய ஆட்சி புரிந்திருக்கின்றனர். இரண்டாவது மகனான பீமவர்மன் எங்கிருந்தான் என்பது சரியாக விளங்கவில்லை. இவன் வழியில் இரணியவர்மன் என்று ஒருவன் இருந்திருக்கிறான்.

பீமவர்மனின் வழித்தோன்றல்:

சிம்மவிஷ்ணு வழியில் வந்த இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி. 728-731) இறந்த பிறகு நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அடுத்து சிம்மாசனம் ஏறுவதற்கு தகுதியான ஒருவர் இவ்வழியில் இல்லாத காரணத்தால் பீமவர்மன் பரம்பரையைச் சார்ந்த காடவகுல ஹிரண்யவர்மனைச் சந்தித்து, அவர் மகன் பல்லவ அரசின் பட்டமேற்க வேண்டுமென்று அரசு அதிகாரிகள் வேண்ட, அவ்விரண்யவர்மனும் அதற்குடன்பட்டு தம் மகனை அனுப்பி வைத்ததாகவும், அவனே நந்திவர்மன் என்று முடிசூட்டப் பெற்றான் என்றும் காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டி லிருந்து அறிய முடிகிறது.[5] மேற்கூறப்பெற்ற ஹிரண்யவர்மனே கோயிற்புராணத்தில் கூறப்படும் ஹிரண்யவன்மனாக இருக்கலாம் என்று கருதுவது ஏற்புடையத் தக்கதாக உள்ளது.

சோழ அரசியை மணத்தல்:

ஹிரண்யவர்மன் காலத்தில் சோழ வம்சம் தாழ்ந்த நிலையில் இருந்திருக்கிறது. அப்பொழுது சிற்றரசர்களாக இருந்த சோழ அரசர்களில் ஒருவரது குமாரத்தியை இரண்யவர்மன் மணம் புரிந்திருக்கலாம். அவர் சோழ நாட்டுக்கும் அதிபதியாகி விட்டதால் அவருக்குத் தில்லை நடராசர் முன்னிலையில் 'பஞ்சாக்கரப்படி' மீது அமர வைத்து முடிசூட்டி, 'சோழனார்' என்ற பட்டத்தை அளித்திருக்கலாம்.

முடிசூட்டல் ஓவியங்கள்:

சிம்மவர்மன், நடராசர் கோயில் சிவகங்கைக் குளத்தில் மூழ்கியதும் வெள்ளை உடம்பு பொன்னிறமாக மாறிய காரணத்தால் 'இரணியவன்மன்' என்று பெயர் பெற்ற நிகழ்ச்சியும், பஞ்சாக்கரப்படியில் அமர வைத்து முடிசூட்டப் பெற்று, புலிக்கொடி, ஆத்திமாலை ஆகியவை வழங்கப் பெற்ற காட்சியும் ஓவியங்களாகப் பொன்னம்பலத்தினை யொட்டிய திருச்சுற்றின் விதானத்திலும், ஆயிரக்கால் மண்டபத்தின் உள்மண்டபக் கூரைப் பக்கச் சுவர்களிலும் தீட்டப் பெற்றிருப்பதை இன்றும் காண முடிகிறது.[6] பொன்னம்பலத்தை யொட்டிய திருச்சுற்றின் ஓவியம் ஒரு நூற்றாண்டு பழமையானதாகவும், ஆயிரக்கால் மண்டப ஓவியம் அதனினும் பிற்பட்டதாகவும்

தோன்றுகின்றன. மேலும் பொன்னம்பலத்தின் திறந்த வெளிச்சுற்றின் கீழ்த்திசை வாயிலின் வலப்பக்கச் சுவரில் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர், உபமன்யு முனிவர் மற்றும் இரண்யவன்மன் ஆகியோர் உருவங்கள் சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன.[7]

கோயில் சாவி:

இரண்யவன்மச் சக்ரவர்த்தியின் வம்சாவழி தான் வாழையடி வாழையாக வருகின்ற பித்தர்புரம் அரண்மனை சக்ரவர்த்தி சோழர்கள் என்று கருத முடிகிறது. ஏனெனில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய, நடராசர் கோயிலில் அர்த்தசாமம் முடிந்தபின் அக்கோவில் சாவி நாட்டுப் பிள்ளையால் பிச்சாவரத்திலிருந்த ஜமீன் வீட்டில் கொடுக்கப்பட்டு, மறுநாள் அதிகாலை திரும்பவும் அங்கிருந்து கோயிலுக்குக் கொண்டு செல்லப் பெற்றது என்று கூறப்படுவதாலாகும்.[8]

பித்தர்புரம் பாளையக்காரர்களின் வரலாற்றை இனி உரிய சான்றுகளின் அடிப்படையில் காண்போம்.



பிச்சாவரம் அரண்மனையின் இடிபாடுற்ற பகுதி

இரண்டாம் பகுதி

பிச்சாவரம் பாளையக்காரர் பற்றிய அடிப்படைச் சான்றுகள்

காஞ்சி ஜமீன்:

காஞ்சிபுரம் (பின்பு உடையார்பாளையம்) ஜமீன் பள்ளி கொண்ட ரங்கப்ப உடையார், விஜயநகர வேந்தர் வீர நரசிம்ம ராயர் (கி.பி. 1505-1509) ஆட்சி புரிந்த காலத்தில், செஞ்சிக்கு அதிபதியான உதயகிரி ராமபத்திர நாயக்கருக்கு உதவியாக இருக்கும்படி ஆணையிடப்பட்டார்.

அவர் சிதம்பரத்துக்கு அருகிலமைந்துள்ள புவனகிரிக்குப் பக்கத்தில் அரசகுடி என்னுமிடத்தில் வாழ்ந்து வருகையில், தமக்குப் புதிதாக அளிக்கப்பெற்ற பகுதியில் இருந்த 'திட்டக்குடி, புவனகிரி, விருத்தாசலம், மன்னார்குடி, சிதம்பரம்' ஆகிய இடங்களை ஆண்டு வந்த சிறு பாளையக்காரர்களை அடக்கி வெற்றி பெற்றார் என்று வரலாறு கூறுகிறது.[9] அவ்வாறு சிதம்பரத்தில் இருந்த சிறு பாளையக்காரர் பிச்சாவரம் ஜமீனாகத்தான் இருக்கும்.

பள்ளிகொண்ட ரங்கப்ப உடையாரின் மகன் பெரிய நல்லப்ப காலாட்கள் தோழ உடையார் புவனகிரித் தெருவில், சற்றும் எதிர்பாராத நிலையில் ஒரு பாளையக்காரரால் சாகடிக்கப்பட்டிருக்கிறார். இப்பாளையக்காரர் பிச்சாவரம் பாளையக்காரராகத்தான் இருத்தல் கூடும்.

சிறுபாளையங்களில் ஒன்றாகப் பிச்சாவரம்:

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கல்யாண ரங்கப்ப உடையாரின் மகனான நல்லப்ப உடையார் காலத்தில் அரசு காவல் பணமாகத் திட்டகுடி, விருத்தாசலம் புவனகிரி, சிதம்பரம், மன்னார்குடி ஆகிய இடங்களில் இருந்த சிறுபாளையக்காரர்கள் மூலம் 6000 கெட்டிப்

பொன் வருவாய் வந்தது என்று உடையார்பாளையம் வரலாறு தெரிவிக்கிறது.[10] அவ்வாறெனில் சிதம்பரம் பகுதியை ஆட்சிபுரிந்த பித்தர்புரம் பாளையக்காரரிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணரலாம்.

கி.பி.18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரங்கப்ப உடையாரின் மகனான யுவரங்கப்ப உடையாரின் காலத்திலும் திட்டக்குடி, விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய இடங்களிலிருந்து அரசு காவல் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.[11] கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும் பித்தர்புரம் ஜமீன் இருந்தது என்பது 'சிதம்பரம்' என்று கூறுவதால் உறுதியாகிறது.

'திருக்கைவள'த்தில் பிச்சாவரம் சோழர்:

கூடல் மாநகர் இருவாட்சிப் புலவரால் பாடப்பெற்ற ''திருக்கை வளம்'' என்னும் நூலில் ''விட்டலராய சோழன்'' மீது 'சந்தமாலை' பாடிய புலவருக்கு மரகதக்கங்கணம் கொடை அளிக்கப் பெற்றது அந்நூலின் 73-ம் பாடலில் கூறப்பட்டுள்ளது.[12] பாடல் கீழ்க்காணுமாறு:

''**விட்டலராயச் சோழன்** மீதுரைத்த வரிய சந்தமாலைக்குப்

பச்சை மணிக் கங்கணம் பாலித்திடுங்கை'' என்பதாக.

கல்வெட்டில் விட்டலேசுர சோழ கோனார்:

இந்நூல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப் பெற்றிருக்கிறது. அவ்வாறெனில் மேற்கூறப் பெற்றுள்ள மன்னர் அதற்கு முன்பு இருந்திருத்தல் வேண்டும். இம்மன்னர் பித்தர்புரம் பாளையக்காரர்தான் என்பது அவ்வூரில் உள்ள அருள்மிகு குட்டியாண்டவர் கோயில் கருவறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டால் புலனாகிறது. அக்கல்வெட்டில் **'விட்டலேசுர சோழ கோனார்'** என்று ஒரு மன்னர் குறிக்கப்படுகிறார். அவர் மேற்குறிப் பிட்டுள்ள விட்டலராய சோழனாகத்தான் இருக்கும். இக்கல்வெட்டு சக ஆண்டு 1505-ல் (கி.பி. 1583) வெட்டப்பட்டிருக்கிறது. கல்வெட்டின் வாசகம் கீழே தரப்பட்டுள்ளது.

கல்வெட்டு வாசகம்:

1. சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம்
2. 1505 மேல் செல்லா நின்ற

3. சுபானு வருஷம் ஆவணி மாதம் 11-ம் தேதி
4. ஸ்வாமி சிதம்பரரேஸ்வரனுக்கு
5. பெரம்மய பிள்ளை கட்டளைக்கு
6. **விட்டலேசுர சோழ கோனார் ம**
7. னுழன்மார்கள் முன்னிலையாக
8. காளக்க ஆண்டார் பயிர் இட்டதாய
9. சோழகோனார் பிள்ளை கட்டளை
10. விட்ட பிடாரி கோயிலுக்கு ப .
11. ங்காட்டுக்கு தெற்கு கூத்தாடி
12. ஆண்டார் கொல்லைக்கு வடக்கு
13. பாளைமான் ஆற்றுக்கு கிழக்கு வாழ்
14. விச்சார் கொல்லைக்கு மேற்கு நான்
15. கெல்லைக்கு உள்பட்ட கொல்லை
16. ஒன்றில் உள்ள பதாத்தம் சகலமும்
17. பிள்ளை கட்டளைக்கு நடக்க கட்டளை
18. இட்டு நிலத்துக்கு திருக்கோயிலி
19. லே விலை கொடுத்து தண்டே
20. சுரப் பட்டயம் வாங்கின படியி
21. னாலே இந்தப் படியிலே சந்த்
22. .....

கி.பி. 1583-ல் சிதம்ப்ரேஸ்வரனுக்கு, (தில்லை நடராசருக்கு) பித்தர்புரம் ஜமீன் விட்டலேசுர சோழகோனார் வம்சாவழியினர் முன்னிலையில், பெரம்மயபிள்ளை கட்டளை ஒன்றை ஏற்படுத்தி, சோழகோன் பிள்ளை நிலக்கொடை அளித்ததை மேற்காணும் கல்வெட்டு கூறுகிறது.



பிச்சாவரம் குட்டியாண்டவர் கோயிலிலுள்ள கல்வெட்டு

ஆதலால் விட்டல ராயச் சோழன், கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்கு முன்பாகவே பிச்சாவரம் ஜமீன்தாராக இருந்து, சிதம்பரம் பகுதியை ஆட்சி செய்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

பிச்சாவரம் ஜமீன் பற்றிய செப்புப் பட்டயங்கள்:

பிச்சாவரம் ஜமீன்தார் பற்றி சில செப்புப் பட்டயங்களும் குறிப்பிடுகின்றன. குறிப்பாகச் சேலம்[13] மற்றும் வைத்தீசுவரன்[14] கோயில் செப்புப் பட்டயங்களில் **'தொண்டை மண்டல சோழகனார்'** என்று பிச்சாவரம் ஜமீன்தாரர் குறிக்கப்படுகிறார். இப்பட்டையங்களின் காலம் கி.பி. 1595 ஆகும். இப்பட்டயங்கள் நாகப்பட்டினம் மாவட்டம் வைத்தீசுவரன் கோயிலில் வன்னியர்களுக்கென ஒரு மடம் கட்டப் பெற்றதைத் தெரிவிக்கின்றன. 'தொண்டை மண்டல சோழனார்' என்பதால் தொண்டை நாட்டை ஆட்சி புரிந்த சோழகனார் என்று பொருள் கொள்ளலாம்.

முத்துத் தாண்டவர் கீர்த்தனை:

கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நாகை மாவட்டம், சீர்காழியில் பிறந்தவர் முத்துத் தாண்டவர். இவர் தில்லை நடராசர் மீது மிகுந்த பக்தி கொண்டவர். இவர் ஒரு நாள் தில்லைக்குப் புறப்பட்டு வரும் வழியில் கொள்ளிடம் நதி பெருக்கெடுத்து ஓடியது. அதைக் கண்டு ''இன்று சபாநாதரைத் தரிசிக்க முடியாமல் இருக்கிறதே'' என்று

வருந்தினார். கொள்ளிடத்தின் தென் கரையில் நின்றுகொண்டு ''காணாமல் வீணே காலம் கழித்தோமே'' என்ற கீர்த்தனையை மனம் உருகிப் பாடினார்.

அக்கீர்த்தனையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

''சேரன், சோழன், பாண்டியன், இரணியவர்மன் கோபுரமும்,
சூரவீரப்பபூபன் செய்த திருமதில்களும்
பாருலகம் போற்றுகின்ற பஞ்சாட்சரப் படிகளும்
ஆரணங்கள் சூழ்ந்த திரு ஆயிரக்கால் மண்டபமும்
காணாமல் வீணே காலம் கழித்தோமே''[15]

சூரவீரப்ப பூபன்:

மேற்காணும் பாடலில் சேரன், சோழன், பாண்டியன், ஆகியோர் தில்லை நடராசர் ஆலயத்தில் கோபுரங்கள் எழுப்பியதும், பித்தர்புரம் பாளையக்கார .மன்னன் (சூரவீரப்பபூபன்) திருச்சுற்று மதில்கள் அமைத்ததும், தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் பித்தர்புர மன்னர்கள் பஞ்சாட்சரப் படிமீது அமர்ந்து சங்காபிஷேகமும், பட்டாபிஷேகமும் செய்து கொள்வதும், பின்பு ஆயிரக் கால் மண்டபத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்துஅறக்கொடைகள் புரிவதும் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளன. **'சூர வீரப்ப'** என்ற சொல்தான் பின்னாளில் **'சூரப்ப'** என்று மருவி வழங்கியிருக்கிறது போலும். ஆதலால்தான் பித்தர்புரம் பாளையக்காரர்கள் 'சூரப்ப சோழனார்' என்று கூறிக் கொண்டனர் என்று உணர முடிகிறது.

செப்புப் பட்டயங்கள் கூற்று:

மேற்காணும் அனைத்துத் திருப்பணிகளையுமே இரணியவன்மன் தான் செய்தார் என்று கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு செப்புப் பட்டயங்கள் கூறுகின்றன. இரண்டு செப்புப் பட்டயங்களும் சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டையில் இருந்து கி.பி. 1747-ல் வெளியிடப்பட்டுள்ளன.

பரங்கிப்பேட்டைச் செப்பேடு-1

3. ''சிதம்பர ஸ்தலத்தில் அகிலாண்டகோடி பிரம்மாண்ட

நாயகராகிய சபாபதிக்கு

4. இரண்ணிய வற்ம மகாராசா நாளையிலே செயித
திருப்பணியள் சா
5. சுவதமா யிருக்கத் தக்கதாக ஆயிரக்கால் மண்டபம்
னாலு கோபு
6. ரம் பஞ்சாஷ்சரமதிள்'' [16]

பரங்கிப்பேட்டைச் செப்பேடு - 2

2. ''..... சிதம்பர ஸ்தலத்தி
3. ல் அகிலாண்டகோடி பிரம்மாண்டனாயகராகிய சபாபதிக்கு
யிரண்ணியவற்ம மகாராசா
4. னாளையிலே செயித திருப்பணியள் சாசுவதமாயிருக்கத்
தக்கதாக ஆயிரக்கால் மண்டபம் னா
5. லுகோபுரம் பஞ்சாஷ்சரமதில் யிதுமுதலாகிய திருப்பணி
களெல்லாம்'' [17]

இரணியவன்மனின் வழிவந்த பித்தர்புரப் பாளையக்காரர்கள் செய்தத் திருப்பணிகளையும் இரணியவன்மனே செய்துள்ளான் என்று பிற்காலத்தோர் கருதியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

வன்னியர் மடங்கள்:

புதுச்சேரிக்கடுத்துள்ள வில்லவ நல்லூர் மடத்தைச் சேர்ந்ததும், கி.பி. 1641-ல் எழுதப் பெற்றதுமான செப்பேடு ''சிதம்பரம் மழவராயர் பண்டாரத்தார்'' என்று பிச்சாவரம் பாளையக்காரர்களைக் குறிப்பிடுகிறது.[18] இப்பட்டயம் இப்பகுதி வன்னியர்கள், வைத்தீசுவரன் கோயிலில் அமைக்கப் பெற்றது போன்ற ஒரு மடத்தை வில்லவநல்லூரில் ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.

தேரோட்டத்தில் தகராறு:

சேலம் மாவட்டம், மல்லிகுந்தம் இராமகவுண்டன் என்பாரிடம் உள்ள செப்புப் பட்டயம் பிச்சாவரம் மன்னரை ''பிச்சிவரத்து பண்டாரத்தார்'' என்று கூறுகிறது.[19] இச் செப்புப் பட்டயத்தின் காலம் சகாப்தம் 1802 ஆகவும், கி.பி. 1880 ஆகவும் இருக்கலாம். இப்பட்டயத்தில்

காஞ்சிபுரத்தில் உள்ள காமாட்சியம்மனுக்குத் தேர்த் திருவிழா நடத்தியபோது வலங்கையாருக்கும் இடங்கையாருக்கும் ஏற்பட்ட சச்சரவும், இறுதியில் வன்னியரைத் தலைமையாகக் கொண்ட இடங்கையார் வெற்றி பெற்றதும் கூறப்பட்டுள்ளது.

மல்லிகுந்தம் செப்புப் பட்டயம்:

வரி 13 ".....கா

வரி 14 ஞ்சிபுர தளத்தில் **பெரிய சோழனார் சின்ன சோழனார் பெரிய ந**

வரி 15 **ல்ல பண்டாரத்தார் சின்னநல்ல பண்டாரத்தார் உடையா**

வரி 16 **ர்பாளையம் பிச்சிவரத்து பண்டாரத்தார் அவர்களைச்சே**

வரி 17 ந்த 9 சாதியார் ....."

மேற்காணும் நிகழ்ச்சியையே கூறும் விழுப்புரம் மாவட்டம், **அவ்வையார் குப்பம் பட்டையம்,** பிச்சாவரம் பாளையக்காரரைப் **''பிச்சாவரம் பண்டாரி''** என்றழைக்கிறது.[20] இதன் காலமும் மல்லிகுந்தம் செப்பேட்டின் காலமாகவே இருத்தல் கூடும். ஏனெனில் தமிழ் ஆண்டும், மாதமும் மேற்காணும் இரு செப்பேடுகளிலும் சர்வதாரி வருடம், வைகாசி மாதமாகவே காணப்படுகின்றன. மல்லிகுந்தம் செப்பேட்டில் காணப்பெறும் ஆண்டுகள் முன்பு வெளியிட்டவரால் சரியாகப் படிக்கப்படவில்லையென்று தெரிகிறது.

அதே நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் கடலூர் மாவட்டம், **கொஞ்சிக் குப்பத்திலிருந்து** கிடைத்துள்ள செப்புப் பட்டயத்தில் கொடுக்கப் பட்டுள்ள சக ஆண்டும், கலி ஆண்டும் ஒற்றுமையடையதாக உள்ளன.[21] சக ஆண்டு 1804-லும், கலி ஆண்டு 4983-லும் எழுதப்பட்டிருக்கிறது. இதன் சரியான கி.பி. ஆண்டு 1882 ஆகும். இதிலும் தமிழ் ஆண்டு சர்வதாரியும், மாதம் வைகாசியும் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ் ஆண்டு சரியான ஆண்டாக இல்லை. ஆனாலும் மேலே கூறப்பெற்ற மூன்று செப்பேடுகளுமே கி.பி. 1882-ல் தான் எழுதப் பெற்றிருக்க வேண்டும்.

தேரோட்டம் நிகழ்ந்த காலம்:

இப்பட்டையம் **'உபரங்கி காளகத்தோளர்'** (ஸ்ரீ யுவரங்க உடையார், உடையார்பாளையம்) காஞ்சி பாளையப் பட்டை ஆட்சி செய்யுங் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீயுவரங்கப்ப காலாட்கள் தோழர்

கி.பி. 1869-ல் பட்டமேற்றார். இம்மன்னர் 1918-ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்.[21] மேலே கூறப்பெற்ற இதைப்போன்ற இரு செப்புப் பட்டயங்களிலும் காணப்பெறும் பிச்சாவரம் பாளையக்காரர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்த **ஆண்டியப்ப சூரப்ப சோழனாராக** இருத்தல் கூடும்.

'திருக்கை வளம்' பாடல்கள்:

கூடல் இருவாட்சிப் புலவரால் இயற்றப்பெற்ற "திருக்கை வளம்" என்னும் நூல் அரியலூர் பாளையக்காரர் விஜயரங்க ஒப்பிலாத மழவராயர் (கி.பி. 1724-1737) காலத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது. அதில் உள்ள 26, 27, 28 மற்றும் 54-ஆம் பாடல்கள் பிச்சாவரம் மன்னர்களைப் பற்றி கூறுகின்றன.[23]

26 ஆம் பாடல்

.....கூத்தாடும்

27-ம் பாடல்:

"அம்பலவர் முன்னே **யபிஷேகம்** பெற்றணியச்
சம்புதரு **னீற்றை யணி** சலனக்கை. உம்பர் பிரான்"

28-ஆம் பாடல்:

"அஞ்சாக்கரப் படிமேலமர்ந்து பட்டந்தான் புனைந்து
செஞ்சரணப் பூப்பணிக்கே சேருங்கை. தஞ்சமென"

54-ஆம் பாடல்:

"தில்லைச் சிதம்பரத்திற் **சிம்மாச னாதிபராய்**
நல்லறங்க ளெல்லாம் நடத்துங்கை."

பிச்சாவரம் மன்னர்களை நடராசர் ஆலயத்தில் பஞ்சாக்கரப் படியில் (நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்துப் படியில்) அமர வைத்துத் தில்லைத் தீட்சதர்களால் சங்கு அபிஷேகம் செய்யப் பெற்றதையும், பிறகு பட்டாபிஷேகம் செய்யப் பெற்றதையும், அதன் பின்னர் ஆயிரக்கால் மண்டபத்தில் மன்னர் அமர்ந்து நல்லறங்கள் செய்ததையும் எடுத்துக் கூறுகின்றன.

இதன் மூலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே பிச்சாவரம் மன்னர்கள் தில்லை நடராசர் ஆலயத்தில் பஞ்சாக்கரப் படியிலமர்ந்து முடிசூடிக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. மேலும் கி.பி. 1872ல் ஜாதி சங்கிரக சாரம் என்னும் நூல் வெளிவந்த காலத்தில் பித்தர்புரத்தில் ஜமீன்தாரராக வாழ்ந்தவர் இராமபத்திர சூரப்ப சோழனார் எனவும், அவருக்கு பஞ்சாட்சரப்படி அபிஷேகமும், ஆயிரக்கால் மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நிகழ்ந்ததாக அந்நூலின் 214-ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டி ருக்கிறது.[24]



தில்லை நடராஜர் கோயில்

மூன்றாம் பகுதி

பிச்சாவரம் பாளையக்காரர்கள்

இராமபத்திர சூரப்ப சோழனார் முடிசூடி ஆட்சி புரிந்தது:

கி.பி. 1872ல் 'ஜாதி சங்கிரகசாரம்' என்னும் நூலை எழுதி யிருக்கிற குண்ணம் முனிசாமிப் பிள்ளை, தம் நூலின் 214 ஆம் பக்கத்தில் இராமபத்திர சூரப்ப சோழனார் ஆதிவரன்முறை போல் முடிசூட்டிக் கொண்டார் என்று தெரிவித்திருக்கிறார். இவரது மகன் கனம் ஆண்டியப்ப சூரப்ப சோழனார் கி.பி. 1892 முடிய இருந்திருக்கிறார்.

சாமிதுரை சூரப்ப சோழனார் பட்டாபிஷேகம்

30.8.1908ல் கீலக ஆண்டு ஆவணி மாதம் 15-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பித்தர்புரம் ஜமீன்தார் கனம் ஆண்டியப்ப சூரப்ப சோழனார் குமாரர் மகா. ரா.ரா.ஸ்ரீ. சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு பட்டாபிஷேகம் நடைபெறவிருப்பதை அறிவிக்கும் முகமாகப் 'பட்டாபிஷேகப் பிரகடனம்' வெளியிடப் பெற்றிருக்கிறது. அதை ஆண்டியப்ப சூரப்ப சோழனார் வெளியிட்டிருக்கிறார். அதில் ''ஆதியிலே கௌட தேசாதிபனுடைய மூத்த குமாரனாகிய இரண்யவர்மச் சக்கரவர்த்தி என்னும் காரணப் பெயர் கொண்ட சிம்மவர்மச் சோழனாரால் பதஞ்சலி வியாக்கிரபாதர்கள் ஆக்ஞைபடி தில்லைக் காட்டைத் திருத்தி தேவாலயமாக பிரதிஷ்டைச் செய்யப் பெற்ற ஸ்ரீ சிதம்பர நடராஜப் பெருமான் சந்நிதியில் தில்லை மூவாயிர முனிவர்கள் திருமுன்னே ஸ்ரீ பஞ்சாட்சரப் படியின் மீதே ஸ்ரீ சோழ வம்சத்தினருக்குத் தொன்று தொட்டு பட்டாபிஷேகம் நடந்து வந்த சம்பிரதாயப்படி அச்சோழ வம்ச வழிவந்த பித்தர்புரம் ஜமீன்தார் கனம் ஆண்டியப்ப சூரப்ப சோழனார் குமாரர் மகா. ரா.ரா.ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு,

நாளது கீலக வருடம் ஆவணி மாதம் 15-ம் தேதி (30.8.1908) ஆதி வாரம் சூரிய உதயாதி நாழிகை 21-க்கு மேல் தனுர் லக்கினத்தில்

ஸ்ரீ சிதம்பரேசர் ஆலயத்தில் நடக்கும் சங்காபிஷேகத்திற்கும், பட்டாபிஷேகத்திற்கும் திருவீதி பிரதட்சினத்திற்கும் அபிமானிகள் யாவரும் இஷ்டமித்தராளுடன் விஜயம் செய்து கண்டு களிப்படையும் படிப் பிரார்த்திக்கிறேன்'' என்று அதில் கூறப்பட்டுள்ளது.[25]

திருக்கலியாணத் திருமுகம்

கீலக ஆண்டு ஆவணித் திங்கள் 19-ஆம் நாள் மேற்படி ஜமீன் சாமிதுரை சூரப்ப சோழனார் அவர்களுக்கும் முகாசா பரூர் பா.வா.ஜா. வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராய துரை அவர்கள் பரம்பரையில் உதித்த கன்னிகை இளவரசி ராசாத்தி ஆயாள் (சின்ன பாப்பா) என்பவருக்கும் திருமணம் நடைபெற்றிருக்கிறது. அதற்கு வெளியிட்ட ''திருக்கலியாணத் திருமுகம்'' கீழ்வருமாறு:

''மகா. ரா. ரா.ஸ்ரீ...

அவர்களுக்கு விஞ்ஞாபனம்.

ஐயா,

ஸ்ரீ நடராஜப் பெருமான் கிருபா கடாக்ஷத்தால் நாளது கீலக வருடம் ஆவணி மாதம் 19-ஆம் தேதி (3.9.1908) வியாழக்கிழமை 3½ நாழிகைக்குள் சிம்ம லக்னத்தில்

பித்தர்புரம் ஜமீன்தார் கனம் மகா. ரா. ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்கள் குமாரர் மகா. ரா.ரா.ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார் அவர்கட்கும், விருத்தாஜலம் முகாசா பரூர் ஜமீன்தார் பா.வா.ஜா. வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராயதுரை அவர்கள் பரம்பரையில் உதித்த கன்னிகை, இளவரசி சௌபாக்கியவதி ராசாத்தி (சின்ன பாப்பா) ஆயாள் என்கிற ஜலஜகந்தி ஆயாள் அவர்கட்கும்,

சிதம்பர தேவஸ்தான தென்புரம் விக்கிரம சோழன் தேரோடும் திருவீதிக்கும் மேல்புரம் விக்கிரமசோழன் தேரோடும் மூலையில் உள்ள இரண்டு மாளிகைகளில் ஒன்றில் நடக்கும் திருக்கலியாணத்திற்கும், அதைச் சார்ந்த சுப சடங்குகளுக்கும் தாங்கள் தங்கள் பந்து மித்திரர்களுடன் சமேதரராய் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படிக் கோருகிறேன்.''

இங்ஙனம்

ஆண்டியப்ப சூரப்ப சோழனார்
பித்தர்புரம் அரண்மனை: [26].

திருக்கலியாணம் நடைபெற்ற மாளிகைகள்:

திருக்கலியாணம் நடைபெற உள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ள மாளிகையும், மற்றொரு மாளிகையும் தற்போது நாட்டுக்கோட்டை செட்டியார் சத்திரங்கள் அமைந்துள்ள இடங்களாகும் என்று பெரியவர் அருள்மிகு ஸ்ரீமுத்து விநாயகர் அணுக்கத் தொண்டர் திருவேட்களம் தெற்கிருப்பு க.சி.து. நாராயணசாமி குறிப்பு எழுதியுள்ளார்.[27] அவற்றில் ஒரு மாளிகையின் பெயர் 'குலோத்துங்கன் மாளிகை' என்று வழங்கப் பெற்றதாக சேலம் கவிச்சிங்கம் ராஜரிஷி அர்த்த நாரீச வர்மா கூறியுள்ளார்.[28]

அக்னிகுலாதித்தன் பத்திரிகைச் செய்தி

மேற்காணும் நிகழ்ச்சிகள் நடைபெற்றதைப் பற்றி கி.பி. 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் நாள் வெளிவந்த ''அக்னி குலாதித்தன்'' பத்திரிக்கை செய்தி 'வன்னிகுலமித்திரன்' 15, 16 ஆவது மலர்களில் (1.2.1990) வெளியிடப்பட்டிருக்கிறது. அது கீழ்வருமாறு:[29]

''பித்தர்புரம் ஜமீன்தார் ராஜராஜ ஸ்ரீமான் சாமிதுரை சூரப்ப சோழனார் அவர்களுக்கு நிகழ்ந்த மகுடாபிஷேக வைபவச் சிறப்பு.

விருத்தம்

பார்பரவத் தில்லையாலய மியற்றிப் பருத்தமணி முடிபூண்டு
செங்கோலேந்தி
பேர்பரவக் காக்குமிர ணியவன்மப்போர் பெறு சோழன் சந்ததியி
லினிது போந்த
சீர்பரவப் பித்தபுரத் துரை சூரப்பன் சிற்சபையைத் தக்கரமாம் படியின்
மீதே
ஏர்பரவ மகுடா பிடேகங் கொண்டு இணையிலாப் பவனி வந்த
தியம்பக் கேண்மின்.

விசாலமான பந்தல்:

கீலக வருடம் ஆவணி மாதம் 15-ஆம் நாள் அன்று ஆதிவாரங் காலையில் சிதம்பர தேவஸ்தான தென்னண்டை மாடவீதிக்குச் சமீபமாக வீதியில் பந்தல்களிடப்பட்டு விருதுகொடி முதலியவைகள் கட்டப்பட்டு அலங்காரமாயுள்ள மேற்கூறிய துரையவர்களின் சொந்த மாளிகை களிரண்டிலும் ஷ துரையவர்களும் அவருடைய திருத்தம்பியார்

முதலியவர்களும் பித்தர்புரத் தமது அரண்மனையினின்றும், இன்னும் பிரபல பிரகிருதிகளாகிய வன்னிய அன்னிய சீமான்களும், சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்கத்தினரும், தென்னாற்காடு ஜில்லா சங்கத்தினரும், மற்றக் கிளைச் சங்கத்தினரும் தத்தம் நகர்களினின்றும் வந்திறங்கியிருந்தனர். அன்றியுமிவர் போஜனாதி யுபசாரங்கள் நடப்பதற்காகவும் இவர்களின் உடை முதலியவைகளை வைப்பதற்காகவும் அடுத்தாற் போலுள்ள ஒரு பங்களாவில் விசாலமான பந்தலிடப்பட்டிருந்தது.

பட்டமஹிஷியை அழைத்து வருதல்:

இஃதிங்ஙனமிருக்க அன்று காலை 9.20 மணிக்கு இனியத்துரையவர்களுக்குப் பட்ட மகிஷியாகப் போகிற பரூர் ஜமீன்தார் பா.வா.சா. வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராயதுரை அவர்களின் பரம்பரையில் உதித்த கன்னிகையை யழைத்துக் கொண்டு அக்கன்னிகையின் தமயன் முதலானோர் தில்லை மாகாளியம்மன் கோயிலுக்கருகாமையிலொரு மாளிகையில் வந்திறங்கியிருப்பதாக கேள்வியுற்று அவர்களை யுபசரித்தழைத்து வருவதற்காக யானை, ஒட்டகம், குதிரை முதலிய வாகனங்களோடும், பலவிருதுக் கொடிகள், குடைகள் மகரதோரண முதலியவற்றோடும், பலவாத்தியக் கோஷங்களோடும், மேற்படி துரையவர்களின் திருத்தம்பியார் ஒரு சிவிகையிலேறிக் கொண்டு, மற்றொரு சிவிகையில் அந்த கன்னிகையை ஏற்றிக்கொண்டு வருவதற்காகத் தங்கூட வரச் செய்து சகல ஜனங்களுஞ் சூழ்ந்து வர அப்பெண் வீட்டார் இறங்கியிருந்த விடஞ்சென்று அவர்களுக்குச் சகலோப சாரங்களுஞ் செய்து அக் கன்னிகையைச் சிவிகையிலேற்றிக் கொண்டு வந்து தமது மாளிகையின் வாசற்படியண்டை அக்கன்னிகையின் சிவிகையை வைத்துத் திரையிட்டு உள்ளே யழைத்துக் கொண்டனர்.

அரசர் பட்டம் புனையச் செல்லும் ஊர்வலக்காட்சி:

சுமார் 10 மணிக்கு மகுடாபிஷேகத்தினிமித்தம் மேற்படி துரையவர்கள் சிதம்பர தேவஸ்தானத்திற்குப் போவதற்காக, இரத்தின குண்டல கேயூர அஸ்தகடக மகர கண்டியாதி, ஆபரணாலங்கிருத பீதாம்பர தாரியாய், 'ஜெய விஜயபவா' வென்றேத்த, பல அதிர்வெடிகள் சப்திக்க, வீதியில் வந்து அழகிய சிவிகையிலேறினார். உடனே புதிதாய் இந்திர பட்டம் பெறப்போகிற தேவேந்திரனை தேவசபைக்கு

அழைத்துக்கொண்டு போக வந்த தேவ பெண்களைப் போல, சில கணிகை மாதர்கள் சிவிகையின் பக்கத்திலே வந்தனர். உடனே இரண்டு பஞ்சவர்ண பூசக்கர குடைகள் பிடிக்கப்பட்டன. இருபுறமும் வெண் சாமரைகளும் ஆலவட்ட தாலவட்டங்களும் வீசப்பட்டன. இருபுறமும் அருகு தீவட்டிகள் பிடிக்கப்பட்டன. அதற்கப்பால் கத்தி,கேடகம், கட்டாரி, துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் பிடிக்கப்பட்டன. புலிக்கொடி, விற்கொடி, மச்சக்கொடி, சிம்மக் கொடி, அக்கினிக் கொடி, பஞ்சவர்ணக் கொடி, ரிஷபக்கொடி, கருடக்கொடி, அனுமக்கொடி முதலிய விருதுக் கொடிகளும் மகர தோரணாதிகளும், தேவஸ்தான வெண்பட்டுக் குடைகளும் பிடிக்கப்பட்டன. அதற்கப்பால் தங்க நாகசுரங்களும், தவளச்சங்கம், டவுல் முதலியவைகளும் வாசிக்கப்பட்டன. அதற்கப்பால் பாண்டு வாத்தியங்களும், அதற்கப்பால் டிரம் வாத்தியங்களும் வாசிக்கப்பட்டன. அதற்கப்பால் எக்காளம், திருச்சின்னம், கோணத்தாரை, நீளத்தாரை முதலியவைகள் வாசிக்கப்பட்டன. அதற்கப்பால் குதிரைகள் மீதில் டங்காக்களிடிக்கப்பட்டன. அதற்கப்பால் ஒட்டகங்கள் மீதில் பேரிகை களடிக்கப்பட்டன. அதற்கப்பால் கடைசியாக முகபடா முதலிய அலங்காரத்தோடும் மேலேயேறிய மாவுத்தர் களோடும் இரண்டு யானைகள் சென்றன. இத்தியாதி வைபவத்துடன் தாம் தாமென்று தேவஸ்தான தென்னண்டை கோபுர வாயிலுக்கரு காமையிற் சென்று சிவிகையை விட்டிறங்கி அச்சிவிகையை மாத்திரம் அவ்விடம் நிறுத்திவிட்டு மற்றக் குடை, கொடி, சாமரம், அருகு தீவட்டி முதலிய சகல விருதுகளோடும் அத்தேவாலயத்திற்குள்ளே பிரவேசித்தனர்.

மன்னர் சித்சபைக்குச் செல்லுதல்:

உடனே புதிய இந்திரப்பட்டம் பெற வருகிற தேவேந்திரனைத் தும்புரு நாரதாதி தேவரிஷிகள் எதிர்கொண்டழைப்பது போல அத்தில்லை வாழ்யந்தணர்கள் பல புஷ்பகந்தாதிகளுடன் எதிர்கொண்டழைத்து (அவ்விந்திரனுக்குத் தேவகன நாதருடைய தரிசனஞ் செய்விப்பது போல) அத்தேவஸ்தானத்திலுள்ள முக்குறுணிப் பிள்ளையாரென்கின்ற கணநாதரது சேவை செய்வித்து, அங்கு மாலை மரியாதைகள் செய்வித்தனர். பிறகு கிழக்கு உள்கோபுர வாயிலாகச் சென்று அவ்வாலயத்திலுள்ள சிற்சபை, பொற்சபை முதலிய பஞ்ச சபைகளுக்குள் தேவசபைக்கேகி (புதிய பட்டம் பெறப் போகிற இந்திரன்

அத்தேவர்களோடு ஆலோசித்து அவர்களனுமதி பெற்று அத்தேவர் களுக்குத் தான் சன்மானம் செய்ய, அத்தேவர்கள் அவ்விந்திரனுக்குப் பழைய இந்திரனணிந்து கொண்டிருந்த ஆபரணாதிகளைக் கொடுக்கத் தான் பெறுவது போல) இத்துரையவர்கள் அத்தில்லை வாழ்ந்தணர் களுடன் ஆலோசித்து அவர்களனுமதி பெற்றபின் அவ்வந்தணர் களுக்கும் பட்டு வேஷ்டி உத்தரியங்களும் சொர்ண தட்சணை தாம்பூலாதிகளுங் கொடுத்து உபசரித்த பின், அவ்வந்தணர்களா லெடுத்துக் கொடுக்கப்பெற்ற மகரகண்டி உத்திர ஜெஞ்ச முதலிய ஆபரணங்களையுமணிந்து கொண்டு, அவ்வாலய இரண்டாவது பிரகாரத்தைப் பிரதட்சணமாக வந்து நடராஜப் பெரமான் எழுந்தருளி யிருக்கின்ற சிற்சபை முதலியவைகளுள்ள மூன்றாவது பிரகாரத்திற்குள், நுழையு மார்க்கத்தினின்றும் பொற்சபை வரையிலிடப்பட்டுள்ள புஷ்பப் பந்தரின் கீழே செல்லும்போது, தன்னைப் பகைவர்களினின்றும் பாதுகாப்பதற்காக உபேந்திரனாக அவதரித்திருக்கின்ற ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரிப்பது போல இத்துரையவர்களும் அங்கு சயனத் திருக்கோலமாகத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராணின்ற தில்லை ஸ்ரீ கோவிந்தராசப் பெருமானையும் நமஸ்கரித்துக் கொண்டு, பிறகு (அவ்விந்திரன் ஞானோபதேச மாதிகளைப் பெறுவதற்காகத் தேவகுரு முதலியவர்கள் வீற்றிருக்கின்ற ஞானசபைக்குப் போவது போலும்) இத்துரையவர்கள் ஸ்ரீ வியாக்கிரபாத பதஞ்சலி முனிவராதியர் சமேதராக ஸ்ரீ நடராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் பொற்சபையைக் கடந்து சிற்சபைக் கேகினர்.

பஞ்சாக்கரப்படியில் சங்காபிஷேகம்:

உடனே அந்த நடராஜப் பெருமானுக்குத் திருப்பாவாடமாதி சகல ஆராதனைகளும் செய்யப்பட்டன. அன்றியும் ஷெ துரையவர்களால் செய்வித்த தங்க வில்வ மாலையும் பொற்கவசமிட்ட சங்கையும் சுவாமிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பின் அத்துரையவர்களைச் சிற்சபையின் பஞ்சாட்சரப் படியின் மீது இருக்கச் செய்து, அச்சபையின் சுவாமிக்கருகாமையில் பாதவட்டில்களில் பூரித்து வைத்திருந்த தீர்த்தங்களை இத்துரையவர்கள் சுவாமிக்குச் சமர்ப்பித்த பொற்கவசமிட்டுள்ள சங்கினால் முகந்து தில்லைவாழ் யந்தணர்களில் ஒருவர், அத்துரையவர்களின் சிரசில் அபிஷேகம் செய்தனர். பிறகு மேனியுலர்த்தி வேறு ஆடையுடுத்திக் கொண்டதும் ஸ்ரீ நடராசப்

பெருமான் திருவடிகளிலுள்ள புஷ்பத்தை அத்துரையவர்களின் சிரசில் வைத்து, அப்பெருமான் திருமேனியில் சாத்திய மாலையை இத்துரையின் கழுத்திலிட்டு விபூதி முதலிய பிரசாதங்களும் கொடுத்தனர். உடையார் பாளைய சமஸ்தானாதிபதி அவர்கள் அனுப்பியிருந்த வரிசைகளை வழங்கினர். இவற்றைப் பெற்றுக் கொண்டு (முடிசூட்டிக் கொள்ளுவதற்காகத் தனது கொலு மண்டபத்திற்குச் செல்லுகின்ற இந்திரனைப் போல) அந்தச் சிற்சபையினின்றும் புறப்பட்டு ஆதியில் இத்துரையின் முன்னோராகிய இரண்யவர்மச் சோழனார் கொலு செய்த காரணத்தினால் இராஜ சபையென்று வழங்குகிற ஆயிரக்கால் மண்டபத்தில் சென்று அவ்விடமிட்டுள்ள உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்தனர்.

தில்லை வாழந்தணரால் முடிசூட்டல்:

தில்லை வாழந்தணர்களால் ஹோமாதி சடங்குகளும் செய்யப் பட்டன. பிறகு தங்கமயமான மகுடத்தை ஓரந்தணரால் பொற்றட்டில் ஏந்தப்பட்டுத் தில்லை வாழந்தணர் முதலிய பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்றபின் தோற்கருவி துளைக்கருவிகளாகிய பலவித வாத்தியங்களும் சப்திக்க, அந்தணர் முதலிய பெரியோர்கள் புஷ்பமாரி பொழிய, தில்லை வாழந்தணர்களின் பெருந்தகை வாய்ந்த **ஓர் தீட்சதர் முனிவரால் நமது சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு அன்று பகல் 21 நாழிகைக்கு மேல் தனுர் லக்கினத்தில் முடி சூட்டப்பட்டன.**

மன்னர் மாளிகை அடைதல்:

பிறகு அந்தணர் முதலிய யாவர்க்கும் தாம்பூலாதி யுபசாரங்களும் நடந்தன. உடனே சிரசில் கலிக்கித்துராபதித்து அழகிய இமாம் பட்சியிறகு சொருகப்பட்ட கிரீடம் விளங்க, இடையில் பீதகவாடை துலங்க, கழுத்திலிருந்து கணுக்காலளவும் பீதாம்பர நிறையங்கி தொங்க, சர்வாபரணாலங்கிருதராய் கத்தி கேடகம் முதலிய் ஆயுத பாணியாய் மேற்சொன்ன பல வாத்தியங்களும் குடை சாமரம் முதலிய பல விருதுகளும், யானை, குதிரை, ஒட்டகம் முதலிய வாகனங்களும் முன் சொன்ன முறைப்படியே முன்னே செல்ல அதிர்வெடிகள் சப்திக்க கீழ்க்கோபுர வாயிலின் வழியாக வந்து சிவிகையிலேறி தாம் முன்பு இறங்கியிருந்த மாளிகையைச் சேர்ந்தனர்.

பிரசங்கம்:

உடனே அனைவர்க்கும் போஜனாதி சகலோபசாரங்களும் நடந்தன.

இஃ்திங்ஙனமிருக்க அன்று இரவு 7 மணிக்கு மேற்படி தேவஸ்தான ஆயிரக்கால் மண்டபத்தில் பண்டிதபட்ட ஸ்ரீ பாலசரஸ்வதி சுதர்சன நாராயண சாஸ்திரியாரவர்கள் தில்லையாலயத்தினுடையவும், அங்கு ஆனந்த நிருத்தமிடும் ஸ்ரீ நடராசப் பெருமானுடையவும், தில்லை வாழயந்தணர்களுடையவும், அவ்வாலயத்தைக் கட்டுவித்த இரண்யவர்மச் சோழ சந்ததியாருடையவும், பிரபாவங்களைப் பற்றி அதிசாதுர்யமாகப் பிரசங்கத்தனர். பிறகு இவர் பிரசங்கத்தைப் பற்றி காஞ்சீபுரம் வித்வான் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களும்[29A] புராணிகர் சின்னைய நாயகரவர்களும் வியந்து பேசினார்கள்.

இரவில் மன்னர் பவனி:

9 மணிக்கு (புதிதாய் தேவேந்திரப் பட்டம் பெற்ற தேவேந்திரன் புஷ்ப விமானத்தில் பவனி வரப் போகின்றாரென்றறிந்து வருண பகவான் மேகங்களையே வீதிகளில் தண்ணீர் தெளிக்கச் சொன்னது போல) மழையும் பெய்து நின்றது. அன்று இரவு சிதம்பர தேவாலய மாடவீதி முழுமைக்கும் ஆங்காங்கு வாஷிங்டன் லயிட்டுகள் என்கின்ற ஸ்தம்ப தீபங்கள் பிரகாசித்தன. ஆங்காங்கு கம்பபாணங்களும் புதைக்கப்பட்டிருந்தன. சுமார் 10 மணிக்கு காலையில் ஆலயத்திற்குச் சென்றபோது வந்த சகல வாத்தியங்களோடும் ரத கஜ துரக பதாதிகளோடும் சென்று, பின் புஷ்பப் பல்லக்கிலே ஆகாயவெடி பாணங்கள் தம்தம் என ஒலிக்க, அதிர்வெடி படீல் படீலென்று ஒலிக்க அநேகர் தீவட்டி மத்தாப்பு, புருஸ், சைனாப்பெட்டி முதலிய பாண வேடிக்கைகளோடும் அச்சிதம்பர ஆலய மாடவீதியில் நமது சாமிதுரை சூரப்ப சோழனார் பவனி வந்த காட்சி முதலியவைகள் யாவர்க்கும் வியப்பையும் பேரானந்தத்தையும் கொடுத்தன. அன்றியும் இத்துரையவர்கட்கு நாளது மாதம் 19ம் தேதி தமது நகரத்தின் அரண்மனையில் நடந்த திருமணத்தின் சிறப்பு இதிலும் பதின் மடங்கு அதிகமாகும்.

விஷ்ணுபாதசேகரர்

வித்துவான் ஜா. பசுபதி நாயகர்''

இராஜ சந்ததியராகிய வன்னியர்களுடைய 32 விருதுகளின் விபரமாவன:

1. புலிக்கொடி
2. சிங்கக்கொடி
3. விற்கொடி
4. மீனக்கொடி
5. திருத்தேர்
6. வெள்ளையானை
7. அக்கினிக்குதிரை
8. கொன்றைமாலை
9. சாம்பிராணிக்கலசம்
10. சங்கு
11. சக்கரம்
12. மகுட தோரணம்
13. கருடக்கொடி
14. அன்னக்கொடி
15. மயில்கொடி
16. தவளச்சங்கு
17. வெங்கலக்கொம்பு
18. முத்துக்குடை
19. வெள்ளைக்கொடி
20. சாமரை
21. வாள்
22. கேடயம்
23. வளைதடி
24. அம்பறாத்தூணி
25. பாதகளாஞ்சி
26. நகரா



வன்னிய குல க்ஷத்திரிய அரசர்களின் 32 விருதுகள்

27. ஜயபேரிகை
28. வில்மணி
29. புல்லாங்குழல்
30. அறுகாற்பீடம்
31. பகல் தீவட்டி
32. வெள்ளைப்பாவாடை

இவைகளை வன்னியர் புராணம் விருதுபெற்ற சருக்கத்தில் காண்க என்று திருக்கை வள உரையாசிரியர் தெரிவித்துள்ளார்.[29B]

வன்னியர் மகாசங்கம் 19-ஆம் ஆண்டு விழா 1907ல் சென்னையில் நடைபெற்ற போதும்; 1911 டிசம்பர்த் திங்கள் 27 மற்றும் 28 தேதிகளில் காஞ்சிபுரத்தில் வன்னியர் சங்கம் 22-ஆம் ஆண்டு விழா நடைபெற்ற போதும் மகா.ரா.ரா.ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார் தலைமை தாங்கிச் சிறப்புச் செய்திருக்கிறார். காஞ்சிபுரத்தில் நடந்த விழாவில் சுமார் 7000 பேர் கலந்து கொண்டிருக்கின்றனர். வெகுச் சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக சூரப்ப சோழகனாரின் வீதியுலா அமைந்திருக்கிறது.

14.6.1908ல் கடலூர் புதுப்பாளையத்தில் பகல் 1.00 மணிக்கு தெ.ஆ. ஜில்லா வ.கு.க்ஷ. சங்கம், மகா சங்கப் பிரதிநிதி ஏ. சொக்கலிங்க நாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அம்மாவட்டத்தில் கிளைச் சங்கங்கள் தொடங்கும் பொறுப்பை ஒரு குழுவிடம் ஒப்படைத்தது. அக்குழுவின் தலைவர் பிச்சாவரம் ஜமீன்தார் சாமிதுரை சூரப்ப சோழகனார். சிறப்பு உதவித் தலைவர் முகாசாபரூர் ஜமீன்தார் பா.வா.சா. வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராயர், உதவித் தலைவர்கள் 1. ஊற்றங்கால் ஜமீன்தார் சாமியப்பா பரமேஸ்வர நயினார், 2. திருக்கணங்கூர் ஜமீன்தார் பெரியசாமி கச்சிராய துரை. [29C]

இப்பட்டாபிஷேக நிகழ்ச்சியையும் திருமண நிகழ்ச்சியையும் நேரிடையாகத் தாமும் பல்லவ குலசேகரர் கா.கோ. பலபத்திர நாயகரும் மற்றும் மகாசங்கத்தினரும் பார்க்கும் பேறு பெற்றதாகத் 'திருக்கைவளம்' நூலுக்கு 1955ல் உரை எழுதிய பிரசங்க பூஷணம் குக ஸ்ரீ பு.பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் தம் நூலில் 49-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.[30] மேலும் தென்னாற்காடு ஜில்லா வன்னிகுல

க்ஷத்திரிய சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் ஏ. வைத்தியலிங்கராஜா அவர்களது அரிய முயற்சியால் பலரும் கூடி அவ்வைபவங்களை சிறப்பாக நடத்தி வைத்தார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

சாமித்துரை சூரப்ப சோழனாரின் கடிதம்:

கி.பி. 6.10.1911-ல் பிச்சாவரம் பாளையத்திலிருந்து சாமித்துரை சூரப்ப சோழனாரால் சிதம்பரம் நடராசர் கோயில் தீட்சிதர்களுக்கு முடிசூட்டும் வைபவம் தொடர்பாக ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.[30] இக்கடிதம் தில்லைக்கண்ணு சூரப்ப சோழனாருக்கு முடிசூட்டும் நிகழ்ச்சி பற்றியதாக இருக்கும். அவர்தான் கி.பி. 1911-ல் முடிசூட்டப் பெற்றிருக்கிறார்.

நடராசர் கோயில் பொதுத்தீக்ஷதர்கள் பதில்:

இக்கடிதத்துக்கு சிதம்பரம் தேவஸ்தானம் பொது தீட்சதர்களுக்காக ஒரு பதில் கடிதம் ஒரு திங்கள் கழித்து 5.11.1911-ல் எழுதப் பட்டிருக்கிறது.[31]

அதில் ''முடிசூட்டும் வைபவ தினத்தில் பகலில் எல்லா சன்னிதானங்களிலும் சுவாமிகளுக்கு அபிஷேக நைவேத்தியங்களும், பிராமண சமாராதனைகளும், ஏழைகளுக்கும், பரதேசி ஜனங்களுக்கும் அன்னதானங்களும், வஸ்திர தானங்களும், மேற்படி தினத்தில் காலை 6 மணி முதல் ராத்திரி 10 மணி வரையிலும் அதிர்வெடி வாண வேடிக்கைகளும், சாயறக்ஷை பூஜா காலத்தில் நடராஜ மூர்த்தியின் சன்னிதானத்தில் பருப்புப் பொங்கல், திருப்பாவாடை நைவேத்தியங் களும், சாயங்காலத்தில் கோவில் முழுவதும் தீப அலங்காரங்களும், ராஜ சபையாகிய ஆயிரக்கால் மண்டபத்தில் **கனம் தங்கிய மகா.ரா.ரா. ஸ்ரீ சக்கிரவர்த்தியவர்களுடைய மகிமைகளைப் பற்றி ஸமஸ்கிருதோபன்னியாசங்களும், பாகவதர் கதைகளும்**, பெரிய மேளம், சின்ன மேளம் சங்கீதங்களும் இவையெல்லாம் சிறப்பாய் நடத்த வேண்டியதற்காக எங்கள் பொது ஸமாஜத்தில் ரூபா 1000.00 ஆயிரம் செலவு செய்ய 12 பேர்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்'' என்று தெரிவித்து பன்னிரண்டு தீக்ஷிதர் பெயர்களையும் குறிப்பிட்டு பிச்சாவரம் சக்கரவர்த்திக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

பிச்சாவரம் அரசர், சக்கரவர்த்தி:

மேற்காணும் கடிதத்திலிருந்து பித்தர்புரம் சோழன்னார் தீட்சதர்களால் சக்கரவர்த்தி என்றழைக்கப் பெற்றதும், முடிசூடும் விழாவின் போது

தில்லை நடராசப் பெருமான் கோயில்களில் என்னென்ன நைவேத்தியங்கள் செய்யப் பெற்றன வென்பதும், மன்னரின் மகிமை பற்றி வடமொழி சொற்பொழிவுகளும் மற்றும் பாகவதர் கதைகளும் தீட்சதர்களால் நடத்தப் பெற்றதும், அவைகளுக்காகச் சமீன்தாரர் ரூ. 1000 வழங்கியதையும் நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது. மேலும் முடிசூட்டு விழாவில் நடராசர் ஆலயத்துக்கு மட்டும் ரூ. 1000 வழங்கும் அளவில் செல்வச் செழிப்போடு பித்தர்புரம் ஜமீன்தாரர் விளங்கியிருக்கின்றார் என்றும் உணர முடிகிறது.

தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார் முடிபுனைதல்:

கி.பி. 1911-ல் (5.11.1911) தமிழாண்டு விரோதிகிருது ஆண்டு ஐப்பசி மாதம் 20-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, பித்தர்புரம் ஜமீன்தார் மகா.ரா.ரா.ஸ்ரீ சாமித்துரை சூரப்ப சோழனார் சகோதரர் கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ தில்லைக்கண்ணு சூரப்ப சோழனாருக்கு ஸ்ரீ சிதம்பரேசர் ஆலயத்தில் சங்காபிஷேகமும், பட்டாபிஷேகமும் மற்றும் திருவீதி பிரதட்சிணமும் நடைபெற்றிருக்கிறது. இதற்கான பட்டாபிஷேகப் பிரகடனத்தைச் சாமித்துரை சூரப்ப சோழனார், தம் பித்தர்புரம் அரண்மனையிலிருந்து வெளியிட்டிருக்கிறார்.[32]

இச் சோழனார் உடையார்பாளையம் ஜமீன் கச்சியுவரங்க காலாக்கத் தோழரிடம் பெண் கேட்டிருக்கிறார். அவர் மறுத்து விட்டதால் முகாசா பரூர் ஜமீனிலிருந்து இராஜலக்குமி என்ற பெண்ணை மணந்திருக்கிறார். 1921ல் சிதம்பரத்தில் நடைபெற்ற வன்னியர் சங்க 33 ஆவது ஆண்டு விழாவில் ஸ்ரீமான் தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார் தலைமை வகித்திருக்கிறார். அப்பொழுது சேலம் ராஜரிஷி அர்த்த நாரீச வர்மா அவர்களால் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டிருக்கிறது. அப்பாடல் கீழ்வருமாறு:

மாமறையும் மறை நெறியும் வானும் வாழ மன்றிலின்ப நடங்குனிக்கும்
வள்ளல் தம்மைத்
தூமறையோருடன் போந்து தொழுதுவாழ்த்தித் துயருடலப் பிணி
தொலைத்துச் சுடரோனாகி
நேமமிகு மந்தணர்க ளென்றும் வாழ நிலை நகர நிருமித்து நிருத்தம்
போற்றி
யேமமிகு தில்லை நகராண்ட வெங்கள் இரண்யவன் மன்மதலாயிதனைக்
கேண்மோ

காடவர்நின் முன்னோர்கள் நிருத்தமாடுங் கடவுளுக்கே
வழிவழியிற்றொண்டு பூண்டிங்
காடிபஞ்சாச்சரப்படியி லபிடேகத்தை யாயிரக்கான் மண்டபத்தில்
முடியுஞ்சூடிப்
பாடுமறை விதி போற்றிப் பனுவல் போற்றிப் பாரறியச் சோழர்களாய்
வாழ்ந்த தொல்லை
நீடு புகழ்ப் பரம்புரையி லினிது வந்தாய் நீயெனினே மகிமையெலா
நினதேயையா
வளவர் பிரான் குலோத்துங்கன் மன்றுளாடும் மணிமகிழ்பேரம்பலத்தை
மாழைவேய்ந்தும்
உளமகிழத் திருத் தொண்டர் புராணந்தன்னை யுலகு தனில் வெளி
தந்துஞ் சேக்கிழார்க்கே
புளகமுடன் பெயர் சூட்டிப் பெருமைகாட்டிப் புனிதமிகும ம்பலச்சா
சனமுந் ததீட்டி
யளவரிய புகழ்நீட்டி யாடுமீசன் அடியடைந்த பெருமைநினக்
காகுமன்றோ
பின்னோர்நாள் பராந்தகப் பேர் பெருமான்றில்லைப் பெம்மானார்
சிற்சபையைப் பொன்னாலாக்கி
முன்னோர்கள் வழித்தொண்டை முற்றியிங்கே முடிசூட்டித் தமிழகத்தை
முழுதுமாண்டான்
மன்னாதி மன்னர்களாய்ப் பலபேருங்கள் மரபார்கள் வாழ்ந்தகதை
மறக்கற்பாற்றோ
சின்னாள்முன் சாமிதுரை சோழர்க்குற்ற தில்லைநகர் முடிசூட்டுச்
சிறப்புந்தானே
சிறப்பறிந்தார் கீலகவாண் டைந்தாமாதஞ் சிற்சபையி லஞ்செழுத்துப்
படியிலீசன்
நிறப்படிவச் சங்கதனா னித்தற்காட்டு நீள் பெருமை மஞ்சனத்தை நினது
முன்னோன்
பெறப்பருவம் வாய்ந்துமுடி சூடித் தில்லைப் பெருமானாய் மன்றலுற்ற
பெருமையெல்லா
மறப்பதுவோ மனவெளியின் மாறுங்கொல்லோ வளவர்மரு மானுங்கள்
மகிமைதானே
சாமிதுரை சூரப்பச் சோழனாநின் றமயனிந்த சங்கவிழாத் தலைவனாகத்
தேமருவு கச்சிதனிற் சென்னை தன்னிற் றிகழ்ந்ததுவுங் கூடனகர் ஜில்லா
சங்க

மாமருவு மதிபதியாய் வாழவாழ்ந்த மதிதனையு நீயுணர்ந்தாய்
மதித்தாயெங்கள்
கோமகனே குலச் சபையின் தலைமையின்று குறி கொண்டாய்
மரபொழுக்க நெறிகொண்டாயே.
கொண்டாடு நினதுசெய லறிந்தபின்னுங் குடிப்பெருமை யரியலூர்
மழவர்கோவுந்
தண்டாத கீர்த்தியுடை யாருமிந்தச் சங்கவிழாத் தனிலொரு நாள்
தலைமையேற்றுப்
பண்டாகுந் தமிழரசர் மான்மியத்தைப் பாரறியச் செயலுனது பாரமன்றோ
திண்டோளி லார்மிடைந்துவாழ்கவாழி சிவகாம சுந்தரிசேர் சிவத்தைப்
போன்றே."

ஆண்டியப்ப சூரப்ப சோழனார் பட்டமேற்றல்:

கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ. தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார் அவர்கள் குமாரர் மகா.ரா.ரா.ஸ்ரீ. ஆண்டியப்ப சூரப்ப சோழனாருக்கு சுபானு ஆண்டு ஆவணி மாதம் 3-ம் நாள் (19.8.1943) ஸ்ரீ சிதம்பரேசர் ஆலயத்தில் சங்காபிஷேகமும், பட்டாபிஷேகமும் மற்றும் திருவீதி பிரதட்சிணமும் நடைபெற்றிருக்கிறது. இதற்கான பட்டாபிஷேகப் பிரகடனத்தைச் சிதம்பரநாத சூரப்ப சோழனார் வெளியிட்டிருக்கிறார்.[33] இச்சிதம்பரநாத சூரப்ப சோழனார் ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் பங்காளி ஆவார்.

ஆண்டியப்ப சூரப்பசோழனார் திருமணம்:

20.8.43 அன்று மகா.ரா.ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்கட்கும் உடையார்பாளையம் சமஸ்தானம் வடக்குச் சின்ன அரண்மனை மகா.ரா.ரா.ஸ்ரீமத் மகாராஜா சாமித்துரை என்கிற கச்சிபள்ளிகொண்ட ரெங்கப்ப காளாக்கத்தோழ உடையார் அவர்கள் ராஜகுமாரி சௌபாக்கியவதி ராஜாத்தி ஆயாள் என்கிற ஜலஜகந்தி ஆயாள் அவர்கட்கும் சிதம்பரம் வடக்கு வீதி எண். 101 கிரகத்தில் திருமணம் நடைபெற்றிருக்கிறது. இத்திருக்கலியாணத் திருமுகத்தையும், பித்தர்புரம் அரண்மனை சிதம்பர நாத சூரப்ப சோழனார்தான் வெளியிட்டிருக்கிறார்.[35]

இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி

மேற்படி திருமணம் பற்றி 24.8.43 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகைக் கிழ்க்காணும் செய்தியை (தமிழாக்கம்) வெளியிட்டிருக்கிறது.[35]

மகுடாபிஷேகத் திருமணம்

24.8.43ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்ததின் மொழிபெயர்ப்பு:

சிதம்பரம் ஆகஸ்ட் 21. சோழமன்னர் பரம்பரையினருமாகிய பித்தர்புரம் (ஜமீன்தார்) ஸ்ரீ தில்லைக்கண்ணு சூரப்பசோழனார் அவர்களின் திருக்குமாரர் பித்தர்புரம் ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்கு உடையார் பாளையம் சமஸ்தானம், கச்சிப் பள்ளி கொண்ட ரங்கப்ப காலாக்க தோழ உடையார் என்னும் மகாராஜா சாமிதுரை அவர்களின் திருக்குமாரத்தி ஜகஜகந்தி ஆயாள் என்னும் ராஜகுமாரி அவர்களுக்கும் திருமணம் மிகச் சிறப்பாகச் சிதம்பரத்தில் நடைபெற்றது. இத் திருமணத்திற்கு மாபெருங் குழுவினர் கூடியிருந்தனர். **தில்லை நடராஜர் ஆலய பொது தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்குத் தில்லைக் கோயில் மரியாதைகளுடன் சங்காபிஷேகமும், பட்டாபிஷேகமும் நிறைவேறின.** மன்னர் அவர்களுக்குச் **சரசகவி பிரம்ம ஸ்ரீ, என்.எஸ். சிதம்பரேஸ்வர தீக்ஷிதர்** அவர்கள் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். அன்றியும் சிதம்பரம் வன்னி குலக்ஷத்திரிய சங்கத்தாராலும், தில்லைக்கருணைக் கழகத்தாராலும் மன்னர் அவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வன்னிய மரபினரால் பாராட்டு:

மேற்குறிப்பிட்டுள்ள பட்டாபிஷேகம் மற்றும் திருமண வைபவங்கள் நடைபெற்ற பிறகு 1943-ஆம் ஆண்டு புரட்டாசி திங்கள் 13-ஆம் நாள் வன்னியகுல மன்னர் மரபினர்களால் கொண்டாடப்பெற்ற பாராட்டு நல்விழாவின் போது மணமக்கட்களித்த வாழ்த்துப் பாவைக் கீழே காணலாம்.[36]

வாழ்த்துப்பா

சீர்சால் சிறப்பின் ஏர்சால் வளத்தான்
மண்டலம் சோழ மண்டலம் எனவும்
மன்னவன் சோழ மன்னவன் எனவும்
பண்டொரு பனுவல் விண்டனன் கம்பன்
அறநிறை மனமும் அகநிறை கருணையும்
மறவலி கொண்ட மலையெனும் தோளும்
கலைநுகர் அறிவும் கவிஞர்கள் நேசமும்
நிலவுவெண் குடையும் நீதிசெங் கோலும்
அசைவில் நாவுடை ஆராய்ச்சி மணியும்
வசையற பெறுசோழ வம்சத்(து) உதித்த
இரணிய வன்மன் இறைபணி கருதி
அரசைத் துறந்தே அருள்வழி காட்ட
தில்லைக் காட்டைத் திருத்தி யமைத்து
நல்கிய திருப்பணி நானிலம் போற்றும்
புலிமுனி வியந்து போற்றிப் பரிவொடு
அலகில் மற்றெவரும் அணுகுதற்(கு) அரிய
பஞ்சாக் கரத்திருப் படிமிசை யமர்த்தி
அஞ்சேல் எனநடம் ஆடும் இறைவன்முன்
வலம்புரிச் சங்கால் கங்கைநீர் பெய்து
நலம்பெற திருஅபி டேகம் செய்தபின்
தேவரு முனிவருந் திருவுளங் கனிய
பூமக ளிலங்கு பொன்மணி மண்டபத்
தரிஆ சனத்தில் அரசனை யமர்த்தி
பிரிவுடன் துதித்துப் பரமனை வணங்கி
முடிதனை முனிவர் திருக்கரத் தேந்தி
சூடினர்! வாழ்த்திச் சோழனார் தமக்கே!
நன்னெறி நிலவ நன்வீர கட்கமும்
அண்ணலார் அணிய ஆத்தி மாலையும்
விண்ணவர் போற்றும் வியாக்கிரகக் கொடியும்

பகற்றீ வர்த்தியும் பரவுநற் றூபமும்
நகைமுடித் தோடு நல்கிக் ''காவல்!
தன்னிக ரில்லாத் தலமதில் திருப்பணி
முன்வினை கூட்ட முடித்தனை யதனால்
திருமூல நாதன் திருவுளப் பாங்கான்
மருவிலா உந்தன் மரபினர் தமக்கும்
இந்நக ராட்சியும் இம்மையு மறுமையும்
என்றும் குறைவிலை'' என்றருள் புரிந்தார்
இத்தகை யொப்பிலா பேற்றை யீண்டு
உத்தமர் போற்றும் உயர்திரு வாளர்
தில்லைக் கண்ணு சூரப்ப சோழனார்
இல்லாள் திருவுடை இராஜ லக்குமியும்
செய்தநற் றவத்தின் சீர்த்தியால் உதித்த
பொய்யிலாப் புகழ்சேர் புனிதப் புரவலன்
ஆண்டி யப்ப சூரப்ப சோழனார்
ஆண்டு சுபானு ஆவணி மூன்றில்
தண்டிகை பூர்ந்து தக்கோர் சூழ
வெண்குடை நிழலில் வெண்சா மரமும்
ஆண்டகை மார்பினில் ஆத்தியும் திகழ
பாய்மாப் பதாகையும் பகற்றீ வர்த்தியும்
சாய்நடைத் தும்பியும் சாம்பிராணி தூபமும்
இத்தகு விருதுடன் ஏந்தல் வலமாய்
அத்தனெம் இறைவன் ஆடிடும் சபையில்
ஐந்தெழுத் தமைந்த அரியவெண் படிமிசை
மங்கையோர் பாகன் மாதொடு மகிழ
பரிவட்டம் சூட பவித்திரச் சங்கினால்
திருஅபி டேகம் செய்யத் தேவர்கள்
மருவிடும் இராஜ மன்றத்(து) அணிதிகழ்
இருக்கையில் வீற்றிருந்(து) எழில்மிகு திருமுடி
தில்லைவாழ் அந்தணர் சூட்டிடச் சூடினார்!

நல்லோர் பலரும் நல்லாசி கூறினர்!
தேவர்கள் மகிழ்ச்சியால் திருவருள் புரிந்தனர்!
பாவலர் வாழ்த்தினர் வாழ்த்தினர் பலகால்!
முரசங்கள் ஆர்த்தன! முழங்கின சங்கம்!
அரசனைப் போற்றி அனைவரும் வணங்கினர்!
மரபின் விதிப்படி மறுநாள் உதயத்து
பெருமைசேர் உடையார் பாளையத்து இளைய
வள்ளல் சாமி **துரையெனும் கச்சிப்**
பள்ளிகொண் டாரெனப் பகர்ந்திடுங் கோமான்
அறமுயர் நன்மனை அரங்க நாயகியார்
பெருந்தவம் இயற்றிப் பெற்றதோர் வனிதை
பொலிவொடுந் திருவொடும் பொன்னிபோற் றிகழ்வதால்
ஜலஜகந்தி யாரெனச் சாற்றிடும் ஆயாள்
மருவிலாக் குலமும் மாண்புந் தெரிதர
இருமணம் ஒன்றுசேர் திருமணம் முடித்தார்.
மகாராஜன் ஆண்டியப்ப சூரப்ப சோழனும்
இராஜாத்தி ஜலஜகந்தி ஆயாளும் புவிமிசை
மலரிடை மணமென மணியிடை ஒளியென
குலவி வாழிய கூத்தனது அருளால்!
இரணிய வன்மன் இணையிலாப் பரம்பரை
தரணியில் இளம்பிறை போலவே தழைக்க
வாழிய வளவன்! வாழிய தேவியார்!
வாழிய புலிக்கொடி! வாழிய செங்கோல்!
வாழிய வெற்றி! வாழிய வீரம்!
வாழிய நீதி! வாழிய தர்மம்!
வாழிய தண்டமிழ்! வாழிய வையம்!
வாழிவன் னியகுல மன்னர் மரபினரே!

இங்ஙனம்

வன்னியகுலமன்னர் மரபினர்கள்

சுதேசமித்திரன் செய்தி:

மேற்குறிப்பிட்டுள்ள பாராட்டு விழா பற்றி 'சுதேசமித்திரன்' இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. [37] அது கீழ்க்காணுமாறு:

பித்தர்புரம் ஜமீன்தார் ராஜ ராஜ ஸ்ரீமான் ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம்:

(16.10.43-ல் சுதேசமித்திரனில் பிரசுரமானது.)

"பித்தர்புரம் 'ஜமீன்தார் ஸ்ரீமான் தி.ஆண்டியப்ப சூரப்ப சோழனார் 19.8.43-ல் முடிசூடித் திருமணம் செய்து கொண்டதைப் பாராட்டுவதற்கு வன்னிகுல மன்னர் மரபினரால் நேற்று மாலை சிதம்பரம் தில்லை அம்மன் நாடக மண்டபத்தில் சிதம்பரம் ஜில்லா முன்சிப் ஸ்ரீ.ஏ. கெஜபதி நாயகர் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ ஜமீன்தாருக்கு ஒரு வாழ்த்துப் பாட்டுப் படித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு மேற்படி மரபினர் சார்பாக ஜமீன்தாருக்கு ஓர் தங்கச் சங்கிலி (ரூ. 1500 மதிப்புள்ளது.) காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான்கள் அட்வகேட் வி.வி. சீனுவாசாச்சாரியார், ராவ்பகதூர், ஸி.எஸ்.ஸ்ரீநிவாசாச்சாரியார், சென்னை, டெபுடி மேயர் ஸி. பார்த்தசாரதி நாயகர். திருவேங்கட நாயனார், முனிசிபல் கமிஷனர் கே. ராமலிங்க முதலியார், சிதம்பரம் ஜில்லா ரெஜிஸ்டரார் கே. குமாரசாமி நாயகர் முதலியவர்கள் ஜமீன்தாரைப் பாராட்டியும், வன்னிகுல க்ஷத்திரிய மரபினர்கள் படிப்பில் பின்னணியில் நிற்கிறார்கள் என்றும், அவர்கள் படிப்பில் முன்னேற்றமடைந்தால்தான் சோழ மன்னரின் பரம்பரை என்று சொல்லிக் கொள்வது பொருந்துமென்றும், ஜமீன்தார் தலைமையின் கீழ் மேற்படி வகுப்பினரின் படிப்பின்மையைப் போக்கப் பாடுபட வேண்டுமென்றும் பேசினார்கள். மேலும் மேற்படி மரபினர்களைச் சார்ந்த மாணவர்களுக்கென்று ஒரு ஹாஸ்டலும் பிரத்தியேகமான தங்கும் விடுதி ஒன்றும் சிதம்பரத்தில் அமைக்க வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசப்பட்டது. மேற்படி கூட்டத்திலேயே மாணவர் ஹாஸ்டலுக்காக ரூ. 2500-க்கு கையெழுத்திடப்பட்டது. கடைசியாக ஜமீன்தார் மேற்படி பாராட்டுதலுக்குத் தக்க பதலளித்தார். கூட்டத்திற்குப் பின் ஜமீன்தார் ஊர்வலமாக அன்னார் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்."

"1943-வருஷம் நவம்பர் மாதம் 14-ந் தேதி திருவண்ணாமலையில் நிகழ்ந்த வடஆற்காடு ஜில்லா வன்னிகுல க்ஷத்திரிய சங்க வெள்ளி

விழாவிற்கு மேற்படி சோழனார் அவர்கள் தலைமை வகித்து மிக்க கம்பீரமாய் நடத்தி வைத்தார். அவை யனைத்தும் அச்சங்கத்தார் வெளியிட்டுள்ள வெள்ளிவிழா வெற்றி மலரில் காண்க.

அதன்பிறகு பிரஞ்சிந்தியா புதுவை வன்னியர் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் வெள்ளிவிழா புதுவை மாநகரில் 6.2.44ல் வெகு ஆடம்பரத்துடன் நிகழ்ந்த காலையும், நமது மதிப்பிற்குரிய மாட்சிமை மிக்க ராஜராஜ ஸ்ரீமான் தி.ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களே அக்ராசனராக அமர்ந்து கண்ணுக்கினிய காட்சியாக யாவருங் கண்டு கழிபேருவகை எய்தும் வண்ணம் நடந்தேறியது. அச்சிறப்பும் அங்கு அவருக்களித்த வரவேற்புப் பத்திரங்களும் புதுவை வன்னியர் கல்வி அபிவிருத்தி சங்கத்தார் வெளியிட்டுள்ளார்கள். மேற்படி சங்கங்களில் நிகழ்ந்தவைகள் அனைத்தையும் இங்கு வெளியிடுவதாயின் அதுவோர் பாரதமாக விரியும்.

1947 செப்டம்பர் மீ 28 ஆதிவாரம் சென்னை திருமயிலை மகாக்ஷேத்திரத்தில் கூடிய சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க 59-வது ஆண்டு விழாவிலும் மேற்படி சோழனார் அவர்களே அக்ராசனம் வகித்து மிகச் சிறப்புடன் நடத்தி வைத்தார்'' என்று 'திருக்கைவளம்' உரையாசிரியர் பக்கம் 52 இல் தெரிவித்திருக்கிறார்.

கோவிந்தசாமி படையாட்சி பின்னாளில் எழுதியது

மேலே குறிப்பிட்ட வாழ்த்துப்பாவை இயற்றிய சிதம்பரம் தியாகி து. கோவிந்தசாமி படையாட்சி அவர்கள் 1977-ல் எழுதியிருக்கின்ற குறிப்பினைக் கீழே காணலாம்.[39]

''சுபானு ஆண்டு ஆவணித் திங்கள் 3-ஆம் நாள் (19.8.43) மாண்புமிகு ஆண்டியப்ப சூரப்ப சோழனாருக்கு முடிசூட்டலும், மறுநாள் உடையார்பாளையம் சின்னதுரை கச்சிப்பள்ளி கொண்ட அரங்கப்ப காளாக்கத் தோழ உடையார் அவர்களின் புதல்வி திருமிகு. செல்வி ஜலஜகந்தி ஆயாள் அவர்களுக்கும் சிதம்பரம் வடக்கு ரதவீதியில், தற்சமயம் கூட்டுறவு அர்பன் பாங்க் இயங்கி வரும் கட்டிடத்தில், கோலாகலமாக மன்னர் மரபினரும் மற்றுள்ளவர்களும் கண்டுகளித்து பேரானந்தம் அடையும்படி திருமணம் நடைபெற்றது.

இவ்விரு வைபவத்தையும் கொண்டாடும் வண்ணம் மன்னர் மரபினர் புரட்டாசித் திங்கள் 18ஆம் நாள் சிதம்பரம் மெய்க்காவல் தெரு

தில்லையம்மன் தியேட்டரில் (இப்போது அகற்றப்பட்டது) அப்போது இவ்வூர் நீதிபதியாயிருந்த மரபுச் செல்வர் கஜபதி நாயகர் அவர்கள் தலைமையில் மாபெரும் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்கள் அரசருக்கு உரிய உடை, முடி, கேடயத்துடன் மேளவாத்தியம் முழங்க நகர் வலமாக வந்து வரவேற்கப்பட்டார்.

சிதம்பர மான்மியத்திலிருந்து நான் சேகரித்த குறிப்புகளின் அடிப்படையில் என்னால் தொகுக்கப்பட்ட பாராட்டு வாழ்த்துரையை நானே வாசித்தளித்தேன். அடக்கம் கருதியும் பொதுநோக்குடனும் ''மன்னர் மரபினர்'' எனக் குறிப்பிட்டேன். வாழ்த்துப்பாவுடன் 20 சவரனால் அழகாக ஆக்கப்பட்ட அணியாரம் காணிக்கையாக வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு வேண்டிய பொருள் மனமுவந்து மரபினர் கடமையுணர்வோடு வழங்கினார்கள்'' என்று க.சி.து. நாராயணசாமி எழுதிய 'ஆதியில் சிதம்பரம் கோயில் கட்டிய இரணியவன்மன் சோழ மன்னனான வரலாறு' என்னும் நூலுக்கு 1977ல் எழுதிய அணிந்துரையில் தெரிவித்திருக்கிறார்.

16-10-1943 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற
வட ஆர்க்காடு ஜில்லா
வன்னிகுல க்ஷத்திரிய சங்க வெள்ளிவிழாவில்
தலைமை தாங்கிய
பித்தர்புரம் ஜமீன்தார்
திரு. தி.ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்கள்
நிகழ்த்திய
தலைமைப் பேருரை

''தாய்மார்களே! வீரம் நிறைந்த தமிழ்ப் பழங்குடியில் தோன்றிய பெரியோர்களே!

இன்று நடைபெறும் வட ஆர்க்காடு ஜில்லா வன்னிகுல க்ஷத்திரிய சங்க வெள்ளி விழாவிற்கு என்னை யழைத்துத் தலைமைப் பதவியை யளித்துப் பெருமைப்படுத்தியதற்காக இச்சங்கத்தாருக்கும், வரவேற்புக் குழுவினருக்கும் என் உளமார்ந்த வணக்கம் உரியதாகுக.

தலைமை தாங்குவதற்கேற்ற அரும் பெருங் குணங்களும், பேராற்றலும் என்னிடம்.இல்லையெனினும் தாங்கள் என்பால் காட்டிய



அன்பினாலும் நங்குலம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டுமென்ற நிறைந்த அவாவினாலும் நான் இப்பெரும் பதவியை ஏற்க இசைந்துள்ளேன். தாங்கள் அனைவரும் உங்கள் அரிய அலுவல்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு இவண் குழுமியிருப்பதே நுங்கட்கு நம் குல முன்னேற்றத்திலுள்ள ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் பெரிதும் புலப்படுத்துகின்றது. மீண்டும் உங்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பர்களே!

உங்கள் வரவேற்பு வாழ்த்துப் பாக்களில் கண்ட உண்மைகள் அனைத்தும் எனக்குப் பெருமகிழ்ச்சியளிக்கின்றன. உண்மையில் நம் தமிழ்நாடு வீரம் செறிந்த நாடே. இந்நாடு வரலாறு ஏற்படுவதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிகத்தில் சிறந்து திகழ்ந்ததாகும். இவ்வுண்மை சங்க நூல்களாலும், கல்வெட்டுகளாலும், செப்பேடுகளாலும் நனி விளங்கும். மேலும் சிந்துநதி தீரத்தின் அருகிலுள்ள மஹஞ்சதாரோ, ஹாரப்பா முதலியவிடங்களில் அண்மையில் தோண்டி எடுக்கப் பெற்றப் பழமையான சின்னங்களாலும் தமிழரின் உயர்வான நாகரிகம் வெளியாகின்றது. இத்தகைய பழந் தமிழ்நாட்டை சேர, சோழ பாண்டியர் என்ற முடியுடை வேந்தர் மூவரும்

ஆண்டு வந்தனர். அவர்களுள் சோழ மண்டலத்தில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அரசு நடத்திவந்த சோழன் கரிகால் பெருவளத்தான் என்னும் வேந்தர் இமயம் வரை படையெடுத்துச் சென்று, வடநாட்டு மன்னர்களைப் புறங்கண்டு, பனிவரையில் புலிக்கொடி பொறித்து மீண்ட செய்தியை வரலாறு கூறாநிற்கும். பத்தாம் நூற்றாண்டில் சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்த இராசராச சோழமன்னன் ஒன்பது லட்சம் படையுடன் வடநாட்டின்மீது பொருது, மேலச் சளுக்கிய நாட்டையும், மற்றைய நாடுகளையும் வென்று வந்த வரலாறு ஈண்டு குறிப்பிடத்தக்கதே. இவரது மகனான இராசேந்திர சோழர் கங்கையையும் கடாரத்தையும் வென்று வெற்றித் தூண் நிறுவி, தம் புகழையும் வெற்றியையும் நிலைநாட்ட கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதுநகரையமைத்து அதையே தன் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்ததை வரலாற்று ஆராய்ச்சியாளருள் அறியாதவர் யாவர்? இம் மன்னரின் மகள் வயிற்றுப் பேரராகிய முதற் குலோத்துங்க சோழர் வடக்கேயுள்ள கலிங்க நாட்டையும், தெற்கேயுள்ள சிம்மளத்தையும் வென்று புகழோடு அரசாண்ட வரலாற்றை ஜெயங்கொண்டார் இயற்றிய 'கலிங்கத்துப் பரணி' என்னும் நூல் விளக்கும்.

சோழ மன்னர்கள் தங்கள் குலதெய்வமாகிய தில்லைத் திருக்கூத்தன் திருமுன்னர் ஐந்தெழுத்துப் படியில் திருமுழுக்கு செய்யப் பெற்று, அரசவையில் முடிசூட்டப் பெறுவது பண்டைய மரபு. இத்தனிச் சிறப்பு வேறெந்த மன்னர்கட்கும் உரியதல்ல. மேற்சொல்லிய சோழமன்னர் வழித்தோன்றலாகிய எனக்கு அம்மரபு பற்றி அண்மையில் (19-8-43) அஞ்செழுத்துப் படியில் திருமுழுக்கும், அரசவையில் முடிசூட்டு விழாவும் நடந்தேறியதை நீங்களனைவரும் அறிவீர்கள். இச்சிறப்பு எனக்கேயன்றி நம் குலத்துக்கே ஒரு பெரும் தனிச்சிறப்பெனக் கருதுகின்றேன்.

தற்காலத்தில் நம் நாட்டில் திகழும் உடையார் பாளையம், அரியலூர், சிவகிரி, ஏழாயிரம் பண்ணை, அளகாபுரி ஆகிய நகரங்களிலுள்ள குறுநில மன்னர்களும் நம் மரபினர் என்பது யாவரும் உணர்தற்குரிய செய்தியாகும்.

இனி தமிழ் மன்னர்களின் ஆட்சி காலங்களில் அமைச்சர்களாகவும், படைத் தலைவர்களாகவும், அரசியல் அதிகாரிகளாகவும், படை வீரர்களாகவும் அமர்ந்து அரசியல் அலுவல்களை செம்மை பெற

நடத்திய அறிஞர்களும், வீரர்களும், தலைவர்களும் பலர் இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையோர் அரசர் வழியில் வந்தவர் என்பதில் ஐயமுண்டோ? இல்லை. அத்தகைய தலைவர்களின் மரபில் தோன்றியவர்களே நம் குலத்தவராவர். மேலும் தமிழ் மன்னர் வரலாற்றை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளராய நம் குலப் பெரியார் உயர்திரு. T.V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் ஆக்கிய 'முதற் குலோத்துங்க சோழன்', 'பாண்டியர் வரலாறு' என்னும் நூல்களைப் பெற்றுப் படித்தறிய விழைகின்றேன்.

அறிஞர்களே!

நமக்குள் இப்பொழுது பழம்பெருமைகள் எல்லாம் எடுத்து விரித்துப் பேசுவதில் பயன் என்ன? வருங்காலத்தில் நாம் செய்ய வேண்டிய முக்கிய கடன்களே நம்முடைய குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நம்மவர்கள் இத்தகைய மாநாடுகளைப் பலவிடங்களில் கூட்டி சிறப்புறப் பேசி, பல முடிவுகள் கட்டி பின்னர் அவையனைத்தையும் அடியோடு மறந்து விடுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கதே. அவ்வண்ணமிராது இம்மாநாடு நம் குல முன்னேற்றத்திற்குரிய செயல்களை முடிவு செய்து; அவைகட்கிணங்க இச்சங்கத்தார் ஒரு சிறிதாயினும் செயலாற்றுவார் களாயின் அதுவே நம் மரபுக்கும் எனக்கும் செய்த ஒரு கைம்மாறாகும். இதனால் இச்சங்கத்தைக் குறை கூறுவதாக நீங்கள் எண்ணலாகாது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தொண்டாற்றி இவ்வமயம் வெள்ளி விழாக்கள் கொண்டாடுவதே இச்சங்கம் புரிந்துவரும் நற்றொண்டுக்கு ஒரு சான்றாகும். இத்துடன் நில்லாது இவ்வடார்க்காடு ஜில்லா வன்னிகுல மக்களின் ஒற்றுமையாலும், பெருமுயற்சியாலும், இச்சங்கம் தழைத்து பொன்விழா, வயிரவிழா, நூறாண்டு நிறைவுவிழா இவைகளைக் கொண்டாடி அரும்பெரும் செயலாற்ற வேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

கல்வி

''எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு''

என்ற தெய்வப் புலவர் மொழியின்படி இப்பரந்த உலகில் படித்தவர்களே யாண்டும் சிறப்பெய்துகின்றனர். எல்லோரும்

கற்றவர்களையே மானிடரில் உயர்ந்தவரெனக் கருதுகின்றனர் எனினும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம்மக்கள் பலர் கல்வியென்பதே இன்னதென்றறியாமல் இருக்கின்றனர். இதற்குக் காரணம் நம்முடைய வறுமையும் ஊக்கமின்மையுமாகும். நங்குலம் ஈடேற வேண்டுமாயின் நல்குலச் சிறுவர் சிறுமிகள் அனைவரும் கல்வி பயில வேண்டும். பெற்றோர்கள் இதில் அதிக ஊக்கங்காட்ட வேண்டும். குறைந்தது S.S.L.C. வகுப்பு வரையாவது ஒவ்வொருவரும் படித்தே தீர வேண்டும். உங்களில் பலர் இது முற்றுப் பெறுமா என்று ஐயுறலாம். வள்ளியோர் வழித் தோன்றலாகிய நீங்கள் நினைத்த எந்த காரியந்தான் முற்றுப் பெறாமல் போகும்? குறுநில மன்னர்கள், பெருநிலக்கிழவர்கள், பெருநிதி படைத்தவர் முதலானோர் கல்விக்கென தங்கள் வருவாயில் ஒரு சிறிது ஒதுக்குவார்களானால் குன்றத்தனை இருநிதி எளிதில் திரட்டலாமே. அதைக்கொண்டு எத்தனையோ ஏழைமக்கள் கல்வி பயிலலாம். நம் குலமக்கள் அதிகமாகப் பயிலும் உயர்நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் முதலிய கல்வி நிலையங்கள் உள்ள நகரங்களில் நம் குல மாணவர் உண்டு, இருந்து, கல்வி பயிலுவதற்கு மாணவர் விடுதிகள் அமைத்தல் வேண்டும்.

ஆண் மக்களைப் போலவே பெண்மக்களும் கல்வி பயிலுதல் இன்றியமையாத தொன்றாகும். நம்மவரில் பெண் மக்களில் படிப்பு வாசனையை அறியாதவர் எண்ணிறந்தவர்களாவார்கள். படித்த பெண்களை விரலால் எண்ணிவிடலாம். இது ஒரு பெருங் குறையாகும். நம்பெண்கள் குறைந்தது ஏழாம் பாரம் முடியவாகிலும் படித்தல் வேண்டும். அவ்விதம் கல்வி கொடுக்கப்பட்டால் அவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையை சிக்கன முறையில் நடத்துவார்கள். பெண்களுக்குரிய சீரிய ஒழுக்கம், குணம், கற்பு முதலியவற்றிற்கு கல்வி அடிப்படையாகும். ஆண்மகன் ஒருவன் கற்றால் கல்வி அவனோடு நிற்கும்; பெண்ணொருத்தி கற்றால் அவள் கல்வி அவள் குழந்தைகள் அனைவருக்கும் பயன்பட்டு குடும்பம் முழுவதும் கல்வி பரவும். மேலும் கல்வி கற்ற பெண்களே சுகாதார விதிகளை நன்கறிந்து அதன்படி ஒழுகுவார்கள். எனவே நாம் நம் சிறுமிகட்கு கட்டாயம் கல்வி கொடுக்க பெருமுயற்சி எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

வாக்குரிமை

தற்காலத்தில் ஒருவர் உயர்நிலையை யடைவதற்கு ஏற்ற கருவியாய் அமைந்திருப்பது வாக்குரிமைதான். எனினும் நம்மவர்களின்

வாக்குரிமை ஏராளமாய் இருக்கும் இடங்களில் கூட நம் குலத்தவர் சட்டசபை, ஜில்லா போர்டு, நகராண்மைக் கழகம் இவைகளில் உறுப்பினராவதற்கு நம் மக்களின் உதவியை நாடி நின்றால் அவர்கள் வெற்றி பெறுவது முயற்கொம்பாக முடிகின்றது. காரணம் நம்மவர்க்குள் ஒற்றுமை குன்றி நம்மவர்களே நமக்குள் எதிர்ப்பிரசாரம் செய்து நம்மவர் தோற்றுப் போகும்படி செய்கின்றனர். நம் குலத்தவர் என்று நன்றாக அறிந்திருந்தும் அவர்கள் நம் வகுப்பினரல்ல என்று சொல்லவும் முந்துகிறார்கள். என்னே இவர்களின் அறியாமையும் வீண் கட்சியும்! இது ஒருபுறமிருக்க கல்வியின்மையின் காரணமாக வாக்குரிமையின் வன்மையை யறியாத நம் குலத்தாரை ஏனைய மரபினர் முகமன் கூறியும், முடியுமானால் பொருள் கொடுத்தும் ஏமாற்றி வாக்குரிமையைப் பெறுகிறார்கள். ஆகவே பெரியோர்களே! நம் குலத்தவர் வாக்குரிமை அதிகமாயுள்ள இடங்களில் நாம் ஒன்றுபட்டு நம்மவர் ஒருவரை நிறுத்தி அவரை வெற்றி பெறச் செய்வதே நம் கடனாகும். நம் குலத்தவர் எக்கட்சியினராயினும் சரி அவர் நம் குலத் தொண்டையே பெரிதெனக் கருதிப் பாடுபடுவாராயின் அவருக்கே நம் வாக்குரிமை உரித்தாக வேண்டும்.

சிக்கனம்

நாம் திருமணம், மங்கல நீராட்டு, கம்ப சேவை, ஆடல், பாடல் முதலியவைகளில் நம்முடைய பொருள்களை வருவாய்க்கு மேல் பன்மடங்கு அதிகமாகச் செலவிடுகின்றோம். போலிப் புகழையும், பெருமையையும் பெற விரும்பி நம் நிலைமையை யுணராது கண்மூடித்தனமாகச் செலவிட்டு பின்னர் வருந்துகின்றோம். இதுமாத்திரமா? இறுதிக் கடன்களிலும் கூட பலர் பொருள்களைப் பெருவாரியாகச் செலவிடுகின்றனர். தங்களுக்குள்ள நிலம், மனை இவைகளை மாறி ஊர் மெச்சும்படி செய்து பின்னர் ஏக்கமுற்று தயங்கும் மாந்தர் நம்மவரில் பலருண்டு. வீண் வழக்குகளிலும் தம் பொருள்களை அதிகமாகச் செலவிடுகின்றனர். இவ்வாறு அழிவழக்காடி அழிந்தவர் நம்மில் ஆயிரக்கணக்காவர். இவையனைத்தும் நேர்மையான கல்வியின்மையால் ஏற்பட்டவைகளாகும், ஆகவே சடங்குகள் வழக்குகள் இவைகளுக்கு செய்யும் செலவை மிகக் குறைத்து சிக்கனமான வாழ்க்கையை நாம் நடாத்தல் வேண்டும்.

ஒற்றுமை

ஒன்றுபட்டால் அனைவரும் வாழ்வினை எய்துவோம். நம்மில் ஒற்றுமை நீங்கிடில் நாம் தாழ்வடைவோம். ஒற்றுமையில்லாத சமூகம் தாழ்வடைந்து அழிந்து போகும் என்பது நாம் கண்கூடாகக் காணும் ஓர் உண்மையாகும். அவ்வொற்றுமையைப் பரப்ப நம் மரபாருள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும், ஜில்லா 'தாலுக்கா' கிராமச்சங்கங்கள் நிறுவுதல் வேண்டும். அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு வைத்தும் கொள்ளல் வேண்டும். அக்கழகங்களின் முக்கிய நோக்கங்களுள் கல்வி முன்னேற்றமும், குல ஒற்றுமையும் முதன்மையாக இருத்தல் வேண்டும்.

வேளாண்மையும் கூட்டுறவு சங்கமும்

நம்மிந்தியா தொன்று தொட்டு ஒரு விவசாய நாடாகும். நம்மவர் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மர்கள் வேளாண்மை செய்பவர் களே. நாம் வேளாண்மையை மேன்மைக்குக் கொண்டு வர வேண்டும். பழைய முறைகளைக் கையாளுவதோடு புதிய முறைகளையும் பின்பற்றி அதிகமான ஊதியம் கிடைக்கும் வகையில் பயிரிடுதல் வேண்டும். நம்மில் அநேகர் வறுமையினால் வருந்துபவர்களாக இருக்கின்றனர். அது காரணம் பற்றித் தங்கள் நிலங்களைச் சரிவர பண்படுத்த முடியாத நிலையிலிருக்கின்றனர், நம் அரசாங்கத்தார் ஏழைகளுக்குக் கடன் சொற்ப வட்டியில் கொடுத்துதவ கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களில் நிறுவியுள்ளார்கள். அதனை நம்மவர் பெரும்பாலார் பயன்படுத்திக் கொள்ளாது வறிதே வாடுகின்றனர். இவ்விதக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராயமர்ந்து நமக்கு வேண்டிய நலன்களை நாம் தேடிக் கொள்ளலாம். நாம் பயிர் செய்யும் வகையைப் பெருக்கிக் கொள்ளவும், நம் நிலங்களை பண்படுத்திக் கொள்ளவும், விவசாய இலாக்கா அதிகாரிகளைக் கலந்து உரம், விதை, இவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். பயிர் செய்யும் புதிய முறைகளைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ளலாம். இவ்விதம் கூட்டுறவு சங்கம் விவசாய இலாக்கா இவைகளின் உதவியைக் கொண்டு நம் நிலங்களைப் பண்படுத்தி வேளாண்மை செய்து அதிக ஊதியத்தைப் பெற்று மேன்மையடையலாம்.

உலகப் போரும் நம்மவர் கடமையும்

கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வுலகம் பெரும் போரில் ஆழ்ந்திருக்கிறது. அநீதியே உருக் கொண்டாற்போல் அச்சுநாட்டார்

செய்யும் அட்டூழியங்கள் அனந்தம். நீதியே நெறியெனக் கொண்ட நேசநாட்டார் மிகவன்மையுடனும், பொறுமையுடனும் அவர்களுடன் போர்புரிந்து பல வெற்றிகளைப் பெற்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அச்சு நாட்டார்களின் ஆணவம் அடியோடு அழிக்கப்படும் என்பது திண்ணம். இப்போரில் நாம் நம்மாலியன்றவரை நம் மன்னருக்கு ஆள், பொருள், வாக்கு முதலியவற்றால் உதவிபுரிதல் நம் கடமையாகும். ஈண்டு நம் குல மக்கள் பலர் போரில் சேர்ந்து நம்மரசர் வெற்றிபெறும் துறையில் பாடுபடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மாட்சிமை தங்கிய நம் பேரரசர் ஆறாம் ஜார்ஜ் மன்னர் போரில் வெற்றி காண எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

பெரியோர்களே!

இதுகாறும் எனக்குத் தெரிந்தவற்றை யானறிந்தளவில் உங்கட்கு எடுத்துக் கூறினேன். யான் கூறியவற்றுள் பொருந்தாதவற்றைத் தள்ள உங்கட்கு உரிமையுண்டு. குலத்தொண்டில் ஈடுபட்டு இங்கு வந்துள்ள நீங்களனைவரும் புத்துணர்ச்சி பெற்று ஊக்கங் குன்றாதவர்களாய் என்றும் உழைக்குமாறு பெரிதும் வேண்டுகிறேன். இறைவன் அருள் புரிவானாக. வாழ்க தமிழ்! வாழ்க நம்மரபினர்! வாழ்க வையம்! வாழ்க நம் வேந்தர்!

(சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. 1943)"

சிதம்பரநாத சூரப்ப சோழனார் முடிசூட்டு விழா, திருமணம்:

உயர்திரு. ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களின் மூத்த குமாரர் திரு. சிதம்பரநாத சூரப்ப சோழனார் எம்.ஏ.க்கு காளயுக்தி ஆண்டு ஆனி மாதம் 2-ஆம் நாள் (16.6.78) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் 10.30-க்குள் சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தில் சங்காபிஷேகமும், ஆயிரக்கால் மண்டபத்தில் மணிமுடி சூட்டுவிழாவும் நடைபெற்றிருக்கிறது. இதற்கான அழைப்பிதழை பித்தர்புரம் அரண்மனையிலிருந்து திரு.ஆர்.ரெத்தினசாமி சூரப்ப சோழனார் வெளியிட்டிருக்கிறார்.[40] இவர் சிதம்பரநாத சூரப்ப சோழனாரின் பங்காளி ஆவார்.

அன்று நாழிகை 56 1/4க்கு மேல் 60-க்குள், அதாவது 17.6.78 அன்று விடியற்காலை, சிதம்பர நாத சூரப்ப சோழனார், எம்.ஏ. அவர்கட்கும், உடையார்பாளையம் சமஸ்தானம் ஜெயவிலாஸ் அரண்மனை ஜமீன்

உயர்திரு. சின்ன குழந்தை ராஜா அவர்களின் மூத்த குமாரி செல்வி சாந்திதேவி என்கிற ஜெலஜகந்தி ஆயாள் அவர்கட்கும் திருச்சி ஜில்லா உடையார் பாளையம் சமஸ்தானம் ஜெயவிலாஸ் அரண்மனையில் திருமணம் நடைபெற்றிருக்கிறது. இதற்கான திருமண திருமுகத்திலும் திரு.ஆர். ரெத்தினசாமி சூரப்ப சோழனாரே கையொப்பமிட்டுள்ளார்.[41] இத்திருமணம் பற்றிய செய்தி ஆனந்த விகடன் வார இதழில் வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. குமாரி சாந்தி தேவியின் தாயார் ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழனாரின் தமக்கை ஜெயலட்சுமியாவார்.

சிதம்பரநாத சூரப்ப சோழனாரின் குடும்பம்:



இடமிருந்து வலம்: மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனார், பட்டத்தரசி சாந்திதேவி ஆயாள், சக்கரவர்த்தி சூரப்ப சோழனார், ஐஸ்வர்ய ராஜலட்சுமி, மன்னர் மன்னன் சூரப்ப சோழனார்.

மகா.ரா.ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனாருக்கு மேலும் இரு குமாரர்களும் இரு குமாரத்திகளும் பிறந்துள்ளனர். மூத்த பிள்ளை ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழனாரையடுத்து திரு.ஆ. சம்பத்குமார் சூரப்ப சோழனாரும், திரு. இராஜகுமார் சூரப்ப சோழனாரும் அவர்களா வார்கள். குமாரத்திகளுள் மூத்தவர் செல்வி. ஜெயலட்சுமி, இளையவர் செல்வி ஜெயகுமாரி.

திரு. சம்பத்குமார் சூரப்ப சோழனார் அழிஞ்சி மங்கலத்தைச் சேர்ந்த இந்திராவதியைத் திருமணம் புரிந்திருக்கிறார். இவரது திருமணம்

கும்பகோணத்துக்கு அருகிலுள்ள உப்பிலியப்பர் கோயிலில் நடைபெற்றது. இவர்களுக்கு இரு குமாரர்கள் உள்ளனர்.

இராஜகுமார் சூரப்ப சோழனார் திருமணம்



இடமிருந்து வலம்: பட்டத்தரசி சாந்தி தேவி ஆயாள், மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனார், அவர் தாயார் ராசாத்தி ஆயாள், காட்டாகரம் இளவரசி மீனாட்சி ஆயாள், மகா-ரா-ரா-ஸ்ரீ இராஜகுமார் சூரப்ப சோழனாருடன் நூலாசிரியர்.

ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் இளைய குமாரரான திரு. இராஜகுமார் சூரப்ப சோழனார் அவர்கட்கும், திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், காட்டகரம் கெடியரசு பெற்ற கெங்கையாதிபதி சென்னாமலை கண்டிய பி. நடராஜ தேவர் அவர்களின் இளைய குமாரத்தி மீனாட்சி ஆயாள் அவர்களுக்கும் சிதம்பரம் அருள்மிகு தில்லையம்மன் ஆலயத்தில் யுவ ஆண்டு வைகாசித் திங்கள் 19-ஆம் நாள் (2.6.95) வெள்ளிக்கிழமை திருமணம் நடைபெற்றிருக் கிறது. விருந்து உபசாரம் சிதம்பரம் சபாநாயகர் தெருவிலுள்ள இந்து நாடார்கள் சங்க சமுதாயக் கூடத்தில் நடைபெற்றிருக்கிறது.

இதற்கான திருமண திருமுகத்தை மயிலாடுதுறை வட்டம் பந்தநல்லூருக்கருகிலுள்ள செல்லப்பன் பேட்டையிலிருந்து இவரது தமையன்கள் திரு. சிதம்பரநாத சூரப்ப சோழனாரும், திரு. சம்பத்குமார் சூரப்ப சோழனாரும் 8.5.95-ல் வெளியிட்டிருக்கிறார்கள்.[42]

பித்தர்புர அரசக் குடும்பத்தினர் தற்போதைய நிலை:

திருமிகு. சிதம்பரநாத சூரப்ப சோழனார் தற்பொழுது சிதம்பரத்திலும், திரு. இராஜகுமார் சூரப்ப சோழனார், நாகை மாவட்டம், செல்லப்பன்பேட்டையிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது தாயான ராஜாத்தி ஆயாளும் செல்லப்பன்பேட்டையில் மூன்றாம் குமாரரோடு வாழ்ந்து வருகிறார். அவருக்கு வயது தற்போது 78. இவர் இளைய குமாரத்தி ஜெயகுமாரி ஆயாளை அரியலூர் ஜமீனுக்கு மணம் முடித்துத் தந்திருக்கின்றனர்.

திரு. ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் முதல் குமாரரான திரு. சிதம்பரநாத சூரப்ப சோழனாருக்கு இரு ஆண்மக்களும், ஒரு பெண் மகவும் உள்ளனர். ஆண்களில் மூத்தவருக்குச் சக்கரவர்த்தி என்றும், இரண்டாமவருக்கு மன்னர் மன்னன் என்றும் பெயர். மகளின் பெயர் ஐஸ்வர்யா. இவர்களுக்குக் காதணி விழா ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 13-ம் நாள் பித்தர்புரத்தில் நடைபெற்றிருக்கிறது (26.1.93)[43]



காதணி விழாவின் போது...

முதல் குமாரர் திரு. சக்கரவர்த்திக்கு முடிசூட்டு விழா நடைபெறுதல் வேண்டும். போதிய நிதிவசதி இன்மையால் அவ்விழா தள்ளி போடப்பட்டு வருகிறது.

பித்தர்புரம் ஜமீன் முடிசூடுதல் பற்றி தர்ஸ்டன் கீழ்வருமாற குறிப்பிடுகிறார்.

"In like manner, they (the Pallis) claim that the founder of the Chidambaram temple, by name Sweta Varman, subsequently known as Hiranyavarman (sixth century A.D.) was a Pallava King. At Pichavaram, four miles east of Chidambaram, lives a Palli family, which claims to be descended from Hiranya Varman. A curious ceremony is even now celebrated at Chidambaram temple on the steps leading to the Central sanctuary. As soon as the eldest son of this family is married, he and his wife accompanied by a local Vellala, repair to the sacred shrine, and there, amidst crowds of their eastemen and others, a homam (sacrificial fire) is raised, and offerings are made to it. The couple are then anointed with nine different kinds of holy water, and the Vellala places the temple crown on their heads.The Vellala who officiates at this ceremony, assisted by the temple priests, is said to belong to the family of a former minister of a desendant of Hiranya Varman. It is said that as the ceremony is a costly one, and the expenses have to be paid by the individual who undergoes it, it often happens that the eldest son of the family has to remain a bachelor for half his life time."[43A]



மகா-ரா-ரா-ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார்

மேற்காணும் குறிப்பைத் தர்ஸ்டன் கி.பி. 1909ல் எழுதியிருக்கிறார். அவர் எழுதியதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாகத்தான் மகா-ரா-ரா-ஸ்ரீ சாமித்துரை சூரப்ப சோழகனார் முடிசூட்டிக் கொண்டிருக்கிறார். அவர் காலம் கடந்து முடி சூட்டிக் கொண்டிருப்பார் போன்று தெரிகிறது. அவர் முடிசூட்டிக் கொண்டபோது எடுக்கப்பட்ட நிழற் படமும் அதை உறுதி செய்கிறது. மேலும் அவர் முடிசூட்டிக் கொண்டு மூன்று ஆண்டுகள் கழித்ததும் தமது சகோதரர் தில்லைக் கண்ணு சூரப்பசோழகனாருக்கு இவரே முன் நின்று முடிசூட்டியிருக்கிறார் என்பதும் தெரியலாகிறது.

நான்காம் பகுதி

பிச்சாவரம் பாளையக்காரர்கள் சோழ வேந்தர் வழிவந்தவர்

பித்தர்புரம் பாளையக்காரர்கள் சோழர் வழிவந்தவர்கள் என்பதால்தான் இவர்களுக்கு மட்டும் தில்லை நடராஜர் ஆலயத்தில் பஞ்சாக்கரப் படியில் அமர வைத்து முடிசூட்டும் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

தில்லைத் திருத்தலத்தில் சோழர்களுக்கு மட்டும்தான் தில்லை மூவாயிரவர்களால் முடிசூட்டப் பெற்றிருக்கிறது என்பது சேக்கிழார் இயற்றிய 'திருத்தொண்டர் புராணத்தில்' கூறப்படும் கூற்றுவநாயனார் புராணத்தால் அறியப்படுகிறது.

கூற்றுவ நாயனார் புராணம்

சோழ நாட்டில் கூற்றுவர் என்பார் சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டு நாளும் சிவனை வழிபட்டு வந்தார். அவ்வாறு இருக்கும் நாளில் தம் படை வலிமையால் 'களந்தை' என்னும் பகுதிக்குத் தலைவரானார்.

பொருட்செல்வம் மிகுந்தது. நான்கு விதப்படைகளும் பெருகின. அண்டைப் பகுதி மன்னர்களோடு போரிட்டு வெற்றி பெற்றார். இருப்பினும் அரசர்க்குரிய முடி மட்டும் சூட்டிக் கொள்ளாமல் இருப்பது அவருக்கு ஒரு குறையாக இருந்து வந்தது.

கூற்றுவர் தமக்கு முடிசூட்டும்படி வேண்டல்

வழக்கமாகச் சோழ மன்னர்களுக்கு முடிசூட்டும் தில்லைவாழ் அந்தணர்களிடம் தமக்கு முடிசூட்ட வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார். அவர்கள் தாங்கள் சோழர்களுக்கேயன்றி வேறு எவருக்கும் முடிசூட்ட மாட்டோம் என்று கூறி மறுத்ததோடல்லாமல் மலைநாடு சென்று

விட்டனர். அதனைச் சேக்கிழார் பெருமான் தம் திருத்தொண்டர் புராணத்தில்,

''மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந்தணர் தம்மை வேண்ட அவரும் செம்பியர்தம்
தொல்லை நீடும் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோம் முடி என்று
நல்காராகிச் சேரலன்தன் மலைநா டணைய நண்ணுவார்''

என்று பாடியுள்ளார்.[44]

சிதம்பர புராணம்

முதற் குலோத்துங்கன் என்னும் அநபாயனின் முன்னோர் முடிசூட்டிக் கொள்ளும் ஐம்பதிகளுள் ஒன்றாகச் சண்டீசர் பிறந்த சேய்ஞலூரும் இடம் பெற்றிருந்ததாகச் சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார்.[45] பிற நான்கு பதிகளுள் ஒன்றாகத் தில்லை விளங்கி யிருக்கக் கூடும் என்பதைச் சிதம்பர புராணம் ஒருபாடலில் தெரியப்படுத்துகிறது.

''பரிதி குலந்தனிலுதித்துப் பரசமய இருளகற்றிப் பரமனாடும்
பொருவரு பேரம்பலமும் கோபுரமும், ஆலயமும் பொன்வேய்ந்
துண்மைச்
சுருதியுடன் சைவநெறி தழைத்தோங்கித் திருநீற்றுச் சோழன் என்று
குருமணிமா முடி புனைந்த குலோத்துங்க வளவனருள் குறித்து
வாழ்வோம்'' [45]

எனவே பித்தர்புரம் பாளையக்காரர்கள் சோழர் வழி வந்தவர் என்பதால் தான் அவர்களுக்கும் தில்லை நடராசர் முன்பாகப் 'பஞ்சாக்கரப்படியில்' அமர வைத்து முடிசூட்டப் பெற்றிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

கல்வெட்டுக்கள் தரும் சான்றுகள்

மேலும் சில கல்வெட்டுகள் மூலமாகவும் தில்லைத் திருத்தலத்தில் சோழ மன்னர்களுக்கு முடிசூட்டிய நிகழ்ச்சி தெரிய வருகிறது. கடலூர் மாவட்டம், திருமாணிக்குழி என்னும் ஊரில் உள்ள வாமனபுரீஸ்வரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில்[47],

''ஸ்ரீ ராஜகேஸரிபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் தில்லைத் திருநகர் சிறப்புடைத்ததாகத் திருமுடி சூடிய (ஸ்ரீ) குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு எட்டாவது...'' என்று குலோத்துங்கச் சோழன்

தில்லையம்பதியில் மணிமுடி சூட்டிக் கொண்டதால் தில்லைத் திருநகர் சிறப்புப் பெற்றது என்று கூறப் பெற்றிருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம், கோகர்ணேஸ்வரக் கோயிலை ஒட்டிய கற்பாறையில் வெட்டப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில்[48] தில்லை வாழந்தணர் மன்னர்களுக்கு முடி சூட்டிய செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் ''மாலை அணியப் பெற்ற மன்னரைத் தம் சிறப்புப் பெற்ற கைகளால் முடிசூட்டும் தில்லையைச் சேர்ந்த வேதியர் குடியில் வந்த பிராமணர்களைத் தென்கவிரை நாட்டில் குடியமர்த்தி'' அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தந்தமையைத் தெரிவிக்கிறது.

ஆதலால் தில்லை வாழ் அந்தணர்கள் சோழ மன்னர்களுக்கு முடிசூட்டும் சிறந்த நிலையில் இருந்தனர் என்பதும், சோழ வம்சத்தினருக்கு மட்டுமே அவர்கள் முடிசூட்டினர் என்பதும் போதரும்.

தில்லை நடராசர் சோழர்களின் குலதெய்வம்

சோழ மன்னன் விசயாலயன் முதல் ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் தங்கள் குல தெய்வமாகத் தில்லை நடராசரையே கொண்டிருந்தனர் என்பதும் கல்வெட்டுக்களினாலும், ஓவியத்தாலும் தெரிய வருகிறது.

கி.பி. 1118 முதல் 1135 முடிய ஆட்சி புரிந்த விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தி, அம்மன்னன் தம் குல தெய்வமாகிய தில்லை நடராசப் பெருமான் கோயிலில் செய்த திருப்பணிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அம்மெய்க்கீர்த்திப் பகுதி கீழ்க்காணுமாறு:

''தன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொன்னம்பலஞ்சூழ் திருமாளிகையும்
கோபுர வாசல் கூடசாலைகளும்
உலகு வலங்கொண்டொளி விளங்குநேமிக்
குலவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளிதழைப்ப விளங்கு பொன்வேய்ந்து
இருநிலந்தழைப்ப இமையவர் களிப்பப்
பெரி திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர் பூரட்டாதி உத்திரட்டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்

இம்பர் வாழ எழுந்தருளுவதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து''
என்பதாக.[49]

சோழர்களின் குலநாயகர் தில்லை ஆடவல்லான்தான் என்பதைத் தஞ்சைப் பெரிய கோயிலில் காணப் பெறும் சோழர் கால ஓவியத்தாலும்[50] உணரலாம்.

உண்ணாழியினையொட்டிய திருச்சுற்றின் இருபக்கச் சுவர்களிலும் தீட்டப் பெற்றுள்ள ஓவியங்களில் ஒரு பகுதியாக, சோழப் பேரரசன் இராசராசனும் அவனது பட்டத்தரசிகளும் தில்லை பொன்னம்பலக் கூத்தனை வழிபடுவதாக ஒரு ஓவியம் தீட்டப் பெற்றிருக்கிறது. அவ்வோவியம் சோழர்களுக்குத் தில்லை நடராசர், தம் குல நாயகராக விளங்கினார் என்பதை உறுதிப் படுத்தும் வகையில் உள்ளது.

பித்தர்புரம் பாளையக்காரர்களுக்கும் தில்லை நடராசமூர்த்தி, குல தெய்வமாக விளங்குகிற படியாலும் இவர்கள் சோழர்வழி வந்தவர்களே என்பது உணரற்பாலது.



தில்லை நடராஜரை ராஜராஜசோழன் தன் தேவியருடன் வணங்கும் காட்சி.
பழமையான இந்த ஓவியம் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலில் உள்ளது

ஐந்தாம் பகுதி

பிச்சாவரம் பாளையக்காரர்களின் மண உறவு

பிச்சாவரம் பாளையக்காரர்கள் தங்கள் பகுதிக்கு அருகில் இருந்த பிற பாளையக்காரர்களோடு மண உறவு கொண்டிருந்திருக்கிறார்கள்.

கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் குமாரர் மகா.ரா.ரா. ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார் அவர்கட்கும் விருத்தாசலம் முகாசாபரூர் ஜமீன்தார் பா.வா.ஜா. வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராய துரை பரம்பரையில் உதித்த இளவரசி இராசாத்தி (சின்ன பாப்பா) ஆயாளுக்கும் திருமணம் நடைபெற்றிருக்கிறது. மேலும் தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார் அவர்களின் தமக்கையை முகாசா பரூர் ஜமீனில் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அத்தோடு, மகா.ரா.ரா.ஸ்ரீ தில்லைக்கண்ணு சூரப்ப சோழனாரும் முகாசா பரூர் இளவரசி இராஜலக்குமியைத்தான் மணம் புரிந்திருக்கிறார்.

முகாசாபரூர் ஜமீன் அறக்கொடை:

விருத்தாசலம் முகாசாபரூர் ஜமீனும் அக்காலத்தில் (கி.பி. 18ம் நூற்றாண்டு) சிறந்த ஜமீனாக விளங்கியிருக்கிறது. இச்சமீனைச் சேர்ந்த வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராயர் தம் போர் திறத்தாலும், கோயில் திருப்பணிகளாலும் சிறந்து விளங்கியிருக்கிறார். இக்கச்சிராயர் சகாப்தம் 1672 -க்குச் சரியான பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள் 27 ஆம் நாள் (1750) முகாசாபரூர் சிவன் கோயில் மண்டபம் அமைத்ததை அங்குள்ள ஒரு கல்வெட்டினால் அறிய முடிகிறது.[51] அக்கல்வெட்டு,

"ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1672 செல்லா நின்ற பிரமோதூத வருஷம் ஐப்பசி மாதம் 27 பரூவூர் ராச ஸ்ரீ பொன்னம்பலக் கச்சிராயர் குமாரர் முத்து கிருஷ்ணப்ப கச்சிராயர் தர்மம்" என்று எழுதப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு மூலம் முத்துக்கிருஷ்ணப்ப கச்சிராயரின் தந்தை பொன்னம்பலக் கச்சிராயர் என்பது புலனாகிறது. இக் கல்வெட்டின் காலம் கி.பி. 1750. முத்துக்கிருஷ்ண கச்சிராயர் பற்றி தென்னார்க்காடு மாவட்ட விவர நூலிலும் விபரம் காணலாம்.

கச்சிராயர் தாயார் அறக்கொடை:

ஸ்ரீ முத்துக்கிருஷ்ணப்ப கச்சிராயரின் தாயார் பெரியம்மை அம்மாள் என்பது, அவர் கொடையளித்துள்ளதைத் தெரிவிக்கும் மற்றொரு கல்வெட்டினால் தெரிய வருகிறது.[52] இக்கல்வெட்டும் கி.பி. 1750-ல் (சகம் 1672) பொறிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ முத்து கிருஷ்ணப்ப கச்சிராயரின் உருவமும் (தூண் ஒன்றில்), தாயாரின் உருவமும் (விஷ்ணு கோயிலில்) புடைச் சிற்பங்களாகச் செதுக்கப் பெற்று காணப் பெறுகின்றன.

அன்னபூரணி அம்மாள் கொடை:

இவ்வூர் அம்மன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு சக ஆண்டு 1734ல் (கி.பி. 1812) தமிழ் ஆண்டு ஆங்கிரஸ ஆண்டு, ஐப்பசி மாதம் பொறிக்கப்பட்டு உள்ளது. இக்கல்வெட்டு அன்னபூரணி அம்மாள் அளித்த கொடையைப் பற்றி கூறுகிறது.[53] இவ்வமையார் யார் என்று அறிய இயலவில்லை. இச் சமீனில் கி.பி. 1908ல் பா.வா.சா. வீரசேகர முத்து கிருஷ்ண கச்சிராயர் என்ற ஜமீன்தாரரும்; கி.பி. 1930ல் முத்து கிருஷ்ண கச்சிராயர் என்ற ஜமீன்தாரரும் இருந்திருக்கிறார்கள். இவ்விருவரும் ஒருவராகவே இருந்தாலும் இருக்கலாம்.

அரியலூர் ஜமீனோடு மண உறவு:

கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்பசோழகனாரின் இளைய குமாரத்தி சௌபாக்யவதி ஜெயகுமாரி ஆயாளை அரியலூர் ஜமீன்தாரருக்கு மணம் முடித்துத் தரப்பட்டிருக்கிறது.

வடகால் ஜமீனோடு திருமண உறவு:

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிச்சாவரம் ஜமீனைச் சேர்ந்த இளவரசியை நாகை மாவட்டம், சீர்காழியை அடுத்த வடகால் ஜமீன் சுயம்பிரகாச ராவுத்த மீண்ட நயினார் திருமணம் புரிந்திருக்கிறார். கி.பி. 1919ம் ஆண்டில் வடகால் ஜமீனாக நடராஜ ராய ராவுத்தமிண்ட நயினார் அவர்கள் ஆட்சி செய்துள்ளார். இவரது வழி வந்தவராகச் சுயம்பிரகாச

ராவுத்தமிண்ட நயினார் இருக்கலாம். சுயும்பிரகாச ராவுத்தமிண்ட நயினாரின் தந்தை கிருஷ்ணசாமி ராவுத்தமிண்ட நயினார் என்றும், பாட்டனார் அரங்கசாமி ராவுத்தமிண்ட நயினார் என்றும், அவரது தாயார் மங்கத்தாயார் என்றும், முடிகொண்ட நல்லூர் ஜமீனைச் சேர்ந்த திரு. கி. ஸ்ரீதரன் அன்போடு எனக்கு அனுப்பி வைத்த வடகால் ஜமீன் மரபு வழிப்பட்டியல் மூலம் தெரிய வருகிறது.[54] வடகால் பாளையக்காரர்கள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி புரிந்திருக்கின்றனர். அவர்களது வரலாற்றை இந்நூல் ஆசிரியர் எழுதியுள்ள 'வன்னியர்' நூலில் காணலாம்.[55] கூடல் இருவாட்சிப் புலவர் இயற்றிய 'திருக்கை வளம்' 71 ஆம் பாடல்,

''திருவுறை இராயராவுத்தமிண்டனாருலா கேட்டுப்
பன்னீ ராயிரமாக்கங் கொடுத்த ரத்தினக்கை''

என்று இராய ராவுத்தமிண்டனாரின் கொடைத்திறத்தைப் புகழ்ந்துரைக்கிறது.[56]

வன்னியர் சங்கம் ஆண்டு விழா 1919ல் திருக்கழுக் குன்றத்தில் நடைபெற்றபோது வடகால் பாளையத்தைச் சேர்ந்த ஜமீன் நடராஜராய ராவுத்தமிண்ட நயினார் தலைமையேற்று வழிநடத்தியிருக்கிறார்.

உடையார் பாளையம் ஜமீனோடு மண உறவு:

உடையார் பாளையம் ஜமீன்தார்களுக்கு ஸ்ரீ யுவராங்கப்ப காலாக்கத் தோழர் காலம் தொட்டு பித்தர்புரம் பாளையத்தோடு நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. அதன் பயனாகத்தான் பித்தர்புரம் ஜமீன் பாளையக்காரர் கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனாரும் அவரது மூத்த குமாரர். கனம் மகா.ரா.ரா.ஸ்ரீ சிதம்பர நாத சூரப்ப சோழனாரும் உடையார்பாளையம் அரசகுமாரிகளைத் திருமணம் புரிந்திருக்கின்றனர்.

மயிலாடுதுறை பாளையக்காரரோடு மண உறவு:

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு வன்னியப் பாளையக்காரர் இருந்திருக்கிறார். இவருக்கு 'அஞ்சாத சிங்கம்' என்ற பட்டப் பெயர் உண்டு. இவர்கள் பெரிய வகுப்பு. சிறிய வகுப்பு என்று இரு பிரிவாகப் பிரித்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். பெரிய வகுப்பின் அரண்மனை தருமபுரம் மடம் உள்ள வீதியில் அமைந்திருக்கின்றது. சிறிய வகுப்பின் அரண்மனை மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடிக்குச் செல்லும் சாலையில் இருந்திருக்கிறது.

இம்மன்னர்களது கொடைத்திறம் 'திருக்கைவளம்' என்னும் நூலில் 61 ஆம் பாடலில் புகழப்பட்டிருக்கிறது.[57] அப்பாடல்,

'அஞ்சாத சிங்கர் தம்மேலரு நாம மாலைசொல
யெஞ்சலிலாப் பொன்கொடுத்த இன்பக்கை''

என்பதாகும்.

பித்தர்புரம் பாளையக்காரரின் இளவரசி சுயம்புவல்லி ஆயாள் என்பவர் மயிலாடுதுறை பாளையக்காரர் கந்தசாமி அஞ்சாத சிங்கம் என்பவரை மணந்திருக்கிறார்.[58]

கடலங்குடி ஜமீனோடு மண உறவு:

அதேபோன்று இதே மாவட்டத்தைச் சேர்ந்த கடலங்குடியில் உள்ள ஜமீன்தார்கள் பிச்சாவரம் பாளையக்காரர்களோடு மண உறவு கொண்டிருந்திருக்கின்றனர். இப்பாளையக்காரர்களுக்கு 'ஆண்டியப்ப உடையாரி' என்ற பட்டம் வழங்கி வந்திருக்கிறது. அண்மைக் காலத்தில் தில்லை முத்தப்ப ஆண்டியப்ப உடையாரி என்பவரும், முத்துக் குமாரசாமி ஆண்டியப்ப உடையாரி என்பவரும் வாழ்ந்திருக்கின்றனர். கடலங்குடி ஜமீன் தில்லைக் கோவிந்தராஜ ஆண்டியப்ப உடையாரியின் அத்தையும் உடையாரியின் மகளும் பிச்சாவரம் ஜமீனில் வாழ்க்கைப்பட்டிருக்கின்றனர்.[58ஏ]

முடிகொண்டநல்லூர் ஜமீனோடு மண உறவு:

நாகை மாவட்டம், மணல் மேட்டுக்கு அருகிலுள்ள முடிகொண்ட நல்லூரில் ஒரு ஜமீன் இருந்திருக்கிறது. இச் சமீனைச் சேர்ந்த திரு. கிருஷ்ணப்ப உடையார் சிறந்த காங்கிரஸ்காரராக விளங்கியிருக்கிறார். இவரது இளவல் திரு. இராஜப்பா என்பாரின் மகன் திரு. சுந்தரராஜன், பிச்சாவரம் ஜமீன் மைனர் சூரப்ப சோழனார் என்பாரின் மகளை மணம் புரிந்திருக்கிறார். இச் சோழனார் மயிலாடுதுறை பாளையக்காரர் கந்தசாமி அஞ்சாத சிங்கத்தின் மனைவி சுயம்புவல்லி ஆயாளின் சிற்றப்பா ஆவார்.[58பி]

ஆறாம் பகுதி

பிச்சாவரம் பாளையக்காரர்கள் பற்றி அறிஞர்களின் கூற்று

கவிச்சிங்கம் ராஜரிஷி அர்த்தநாரீச வர்மாவின் பாடல்:

பித்தர்புரம் பாளையக்காரர் உள்ளிட்ட வன்னிய பாளையக்காரர்கள் யார் யார் எங்கெங்கு ஆட்சி செய்தனர் என்பதை கவிச்சிங்கம் ராஜரிஷி சேலம் அர்த்தநாரீச வர்மா அவர்கள்,

''அரியலூ ராட்சி பெறு மழவர்கோவு
மளகைபுரிப் பாண்டியரு முடையார் தாமும்
பெருமைமிகு பித்தர்புரப் பிரானார் பாரூர்
பிறங்கு கச்சிராயர் சிவகிரி வாழிந்து
விரி மரபில் வழுதிகுல வேந்தர் தர்மும்
வென்றி வணங்கா முடியா ரூற்றங்காலிற்
பரமவீச் சுரவன்னி மன்னர் முன்னோர்
பகர் நமது குலவுறவிற் பவித்தாரன்றே''

என்று சிறப்பாகப் பாடியுள்ளார்.[57] இவர் கி.பி. 27.7.1874ல் பிறந்திருக்கிறார். கி.பி. 7.12.1964ல் வானுறையும் தெய்வமானார்.

இக்கவிஞரே தம் 'வாலிப கீதம்' என்னும் பாடலில்,

''செம்பியராயர்களெங்கும் பரவியே
சிறுபடையாட்சிகளாயிருப்பர்
அம்பலவாணர் முன்னாய் முடிசூடிய
ஆண்டியப்பதுரை யீண்டுளரே.''

என்று ஆண்டியப்ப சூரப்ப சோழனார் தில்லை அம்பலவாணர் முன்னிலையில் பஞ்சாக்கரப் படிமீது முடிசூட்டிக் கொண்டதைக் குறிப்பிட்டுள்ளார்.[60]

'தமிழ் மன்னர் வரலாறு' என்று தலைப்பிட்டுள்ள மற்றொரு பாடலில், 'சோழர்' என்னும் தலைப்பில்,

''அஞ்சு மன்றங்கள் ஆட்சிக்காதரவாய்
அமைத்துத் தமிழர் புகழ் விரித்தார்
அம்பலத்தாடுங் கூத்தர்பிரானுக்
கடிமை பரம்பரையில் தெரித்தார்
தாண்டவமூர்த்தியின் சந்நிதியெதிரே
தலைமுழுக்காடிவரும் மரபார்
பூண்டு மகுடமும் ராஜ சபைதனில்
புவிக்கிறையென வரும் உரவார்
நேற்று சிங்கமதி மூன்றினிற் பரம்பரை
நிருபர் அரியணையி லமர்ந்தார்
நிலவொளி குலமணி மகுடந்தனையே
நேய வுரிமையிற் சுமந்தார்
கச்சியுவரங்க காலாக்க தோழரின்
கன்னிகரந்தனைப் பிடித்தார்
மெச்ச உலகெலாம் ஆண்டியப்ப வேள்
வீதி யுலாவையும் முடித்தார்.''[61]

என்று பிச்சாவரம் பாளையக்காரர்கள் சோழர் பரம்பரையினர் என்பதையும், அவர்கள் தில்லை நடராசரைத் தங்கள் குலநாயகராகக் கொண்டவர்கள் என்பதையும், நடராசர் முன்பாக பிச்சாவரம் அரசர் ஆண்டியப்ப சூரப்ப சோழனார் சங்காபிஷேகம் பெற்று, முடிசூடி, ராஜசபையில் சிம்மாசனத்தில் அமர்ந்து அறக்கொடை புரிந்ததையும், உடையார்பாளையம் ஜமீன்தாரர் கச்சியுவரங்க காலாக்கள் தோழரின் மகளைத் திருமணம் புரிந்ததையும் அர்த்தநாரீச வர்மா விவரித்துள்ளார்.

வரலாற்றுப் பேரறிஞர் டி.வி.சதாசிவ பண்டாரத்தார் கூற்று:

பிச்சாவரம் (பித்தர்புரம்) ஜமீன்தாரர்கள் சோழர் வழியில் வந்தவர்களே என்பதை வரலாற்றுப் பேரறிஞர் திரு. தி.வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள், தாம் 27.2.1939ல் கும்பகோணத்தில் நிகழ்த்திய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[62]

''இவர்கள் (சோழர்கள்) வழியில் வந்தவரே சிதம்பரத்தைச் சார்ந்த பிச்சபுரத்தில் இப்போது சமீன்தாராக வாழ்ந்து வரும் குறுநில மன்னர் என்பது நாம் அறிந்து கொள்வதற்குரியதாகும். சோழ மன்னர்கள் தமது

குல தெய்வமாகிய சிதம்பர நடராச பெருமான் திருமுன்னர் முடிசூட்டப் பெறுவது பழைய வழக்கம். பிறவேந்தர்கள் அங்கு முடிசூடும் பேறு பெற்றிருக்கவில்லையென்பது பெரிய புராணத்திலுள்ள கூற்றுவ நாயனார் வரலாற்றால் நன்கு அறியக் கிடக்கின்றது. எனவே சோழ மன்னர்கட்கு மாத்திரம் ஏற்பட்டிருந்த தனி உரிமை அஃது என்பது இனிது பெறப்படும்.

அத்தனியுரிமையை இன்றும் உடையவர்களாயிருப்பவர் பிச்சபுரத்தில் வாழும் குறுநில மன்னர் என்பது யாவரும் அறிந்ததொன்றாகும். சில ஆண்டுகட்கு முன்னர் காலஞ்சென்ற பிச்சபுரம் மன்னர் 'சாமிதுரை சூரப்ப சோழனார்' சிதம்பரம் நடராசப் பெருமான் திரு முன்னர் பஞ்சாக்கரப் படியில் (பஞ்ச அக்ஷரப்படியில், அதாவது நமசிவாய என்ற ஐந்தெழுத்துப் படியில்) அபிசேகஞ் செய்து முடிசூட்டப் பெற்றதை நேரில் பார்த்து மகிழ்ந்தவர் பலர் இன்னும் இருக்கின்றனர். எனவே பிச்சபுரம் சமீன்தார் பண்டைத் தமிழ் வேந்தர்களுள் ஒருவரான சோழ மரபினர் என்பது ஐயமறத் தெளிதிற் புலப்படுதல் காண்க'' என்பது அவர் கூற்று.

டாக்டர் செ.இராசு அவர்களின் கருத்து:

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை மேனாள் பேராசிரியர் முனைவர் செ. இராசு அவர்கள் ஒரு கருத்தரங்கில் கீழ்க்காணும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

''சோழருக்கு அன்றி முடிசூடாத் தில்லை மூவாயிரவர் பிச்சாவரம் ஜமீன்தாருக்கு முடிசூட்டுவதாலும், அப்போது புலிக்கொடி அளித்தலினாலும், வளவன் என்ற பெயர் உள்ளமையாலும், தில்லை நிர்வாகம் பெற்றிருந்த காரணத்தாலும், தில்லை நடராசரைக் குல தெய்வமாகக் கொண்ட காரணத்தாலும், தில்லைக் கோயில் சாவியை வைத்திருந்த உரிமையாலும், தில்லைத் தீட்சிதர்கள் கட்டுப்பட்டிருந்தமையாலும், சோழனார் என்ற பெயர் பெற்றிருப்பதாலும், பிச்சாவரம், ஜமீன்தார் மரபினரே சோழர் மரபினர் என்பது பெறப்படுகிறது.''[62ஏ]

தீவுக்கோட்டை

பித்தர்புரம் பாளையக்காரர்கள் நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்தில், பித்தர்புரத்துக்குத் தெற்கில் கொள்ளிடம் ஆறு கடலில் சேருமிடத்தில் அமைந்துள்ள தீவில் அரண்மனை அமைத்து, அதற்குத் தீவுக் கோட்டையென்றும், தீவுப் பட்டினம் என்றும் பெயரிட்டு அங்கு வாழ்ந்து

வந்தார்கள் என்பது செவி வழிச் செய்தி. இவ்வரண்மனையில் வசித்து வந்த 'சோழகன்' என்பான் சிற்றரசனாக இருந்து ஆட்சி செய்தான் என்றும், அவன் இராவணன் போன்று பெரும் பலசாலியாக இருந்தான் என்றும் வழங்கப்படுகிறது. இக்குறுநில மன்னர் செஞ்சியிலிருந்த கிருஷ்ணப்ப நாயக்கனுக்குக் கப்பம் கட்டிக் கொண்டு, செஞ்சியின் ஒரு பகுதியை ஆண்டு கொண்டிருந்ததாக வரலாறு கூறுகிறது என்று 'திருவேட்கள வரலாறு' என்னும் நூலில் அந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[63] மேலும் ஜாதி சங்கிரகசாரம் ஆசிரியர் இத்தீவு கோட்டை இரண்யவன்மன் சந்ததியார்களுக்கு இரண்டாவது தலைநகரமாக விளங்கியது என்று எழுதியுள்ளார்.[63ஏ]



மகா-ரா-ரா-ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார்

ஏழாம் பகுதி

பிச்சாவரம் ஜமீன் பற்றிய சில ஆவணங்கள்

அரசின் வருவாய்த்துறை கி.பி. 1844 மார்ச் திங்கள் 4 ஆம் நாள் தம் கடித எண். 176ல் பித்தர்புரம் ஜமீனுக்கு அதுவரை வழங்கி வந்த பென்ஷன் தொகையை முன் தேதியிட்டு உயர்த்தியும், அதன்மூலம் கிடைக்கும் பென்ஷன் நிலுவைத் தொகையை கணக்கிட்டுக் கூறியும் வெளியிட்டுள்ள அரசு ஆணை கீழே தரப்பட்டுள்ளது.[64]

Revenue Department

No.176

Extract from the minutes of consultation under date 4th March 1844.

Read the following:

Proceedings of the Board of Revenue submitting a letter from the Collector of South Arcot and recommending that sanction may be granted from the payment of certain cavil pension from the commencement of Fusly 1252 and also recommending that the pension granted to the cavilgar of Periya Vagapoo may be increased to Rs.771-9-8 and paid in arrear from the date from which it was conferred.

Para 1. The most noble the Governor in Council sanctions the life pensions recommended by the Board of Revenue in para 1 of the foregoing proceedings amounting in the aggregate to Rupees (1073 - 10-8) one thousand and seventy three, annas ten and Pice Eight and authorizes payment of the same being made from the commencement of Fusly 1252.

2. His Lordship in Council also grants authority for increasing the pension authorized to the family of the late Pitchavaram Cavilgar from Rupees 700-11-8 to Rupees (771-9-8) seven hundred and seventy one, annas nine and Pice Eight, in arrear from the 16th June, 1842 the date on which the former amount was sanctioned.

(Signed) G.L. Drewery

Chief Secretary

/True copy/

Reclan

Under Secretary to Government

மேற்காணும் அரசு ஆணையின்படி 1842 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து, பிச்சாவரம் அரசர் இறந்துவிட்ட பிறகு, அவர் குடும்பத்துக்கு ஓய்வூதியத் தொகை ரூபாய் 700 அணா 11 பைசா 8 லிருந்து ரூபாய் 771 அணா 9 பைசா 8 ஆக உயர்த்தப்பட்டதும், அதன் மூலம் கிடைக்கப் பெறும் நிலுவைத் தொகை ஆகியவற்றையும் கூட்டி ரூபாய் 1073 அணா 10 பைசா 8 ஐ 1252 ஆம் பசலி முதல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. இந்த உண்மை நகல் 1893 ஆம் ஆண்டு பிச்சாவரம் ஜமீனுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடும் சாமித்துரை சூரப்ப சோழனாரின் தந்தை ஆண்டியப்ப சூரப்ப சோழகனார் காலத்தோடு முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆதலால் பித்தர்புரம் ஜமீன் இராமபத்திர சூரப்ப சோழகனாரின் பெயரனும், ஆண்டியப்ப சூரப்ப சோழகனாரின் மகனுமான சாமிதுரை சூரப்ப சோழகனார் கி.பி. 1893 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் தமக்கு ரொக்கமானியம் கேட்டு அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார். அதில் கி.பி. 1750 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் தேதி பித்தர் புரம் ஜமீனுக்கு கவர்மெண்டார் ஒரு உடன்படிக்கை எழுதித் தந்திருக்கின்றனர் என்பதும், அதன்படி துமால் மானியமாக 766 காணி நிலங்களும் மற்றும் பலவித வரும்படிகளும் பித்தர்புரம் பாளையக்காரர்களுக்கு

இராமபத்திர சூரப்ப சோழகனார் காலம் வரை வழங்கப் பெற்றது என்பதும், அதற்குப் பிறகு ஆண்டியப்ப சூரப்ப சோழகனார் காலத்தில் மீண்டும் விண்ணப்பித்ததால் ஜமீனுக்குக் கிடைத்துவந்த வரும்படி மற்றும் மானிய நிலங்களுக்குப் பதிலாக வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 777-9-8 பைசா வரும்படி கொடுத்து வந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. சாமித்துரை சூரப்ப சோழகனார் எழுதிய அவ்விண்ணப்பம் கீழ்வருமாறு:[65]

''தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலுகா பிச்சவரம் பெரிய வகுப்பு பாளையகீர் இறந்த ஆண்டியப்ப சூரப்ப சோழகனார் குமாரர் சாமிதுரை சூரப்ப சோழகனார் மிகவும் வணக்கமாய் எழுதிக் கொண்ட விண்ணப்பம்.

1. கவர்ன்மெண்டார் அவர்களால் என் முன்னோர்களான சூரப்பச் சோழகனார் அவர்களுக்கு 1750 ஜூன் மாதம் 1 உ யில் எழுதிக் கொடுத்திருக்கிற உடன்படிக்கையில் கண்ட படிக்கு புத்திர, பௌத்திர பாரம்பரியமாகவும் எந்த காலமும் சந்திரன், சூரியன் உள்ளவரையிலும் அனுபவித்துக் கொள்ளும்படி அப்போது துமால் மான்யமாக விடப்பட்டிருந்த நஞ்சை 766 காணி நிலங்களையும் பலவித வரும்படிகளையும் என் பாட்டனார் இராம பத்திர சூரப்பச் சோழகனார் இருந்த வரையில் அனுபவித்து வந்தபடிக்கு பின்னிட்டும் நாங்கள் அனுபவித்துக் கொண்டு சுகத்திலிருக்க வொட்டாமல் என் பாட்டனார் இறந்தவுடனே அவைகளை ஜப்தி செய்து சர்க்காரில் சேர்த்துக் கொண்டு விட்டார்கள்.

2. அந்தக் காலத்தில் மைனராகவிருந்த எனது தகப்பனார் சுமார் 1 வருஷத்திற்கு முன் இறந்து போன ஆண்டியப்ப சூரப்ப சோழகனார் தாவா செய்ததின் பேரில் அந்த வரும்படி, மான்ய நிலங்கள் இதுகளுக்குப் பதிலாக வருஷம் 1- க்கு ரூபாய் 777 - 9 - 8 வீதம் எனது தகப்பனார் இருந்த வரையில் எங்களுக்கு வரும்படி கொடுத்து வந்தார்கள்.

3. எனது தகப்பனார் இறந்து பிறகு அந்த வரும்படியை என் பேரில் ஜாரி செய்யும்படி உத்திரவாகுமென்று இதுவரையில் எதிர்பார்த்தும் ஒன்றும் எனக்குக் கிடைக்கவில்லை.

4. அதினால் பாளையகீர் என்கிற கவர்ன்மெண்டாரவர்களால் பட்டத்தைப் பெற்று பெருமை பொருந்திய எங்கள் குடும்பத்தின் சவரக்ஷணைக்கும் யோக்கியதைக்கும் மிகவும் குறைவாகயிருந்து கொண்டிருக்கிறது.

5. இந்த ராஜாங்கத்திலும் அனேக ராஜாங்கங்களிலும் எங்களைப் போலொத்த பாளையப் பட்டுகளுக்கு ஆதியில் விடப்பட்டிருந்த வரும்படி, மான்ய வரும்படி இவைகளை அவர்கள் சந்ததியார்களுக்கே நிலைநிறுத்தி சுகத்திலிருக்கும்படி செய்து வைத்திருக்க, எங்கள் குடும்பத்திற்கு மாத்திரம் அந்தப்படி அனுபவிக்கும்படி செய்து வைக்காமல் வரும்படி மான்யம் வகையறாக்களை ஜப்தி செய்து அதற்குப் பதிலாக ரொக்க வரும்படி கொடுத்து வந்தது எங்களுடைய துரதிர்ஷ்டமாக இருந்தபோதிலும் அந்த ரொக்க வரும்படியாவது எங்கள் தகப்பனாருக்குப் பின்னிட்டு நான் அடையும்படி உத்தரவு பிறப்பிவிக்காமலிருப்பது என்னுடைய கால வித்தியாசமாகும். எங்களுடைய கவர்தையான குடும்பத்தின் சவரக்ஷணைக்கு மிகவும் கஷ்டமாயும் இல்லாமலுமிருக்கிறது.

ஆகையால் எங்கள் பெரியோர்களுக்கு ஆதியில் மான்யம் வகையறா விடப்பட்டும் பின்னிட்டு அதை ஜப்தி செய்து ரொக்க வரும்படி கொடுக்க உத்திரவு செய்தும் இருப்பதுகளுக்குண்டான சகல ரிகார்டுகளையும் பார்வையிட்டு எனது தகப்பனார் அடைந்து வந்தபடிக்காவது ரொக்கவரும்படியை நானும் அடைந்துவர செய்விக்க வேண்டியதாக..... அவர்களுடைய மேலான கனத்தைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன். (புள்ளி வைக்கப்பட்டுள்ள இடம் யாதும் எழுதாமல் விடப்பட்டிருக்கிறது)

அவ்விண்ணப்பத்துக்கு 1893ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2 ஆம் நாளில் அரசு வருவாய்த்துறை எழுதியுள்ள கடிதம் ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. அவையாவன:

ஆங்கிலத்திலுள்ளது.

ரெவின்யூ போர்டு ஆபிஸ், மெட்ராஸ் முத்திரை உள்ளது.

(Revenue Board Office Madras)

Proceedings of the Board of Revenue

(Land Revenue)

2nd October 1893

No. 3086. Routine

Read

Petition from Samidurai Surappa Solaganar son of Andiappa Sura Solaganar Poligar of Pichavaram Chidambaram Taluk South Arcot Dt. dated (1893)

Endorsement:

Rejected not being accompanied by the originals or certificates and duly stamped copies of orders of the local officers including the Collector whom the petitioner should address in the first instance.

2. Petitioner is however informed (that the petition be sent to) Government direct, regarding the allowances.

W.S. Mayor,
Agriculture Secretary.[66]

To

Petitioner

தமிழில் உள்ளது.

ரெவின்யூ போடாரவர்களின் புரோசீட்டிங் நகல்

லாண்டு ரெவினியூ 1893 அக்டோபர் 2 நெ. 3086 ருட்டீன்

தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்கா பிச்சாவரம் பாளையக்காரர் ஆதியப்ப சூரசோளகானாரி குமாரர் சாமிதுரை சூர சோளகனாருடைய விண்ணப்பம் வாசிக்கப்பட்டது.

என்டார்ஸ்மெண்டு. முதலில் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டிய கலைக்ட்ர் முதலிய லோக்கல் அதிகாரிகளின் உத்திரவுகளுடைய ஸ்டாம்பொட்டிய நகல்களும் மூலாதார ரெக்கார்டுகளும் அனுப்பாததினால் தள்ளப்பட்டது. என்றாலும் அலவன்ஸ் சம்பந்தமாய் கவர்ண்மெண்டு அவர்களுக்கு நேரே விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டுமென்று விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. டபிள்யூ. எஸ். மேயர் கையொப்பமென்று ஆக்டிங் செக்ரட்டரி.[67]

எட்டாம் பகுதி

பிச்சாவரம் ஜமீன் தாழும் நிலை

தில்லைக்கண்ணு சூரப்ப சோழகனாரின் தந்தை ராமபத்திர சூரப்ப சோழகனார் 1918ல் சில சொத்துக்களை கதிரேசஞ் செட்டியாரிடம் அடமானம் வைதது 20.11.30 முடிய மீட்க முடியாமல் இருந்ததால் 12.11.32ல் பொது ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது.[68]

19.3.25ல் உடையார்பாளையம் ஜமீன் கச்சி சின்ன நல்லப்பகாலாக்கத் தோளுடையாருக்கு ராமபத்திர சூரப்ப சோழகனார் வகையறா சில சொத்துக்களை ரூபாய் 412க்கு அடமானம் வைத்திருக்கிறது. அதுவும் மீட்க முடியாமல் பொது ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது.[69]

தில்லைக்கண்ணு சூரப்பசோழகனார் காலத்தில் தமக்குச் சிதம்பரத்தில் வெல்லப்பிறந்தான் முதலித் தெருவைச் சேர்ந்த தைக்கால் சந்தில் இருந்த வீட்டையும் மற்றும் சில மனைகளையும் ரெத்தின சபாபதி பிள்ளை என்பாரிடம் ரூ.1,87,000க்கு 1930க்கு முன்பாக அடமானம் வைத்திருக்கிறார். அவ்வடமானம் மீட்காத காரணத்தால் 2.12.1931ல் அரசு பொது ஏலத்தில் விட்டிருக்கிறது.[70]

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் நடராஜாவுக்குக் கட்டளைத் தர்மம் செய்து வரும்படி சிதம்பரம் வட்டம் பண்ணப்பட்டில் இருந்த தம் நிலங்களை சுப்பிரமணியப் பிள்ளை என்பாருக்கு ரூ.2,00,000க்கு அடமானம் வைத்திருந்ததும், மீட்டுக் கொள்ளாத காரணத்தால் அரசு பொது ஏலத்தில் 2.12.1931ல் விட்டிருக்கிறது.[71]

தம் சொத்துக்கள் பொது ஏலத்தில் விடப்பட உள்ளன என்ற அவமானத்தைத் தாங்க முடியாமல் தில்லைக்கண்ணு சூரப்ப சோழகனார் தம் கையில் அணிந்திருந்த வைர மோதிரத்தை விழுங்கி உயிர் விட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.[72]

அப்போது ஆண்டியப்ப சூரப்ப சோழகனார் சிறுபிள்ளையாக இருந்த காரணத்தால் கி.பி.1930ல் முகாசாபரூர் ஜமீன் முத்துகிருஷ்ண கச்சிராயர் கார்டியனாக இருந்திருக்கிறார்.[73]

பித்தர்புரம் ஜமீன் சொத்துக்கள் பொது ஏலத்துக்கு விடப்பட்ட பத்திரத்தில் நல்லநாயக சூரப்ப சோழகனார் நிலமும் ஜெயலட்சுமி ஆயாள் நிலமும் எல்லைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.[74] உலக்கண்ணு சூரப்ப சோழகனார்க்கு பாப்பு சாயபு என்பார் குத்தகைப் பத்திரம் எழுதித் தந்திருக்கிறார்.[75] மேற்படி சோழகனார்கள், ஆட்சி புரிந்த ஜமீன்தார்களுக்குப் பங்காளிகளாக இருந்திருக்கலாம். ஜெயலட்சுமி ஆயாள் ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் மூத்த மகள்.

ஆண்டியப்ப சூரப்ப சோழனார் தம்மகளுக்கு சீதனம் வழங்கியது:

1960ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் பிச்சாவரம் பெரிய வகுப்பு பாளையகிரி ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் இளைய குமாரத்தி க்ஷத்திரியர் சிவமதம் மைனர் சுமார் 12 வயதுள்ள **கண்ணா என்கிற ஜெயகுமாரி ஆயாளுக்கு,** ஸ்ரீ தில்லைக் கண்ணு சூரப்ப சோழனார் குமாரர் ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் தம் அரசி ராஜாத்தி ஆயாளைக் காப்பாளராக நியமித்துத் தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதித் தந்திருக்கிறார்.[76]

அவர்எழுதித் தந்துள்ள சொத்துக்களின் அன்றைய மதிப்பு ரூ.3500.00 என்றும் தரப்பட்டிருக்கிறது.

இப்பத்திரத்தில் சாட்சிக் கையொப்பம் ரத்தினசாமி சூரப்ப சோழனார் மகன் சிதம்பரநாத சூரப்ப சோழனார் என்பவர் இட்டிருக்கிறார். இவர் பிச்சாவரம் சின்ன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

பிச்சாவரம் பாளையக்காரர், வன்னியர்:

''1938 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31 ஆம் நாள் திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் தாலுகா கஸ்பா உடையார் பாளையத்திலிருக்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ கச்சி பள்ளிகொண்ட ரெங்கப்ப காளாக்க தோழ உடையார் அவர்கள் பாரியை பிரம்ம வன்னிய க்ஷத்திரியர் சிவமதம் சுகஜீவனம் மகா-ரா-ரா-ஸ்ரீ ரெங்கனாயகி ஆயாள் அவர்களுக்கு:

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகா பந்தனல்லூர் மாகாணம் காவனூர் வட்டம் திருவம்ம நல்லூர் கிராமத்திலிருக்கும் சட்டய படையாச்சி குமாரன் வன்னிய ஜாதி சிவமதம் பயிர் செயல் நல்ல தம்பி படையாச்சி யெழுதி கொடுத்த தென்னை மரம் மாமரம் வகையறா குத்தகைப் பத்திரம்.''[77]

உடையார் பாளையம் ரெங்கநாயகி ஆயாள் மகள் ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் மனைவி இராஜாத்தி ஆயாள்:

ஆதலால் பிச்சாவரம் பாளையக்காரரும் வன்னிய மரபைச் சார்ந்தவர் என்பது உறுதியாகிறது.

பேரன் திருமணத்துக்காக நிலத்தை அடமானம் வைத்து ரூ.10,000 பெற்றது.

''1978 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் திருச்சி ஜில்லா ஸ்ரீரங்கம் மன்னார் பிள்ளை தெருவில் வசிப்பவரும் தற்சமயம் தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் தாலுக்கா ராஜகோபாலபுரத்தில் வசிக்கும் முத்துசாமி குமாரர் ஆரூரான் சுகர்சில் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கும் ராமசாமி அவர்களுக்கு கும்பகோணம் தாலுகா 23 நெம்பர் கீழ்மாந்தூர் வட்டம் செல்லப்பன் பேட்டை கிராமத்தில் வசிக்கும் உடையார் பாளையம் லேட் கச்சி பள்ளி கொண்ட ரெங்கப்ப காழாக்க தோழ உடையார் அவர்கள் பாரியை ரெங்கனாயகி ஆயாள் தன் பேரன் (ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழகனார்) கல்யாண சம்பந்தமான சிலவுகளுக்காக நஞ்சை 3 ஏக்கர் 44 சென்ட் நிலத்தை 3 வருஷ கெடுவுக்குப் போக்கியமாக வைத்து அதன் பேரில் கடனாகப் பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டது ரூ.10,000 (பத்தாயிரம் ரூபாய்).''

ரெங்கநாயகி அம்மாள் தம் இடது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளார். இவர் அரியலூர் ஜமீனில் பிறந்தவர்.

1981 ஜூன் மாதம் 30 ஆம் தேதி போக்கியத்தில் கண்ட தொகை ரூ.10,000 ரொக்கமாக வந்து சர்வ வில்லங்க சுத்தியாகக் கணக்கு தீர்ந்து போக்கிய பத்திரம் ரத்தாகி விட்டது.[78]

காயத்ரி அம்மன் கோயிலைக் கட்டியது:

சிதம்பரத்தின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள காயத்ரி அம்மன் கோயில் பித்தர்புரம் ஜமீன் சாமித்துரை சூரப்ப சோழகனார் காலத்தில்



காயத்ரி அம்மன் கோவில்

கட்டப் பெற்றது என்பதும் அதன் வழிபாட்டுச் செலவிற்காகச் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள துணிசிரமேடு கிராமத்திலிருந்த தங்கள் நிலங்களில் சிலவற்றைக் கொடை அளித்திருக்கிறார் என்பதும் செவிவழிச் செய்தியாகப் பெறப்படுகின்றது. அக்கோயிலில் வழிபாடு செய்யும் தீட்சதரும் அக்கோயில் ஜமீனுக்குச் சொந்தமானது என்பதை ஒப்புக் கொள்கிறார். சிதம்பரம் நகரமன்ற முன்னாள் தலைவர் வி. எம். எஸ். சந்திரபாண்டியனும் தாம் சில ஆவணங்களைப் பார்த்ததாகவும், காயத்ரி அம்மன் கோயிலைப் பித்தர்புரம் ஜமீன் கட்டி அளித்திருப்பது உண்மைதான் என்றும் கூறினார்.

தில்லை கைக்கோளர்க்கு (முதலியார்) உதவியமை:

1844 ஆம் ஆண்டு சிதம்பரம் நகரில் கைக்கோளர் சமூகத்தினர் ஒருவரின் திருமண ஊர்வலத்தின்போது, வேளாளர்களுக்கும் கைக்கோளர்களுக்கும் இடையே தகராறு மூண்டிருக்கிறது. கைக்கோளர் வேளாளரளவிற்குப் போதுமான பொருளாதார வசதி இல்லாதிருந்த காரணத்தால் வன்னியரிடம் முறையிட்டிருக்கின்றனர். வன்னியர் குப்பு நாயகர் தலைமையில் நடந்த பஞ்சாயத்தில் வேளாளருக்கு எதிர்ப்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதாம். ஆதலால் வேளாளர் கூலிப்படையை ஏவி

கைக்கோளருக்கும், வன்னியருக்கும் தொல்லை தந்திருக்கின்றனர். வன்னியர் பிச்சாவரம் ஜமீன்தாரிடம் தெரிவித்து, வன்னியர் தளபதி வடமலையுடன் சமரசம் பேசச் சென்றபோது வடமலையை வேளாளர்கள் சதி செய்து ஆதிதிராவிடர் துணையுடன் கொலை செய்து விட்டனராம்.

பின்னர், வன்னியர் வெகுண்டெழுந்து திரு. பூங்காவனம், புதுவராயன் பேட்டை திரு. இராமசாமி ஆகியோர் தலைமையில் அணிவகுத்து வேளாளர்களுடன் போரிட்டு அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ததாகவும், அது ஒரு போர் போன்றே நடந்ததாகவும், வெற்றி பெற்றதற்கு அடையாளமாகப் பிச்சாவரம் ஜமீன்தாரர் புலிக் கொடியைப் பறக்க விட்டதாகவும் திரு. ஏ.கே. நடராசன், தாம் எழுதியுள்ள 'சமுதாயப் பெருமைகள்' என்னும் நூலில் எழுதியுள்ளார்.[79]

மேற்குறிப்பிட்ட தகராறு ஏற்பட்டது உண்மைதான் என்றும், இன்றும் சிதம்பரத்திலுள்ள கைக்கோளர்கள் தங்கள் குலதெய்வத்துக்குப் படையல் செய்கையில் வன்னியர்களுக்கும் ஒரு படையல் செய்து வருவதாகச் சிதம்பரத்தைச் சேர்ந்த திரு. பி. ராஜவேல் என்பார் கூறினார்.[80]

நடராஜர் ஆலயத்தில் சோழமண்டகப்படி:



தில்லை நடராஜர் கோவிலில் சோழ மன்னர் மண்டகப்படி

''இரணியவர்மன் வம்சாவழி சோழப்பரம்பரையினர் செய்து வருகின்ற சோழ மண்டகப்படி ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீநடராசப் பெருமான் தேரில் வீதியுலா செல்லும்போது ஒரு மண்டகப்படியும், மறுநாள் ஆயிரங்கால் மண்டபம் என்கிற ராஜசபையிலிருந்து உத்தரத்திருமஞ்சன நடனக்காட்சியுடன் யதாஸ்தானம் சிற்றம்பலத்திற்குச் செல்லும்பொழுது ஒரு மண்டகப்படியும் ஆக இரண்டு மண்டகப்படியும், இதேபோன்று மார்கழித் திருவாதிரை தரிசனத்தின்போது இரண்டு மண்டகப்படியும், என மொத்தம் நான்கு மண்டகப்படிகள் நடைபெற்று வருகின்றன.''[81] இந்நான்கு மண்டகப்படிகளையும் பித்தர்புரம் மன்னர்தான் நடத்தி வந்தார். மன்னரது செல்வ நிலை தாழ்ந்துவிட்டபிறகு அவரால் பெரிய அளவில் நடத்த முடியாமல் போகவே, சிறு அளவில் அப்பகுதி வன்னியர்களில் ஒருவரான ஜெயங்கொண்ட பட்டினம் திரு. நடராஜ பூபதியாரால் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) பொன்னம்பலத்துக்கு அருகில் உள்ள திருச்சுற்றில் 'பட்டுத்துணி சாத்தல்' என்னும் மண்டகப்படி மட்டும் பித்தர்புரம் மன்னர் சார்பாக இன்றளவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிடப்பட்ட சோழ மண்டகப்படி நான்கையும் மீண்டும் பெரிய அளவில், மன்னர்களால் செய்யப் பெற்றதைப் போன்று நடத்திட சிதம்பரத்தைச் சுற்றியுள்ள வன்னியப் பெருமக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று சிதம்பரம் மருத்துவர் நடராஜன் தெரிவித்தார்.[82]

தில்லைக் காளியம்மன் கோயிலிலும் பித்தர்புரம் மன்னர் மண்டகப்படி நடத்தப் பட்டதாக அங்குள்ள பெரியவர்கள் கூறுகிறார்கள்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்து இன்று வரை சுமார் 400 ஆண்டு காலம் பிச்சாவரத்திலிருந்து ஆட்சி புரிந்த சோழர் பரம்பரையைச் சார்ந்த ஜமீன், தங்களது பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டிக் கொள்ள இயலாதப் பரிதாப நிலையில் இன்று வாழ்ந்து வருவது, வரலாற்றார்வலர்களுக்கும் அம்மன்னர் குல மரபினருக்கும் பெரும் வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. W. Francis, (1906), Madras District Gazeteers, South Arcot, Volume I.
2. இந்நூலாசிரியரும், தொல்லியல் துறை மேனாள் துணை இயக்குநர் திரு. மா. சந்திரமூர்த்தி, மேனாள் சிறப்பு நிலைத் தமிழாசிரியர் புலவர் முத்து. எத்திராசன், ஆறு. அண்ணல் மற்றும் நா. முரளி ஆகியோரும் 4.9.2004ல் பித்தர்புரம் சென்றபோது கண்டு பிடிக்கப்பட்டது.
3. மேற்கண்ட குழுவினர் 4.9.2004 அன்று சிதம்பரத்திலும் நாகை மாவட்டம் கும்பகோணம் வட்டம் செல்லப்பன் பேட்டையிலும் பித்தர்புரம் அரசக் குடும்பத்தினரைச் சந்தித்தோம்.
4. க.சி.து. நாராயணசாமி, இரணியவர்மன் சோழ மன்னனான வரலாறு (1997), பக்கங்கள் 21-32, உமாபதி சிவாச்சாரியார், கோயிற் புராணம், திருவாவடுதுறை ஆதீனம் வெளியீடு (1965)
5. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் - பாண்டியர் காலம், (1990), பக்கம் 178; S.I.I. Vol. IV, pp 10-11
6. பொன்னம்பலத்தினையொட்டிய சுற்றுப் பிரகாரத்தில் காணப் பெறும் ஓவியங்கள் பற்றி து. நாராயணசாமி அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆயிரங்கால் மண்டபத்து உள் மண்டபக் கூரைப் பக்கச் சுவர்களில் காணப்பெறும் இரணியவர்மன் சம்பந்தமான ஓவியங்கள் அண்மையில் இந்நூலாசிரியரும் நா. முரளியும் கண்டுபிடித்தனர்.
7. க.சி.து. நாராயணசாமி அவர்கள் எழுதியுள்ள நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள திரு. துரை சுப்பிரமணியன் இச் சிற்பங்கள் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.
8. க.சி.து. நாராயணசாமி, மேலே குறிப்பிட்ட நூல் பக்கம். 33
9. நடன. காசிநாதன், வன்னியர் (2001), பக்கம் 159.
10. மேற்படி நூல் பக்கம் 164
11. M.R. Ry. Sri Kachi Chinna Nallappa Kalakka Thola Udaiyar Avergal, Zamindar of Udayarpalayam, p.16
12. கூடன் மாநகரம் இருவாட்சிப் புலவர், திருக்கை வளம், உரையாசிரியர், கு.க. ஸ்ரீ பு.பா. இரத்தினசபாபதி நாயகர், (1955) பக்கங்கள் 90-91
13. நடன. காசிநாதன் மேலே குறிப்பிட்ட நூல் பக்கம் 223.
14. மேற்படி நூல், பக்கம் 257
15. முத்துத் தாண்டவர், கீர்த்தனமும் பதமும் (1916), சென்னை புரசை நாராயணசாமி பிள்ளை அண்டு பிரதர் வெளியீடு, பக்கம் 29.
16. முனைவர் செ. இராசு, திருப்பனந்தாள் காசி மடத்துச் செப்பேடுகள் (1999) பக்கம் 39.

17. மேற்படி நூல், பக்கம் 41
18. நடன. காசிநாதன், வன்னியர் (2001) பக்கம் 252.
19. மேற்படி நூல், பக்கம் 263
20. கொடுமுடி ச. சண்முகன், ஆவணம் இதழ் 2 (ஏப்ரல், 1992) பக்கம் 63-71.
21. தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம், சென்னையைச் சேர்ந்த திரு. ஆறு அண்ணல் மூலமாக விழுப்புரம்-மாவட்டம் கொஞ்சிக் குப்பத்திலிருக்கும் திரு. முருகன் அவர்களிடம் இச் செப்புப் பட்டயம் இருப்பதைக் கண்டறிந்தது.
22. நடன. காசிநாதன், மேலே கூறப்பட்ட நூல், பக்கம் 173, மேலும் பார்க்க M.R. Ry Sri Kacchi Chinna Nallappa Kalakka Thola Udaiyar Avergal, Zamindar of Udayarpalayam, (Trichinapoly District)
23. கூடன் மாநகர், இருவாட்சிப் புலவர், மேலே கூறப்பட்ட நூல், பக்கங்கள் 39.40 மற்றும் பக்கம் 76.
24. குண்ணம் முனிசாமிப் பிள்ளை, ஜாதி சங்கிரகசாரம் (1872) பக்கம் 214.
25. க.சி.து. நாராயணசாமி, மேலே குறிப்பிட்ட நூலில் மகா. ரா.ரா. ஸ்ரீ சாமியப்ப சூரப்ப சோழனாரின் தந்தை ரெத்தின சாமி சூரப்ப சோழனார் என்றும் பட்டாபிஷேகம் நடைபெற்ற ஆண்டையும் தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளார் போன்று தெரிகிறது. பக்கம் 37. இந்நூலில் தரப்பட்டுள்ள ஆண்டும், தந்தையின் பெயரும் 'அக்னி குலாதித்தன்' என்னும் பத்திரிகையில் கண்டுள்ளவாறும் ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனார் 1893 ஆண்டு எழுதியுள்ள விண்ணப்பத்தின் அடிப்படையிலும் ஆகும்.
26. இதுவும் மேற்கூறப்பட்டவாறே.
27. க.சி.து. நாராயணசாமி, மேலே குறிப்பிட்ட நூல், பக்கம்.39
28. ராஜரிஷி சு. அர்த்தநாரீசவர்மா, வன்னியர் அல்லது தமிழ்நாட்டு க்ஷத்ரியர் (7.12.48) பக்கம் 8.
29. இப்பத்திரிகையின் நகல் மற்றும் ஜாதி சங்கிரக சாரம் என்னும் நூல் ஆகியவற்றை ஆறு. அண்ணல் எமக்கு அன்போடு கொடுத்து உதவினார்.

29A. ஆலாலசுந்தரம் பிள்ளை வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது காலம் 1852.- 1922. ஊர் காஞ்சிபுரம். சிறப்புப் பெயர் சித்தாந்த போத ரத்தினாகரம். தமிழிலும் வடமொழியிலும் வல்லவரான இவர் தமிழ்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் சைவ சித்தாந்தங்களைப் பரப்பினார். ஸ்ரீதேவி பாகவதம், காமாக்ஷி லீலா பிரபாவம், காஞ்சி புராணம் போன்ற நூல்களுக்கு உரை எழுதி உள்ளார்.

29B. திருக்கை வளம், பக்கம் 54
29C. A.K. நடராசன், M.A.B.L., M.B.A. சமுதாயப் பெருமைகள், (1987), பக்கம் 113.
30. திருக்கைவளம், பக்கம் 49.
31. க.சி.து. நாராயணசாமி, மேற்கூறப்பட்ட நூல், பக்கம் 35-36.
32. மேற்படி நூல், பக்கம் 40
33. மேற்படி நூல், பக்கம் 41
34. மேற்படி நூல், பக்கம் 42.

35. திருக்கைவளம், பக்கம் 50; இச் செய்தியில் 21.8.43ல் திருமணம் நடைபெற்றது என்று ஒரு நாள் தள்ளி காணப் பெறுகிறது.
36. க.சி.து. நாராயணசாமி மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 43-46.
37. திருக்கைவளம், பக்கங்கள் 51-52
38. மேற்படி நூல், பக்கம் 52.
39. க.சி.து. நாராயணசாமி, மேற்குறிப்பிட்ட நூலுக்கு து. கோவிந்தசாமி படையாட்சி எழுதியுள்ள அணிந்துரை, பக்கம் 9
40. மேற்படி நூல், பக்கம் 47
41. மேற்படி நூல், பக்கம் 48.
42. அத்திருமணத்தைத் தெரிவிக்கும் அழைப்பிதழ் இந்நூலில் பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளது.
43. இவ்விழாவிற்கான அழைப்பிதழும் கிடைத்தது. ஆனால் அது மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.
43A. E. Thurston Castes and Tribes of Southern India, (1909), pp.2-3
44. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், பதிப்பாசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (1999) பக்கம் 947.
45. மேற்படி நூல், பக்கம் 441, பக்கம் 1218.
46. மேற்படி நூல் பக்கம் 441, 1218 ஆம் பாடலுக்கு விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. சிதம்பர புராணம், பாயிரம் 11
47. S.I.I. Vol.VII, No. 780
48. Ibid, No. 1044
49. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், History of the Later Cholas, Part II, (1967), பக்கம் 225; A.R.E. 47 of 1931
50. B. Natarajan, The Pinacle of Chola art. p.125, Plates - 9B and 9C.
51. ச. கிருஷ்ணமூர்த்தி, மூகாசாபரூர், கல்வெட்டு, காலாண்டு இதழ் எண்.40
52. மேற்படி கட்டுரை
53. மேற்படி கட்டுரை
54. திரு. கி. ஸ்ரீதரன் தற்போது தமிழ்நாடரசு தொல்லியல் துறையில் பதிவு அலுவலராகப் பணியாற்றுகிறார்.
55. நடன. காசிநாதன், மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 181-186
56. திருக்கைவளம், உரையாசிரியர் கு.க.ஸ்ரீ பு.பா. இரத்தினசபாபதி நாயகர், பக்கம்.90
57. மேற்படி நூல், பக்கம் 78.
58. மயிலாடுதுறை பாளையக்காரரின் வாரிசு திரு. இராஜசேகரன் என்பவர் தற்போது சென்னை மடிப்பாக்கத்தில் வாழ்ந்து வருகிறார். அவரது தாயார்தான் திருமதி சுயம்பு வல்லி ஆயாள்.
58ஏ. மேற்காணும் தகவலை எமது உறவினர் ஆத்தூர் திரு. இரா. கலியமூர்த்தி அவர்கள் வழங்கினார்.

58பி. மேற்காணும் செய்தியை திரு. ராஜசேகரன் அஞ்சாத சிங்கம் தெரிவித்தார்.

59. க. துரைசாமி நாயகர், வன்னிகுலாதிக்கம் (1966) பக்கம். 57

60. க. சண்முகசுந்தரம், கவிச்சிங்கம் ராஜரிஷி அர்த்த நாரீச வர்மா, (1995) பக்கம். 83

61. மேற்படி நூல், பக்கம் 123

62. சமூக முன்னேற்ற சங்கம் ஐம்பெரும் விழா மலர் (10.1.1993) பக்கங்கள் 35-43 முடிய. 'நமது பெருமை' என்ற தலைப்பில் அமரர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கும்பகோணத்தில் ஆற்றிய உரை பதிப்பிக்கப்பட்டுள்ளது.

62ஏ. டாக்டர் செ.இராசு, 'சோழ மன்னர் மரபினர் யார்?' அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு வரலாற்றுப் பேரவையின் இரண்டாவது கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை.

63. தா.கோ. கிருஷ்ண பிள்ளை, திருவேட்கள வரலாறு (1957) பக்கம் 71

63ஏ. குண்ணம் முனிசாமிப் பிள்ளை, மேற்கூறப்பட்ட நூல், பக்கம்-214.

64, 65, 66, 67 இந்த ஆவணங்கள் பித்தர்புரம் தற்கால ஜமீன் மகா.ரா.ரா. ஸ்ரீ ஆ. சிதம்பர நாத சூரப்ப சோழனார் அவர்களிடமிருந்து பெறப்பட்டன.

68. District Munsif's Court, Chidambaram D.S.No. 205 of 1930 பத்திரம் பக்கம் 23

69. Ibid, பக்கங்கள், 24-25

70. D.M. Court O.S.W.O. 205 of 1930, பத்திரம் பக்கம் 6

71. Ibid, P.7

72. மகா. ரா.ரா.ஸ்ரீ ஆ. சிதம்பரநாத சூரப்ப சோழனார் குடும்பத்தினர் கூறியது.

73. D.M. Court O.S. No.205 of 1930, பத்திரம், பக்கம் 1

74. Ibid, p.19

75. Ibid, p.14

76. Registered as No. 659 of 1960, Book-1, Volume 1146, pages 309 to 311. The seal of the Registrar of Chidambaram, with date 30th March, 1960.

77. இப்பத்திரம் குத்தாலம் துணைப் பதிவாளர் அலுவலகத்தில், 4 ஆம் புஸ்தகம், 14 ஆம் வாலயத்தில், 262-266 பக்கங்களில், 1938 ஆம் வருஷத்திய 43 ஆம் நம்பராக ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.

78. குத்தாலம் துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியிருக்கிறது. The Seal of the Kuttalam Sub registrar இடப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் நாள் பதிவாகியிருக்கிறது.

79. A.K. நடராசன், M,A.B.L. M.B.A. சமுதாயப் பெருமைகள் (1987) பக்கம் 86.

80. பித்தர்புரம் ஜமீன் நிலங்களில் சிலவற்றைப் பயிர் வைத்த வன்னியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

81. க.சி.து. நாராயணசாமி, மேற்கூறப்பட்ட நூல், பக்கங்கள் 32-33

82. பித்தர்புரம் ஜமீனின் தற்போதுள்ள மன்னர் குடும்பத்தின் பாதுகாவலராக இப்பெருமகன் தற்போது விளங்கி வருகிறார். இவரது உதவியில்லையேல் அக்குடும்பம் மேலும் நலிந்து போயிருக்கும்.

பின்னிணைப்பு - I

உமாபதி சிவாச்சாரியார் எழுதிய

கோயிற் புராணம்

திருவிழாச் சருக்கம்

எண்ணி லிருந்தவ ரெந்தை நடந்தொழு தின்பார
மண்ணில் வணங்கி யிணங்கரு மன்பொடு வாழ்நாளில்
திண்ணிய சிந்தைக ளொன்றி நினைந்தருள் தேர்வாராய்
அண்ணன் மருங்குயர் புங்கவர் சங்க மமர்ந்தார்கள்.

இ-ள்: எண்ணிறந்த பெரிய இருடிகள் எம்பிரானாருடைய ஆனந்த நிருத்தம் சேவித்துக் களிகூர்ந்து, பூதலத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஒப்பரிய அன்புடனே வாழும் நாளிலே, திடசித்தங்களினாலே ஒத்து விசாரித்துத் தம்பிரானார் திருவருள் எப்படி என்று அறிவாராகி வந்து சிதம்பரநாதருக்கு அருகாகப் பெரியோர் யாவரும் திருக்கூட்டமாகி இருந்தார்கள் என்றவாறு (1)

சங்க மிருந்தபி னங்கமர் புண்டரி கத்தாளோன்
இங்கர சன்றரு மைந்தரின் முந்தைய னிப்பார்மெய்ப்
பொங்கருள் கொண்டு புரப்பவ னிப்புவி முற்காவல்
பங்கமில் தம்பியர் தம்பதி யென்றுரை பாரித்தான்.

இ-ள்: அக்கூட்டத்தார் அப்படியிருந்தபின் அவ்விடத்துப் பொருந்தின **வியாக்கிரபாதர் இவ்விடத்துக் கௌடதேசன் தந்த குமாரரில் முந்தின குமாரனாகிய இரணியவன்மன் இந்தத் தேசத்தைச் சத்தியமான சிவாக்கினையின் பெருமையினாலே செங்கோல் நடத்தக்கடவன்;** குற்றமில்லாத இப்பூமியின் முறைமைக்குத் தம்பிமார்கள் தங்கள் தேசத்துக்கு முதற்காவலாக இருக்கக் கடவர்கள் என்று அவர்கள் பதியாகிய கௌடதேசத்துக்குக் கர்த்தராகக் கடவர் என்கிற வார்த்தையை யாவரும் கேட்ப விரித்துரைத்தார் எ-று. (2)

உருகு பதஞ்சலி மன்னுப மன்னிய னன்மாமன்
திருவுடை யந்தணர் யாரு முவந்துரை செய்யச்சீர்
இரணிய வன்மனை முன்மர பின்மண மேய்வித்தே
மருவிய மன்றயன் மண்டப மொன்று வகுப்பித்தார்.

இ-ள்: இரணியவன்மனை அடிமைகொண்டு தேவகாரியம் முடிய இராச்சியம் கொடுத்த திருவருளின் பெருமை கண்டு நீராளமாய் உருகின பதஞ்சலி பாலியத்திலே திருப்பாற்கடல் பெற்றுக் கிருஷ்ணனுக்கு விசேட தீட்சை பண்ணி மற்றுமுண்டான எண்ணிறந்த பெருமை பொருந்தின உபமன்னிய பகவான் அவருடைய நல்ல மாதுலனாகிய வசிட்டர் திருவுடையந்தணராகும் தில்லை மூவாயிரவர் மற்றுமுள்ள தெய்வ இருடிகள் யாவரும் பிரியத்துடனே அவ்வண்ணமே செய்யக்கடவது என்று சொல்ல, கீர்த்திமானாகிய இரணியவன்மாவை இராச நீதிக்குப் பொருந்த விவாகஞ் செய்வித்துச் சிதம்பரத்துக்கு அருகாக அவனுக்குப் பொருந்தின இடத்திலே ஒரு அபிஷேக மண்டபமும் கட்டுவித்தார் எ-று. (3)

மற்றதின் மங்கல மாலைகள் தோரணம் வாழ்தீபம்
பொற்றவி செண்பல கைக்குல நெய்பொரி புற்பூ நூல்
சுற்றிய கும்பமு டன்கல சம்பல சூழ்வித்தே
அற்றிகழ் வொன்று சடங்கதி வாச மமைத்தார்கள்.

இ-ள்: அந்த மண்டபத்தில் மங்கலார்த்தமான தருப்பை, மாலைகள் மாவிலைத் தோரணங்கள், தூண்டா விளக்குகள், கனக சிங்காதனம் அட்டமங்கலப் பலகைத் திரள், தருப்பை குசைத் தூறு இவை முதலான புற்கள், நெய், பொரி, பொற்பூ, வெள்ளிப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ நீர்ப்பூ, நிலப்பூ முதலானவை ஓர் இராத்திரி முழுவதும் அதிவாச கிருத்தியம் விளங்கப் பண்ணினார்கள் என்றவாறு. (4)

காலை தொடங்கி நடந்து சடங்கு கணித்தோதும்
வேலையின் மங்கல நீடபி டேகம் வியந்தாடி
மூல முயங்கிய மாமுடி தார்முது வாள்பெற்றங்(கு)
ஏல விருந்தபி னிட்டன ராண்டொன் றிரண்டென்று.

இ-ள்: உதயகாலம் துவங்கி ஓமம் நடந்து முடித்துச் சோதிடர்கள் எண்ணியிட்ட முகூர்த்தத்தில் மங்கலார்த்தமாய் இருக்கிற நவதீர்த்தங்களினால் மிக அபிடேகம் பண்ணி, பாரம்பரியமான மகத்தான மணிமகுடம் ஆத்திமாலை பழைய வீரகட்கம்

வியாக்கிரபாதர் கையினாலே கொடுக்கப் பெற்று அந்த மண்டபத்திலே சிங்காதனத்தில் இருந்தபின் ஆண்டு ஒன்று இரண்டு என்று திருவாண்டெழுந்திட்டார் எ-று (5)

சிந்தை மகிழ்ந்தெதிர் வந்தனை தன்றன யன்செய்யத்
தந்தை மகிழ்ந்து தழீஇவள ராசிகள் தானல்கிப்
புந்தி யிலங்கு புலிப்பதி காவல் புரப்பாயென்(று)
அந்தமின் முந்து புலிக்கொடி யங்கை யகத்துய்த்து.

இ-ள்: சிந்தை களி கூர்ந்து தன்னருட் புதல்வனான இரணியவன்மச் சக்கரவர்த்தி எதிரே வந்து நமஸ்கரிக்க, அருட்பிதாவாகிய வியாக்கிர பாதர் பிரியத்துடன் தழுவிக் கொண்டு மிகுந்த ஆசீர்வாதம் செய்து, அறிவுக்கு அறிவான வியாக்கிரபுரத்தைக் காத்தளிப்பாயாக என்று **முடிவில்லாத பழைய வெற்றிப் புலிக் கொடியை** அழகிய கைத்தலத்தில் திருவுளம் பற்றிக் கொடுத்து என்றவாறு. (6)

போதுக வென்று வலங்கொடு புக்கருள் மிக்காடும்
நாதன்மு னன்மலர் சிந்தி வணங்க நயந்தண்ணல்
பாதமிரண்டு மெடுத்தவன் முச்சி பரிப்பித்தான்
ஓத மெழுந்தென யாவரு மோகை யுரைத்தார்கள்.

இ-ள்: வருக என்று பிரதட்சிணமாகக் கொண்டு சென்று உள் புகுந்து அருள்மிகு ஆனந்த நிருத்தம் செய்யும் சிதம்பர நாதர் சன்னிதியிலே நல்ல புட்பாஞ்சலி பண்ணி நமஸ்கரிக்கக் கற்பித்துத் தம்பிரானார் திருப்பாதுகை இரண்டனையும் எடுத்து இரணியவன்மன் சிரசிலே வியாக்கிரபாக மகா இருடி தரிப்பித்தார். அப்போது சமுத்திரம் முகுளித்து எழுந்தாற் போலத்தேவ இருடி பூதகணம் மனிதர் முதலான யாவரும் பிரிய வார்த்தைகள் சொன்னார்கள் என்றவாறு. (7)

ஈறில் பெருந்தன மென்னவை நின்னவை யிப்பார்மேல்
ஆறினி லொன்றுகொ ளஞ்சினி லொன்றுகொ ளத்தாவிப்
பேறு பிறந்தடி யேன்மர போர்கள் பிழைத்தாலும்
கூறரு மன்பு கொடுத்தடி மைப்பணி கொள்கென்றான்.

இ-ள்:- என்னுடைய பூர்வார்ச்சிதமான முடிவில்லாத சகல ஐசுவரியமும் தேவரீருக்கு ஆகக் கடவன; இப்பூமியிலே ஆறில் ஒன்று தேவரீர் கடமை கொண்டருளும்; நின்ற அஞ்சு கூறிலே ஒரு கூறு அடியேனுக்கு இகத்துக்குச் சீவன உபாயமாகத் தந்தருளும்; **இப்பெற்றியிலே வந்து என் வமிசத்திலே பிறந்த நின்னுடைய**

அடியார்கள் குற்றங்கள் செய்தாலும் பொறுத்தருளிச் சொல்லுதற் கரியதாகிய பக்தியை உண்டாக்கி அடிமைத் தொழில் கொண்டருளுக என்றான் என்றவாறு. (8)

அண்ணலு மவ்வகை செய்குவ மென்றருள் செய்போதில்
கண்ணமர் தாரைகள் காரை நிகர்ப்பக் கரைவுற்றங்(கு)
எண்ணரு மின்னரு ளெய்தி யிறைஞ்சி யெழுஞ்சேயைத்
திண்ணிய நன்முனி கொண்டுடை யானடி சேர்வித்தான்.

இ-ள்: தேவநாதரும் அப்படிச் செய்வோம் என்று திருவுளம் பற்றின காலத்துப் பொருந்தின கண்ணீர்த் தாரை மழை ஒப்ப நீராளமாய் உருகி, அவர் எண்ணரிதாகிய இனிய அருள் பெற்று நமஸ்கரித்து எழுந்திருந்து அவ்விடத்திலே நிற்கிற குமாரனை ஞான வீரரான நல்ல வியாக்கிரபாத மகா இருடி கொண்டு சென்று ஸ்ரீ மூலத்தானமுடைய தம்பிரானார் ஸ்ரீ பாதங்களை அணுகுவித்தார் என்றவாறு. (9)

அங்கும் வணங்கி வணக்கரு மானையை மேல் கொண்டு
மங்கலமாநகர் சூழ்வர மாமுனி தானேவச்
சங்க வியங்கள் முழங்க வலங்கொடு தார்மார்பன்
பொங்கிய பங்கய மாதமர் கோயிலு னுள்புக்கான்.

இ-ள்: ஸ்ரீ மூலத்தானமுடைய சிவபெருமான் சன்னிதியில் நமஸ்கரிப்பித்துப் பாகரால் வணக்கரிய மத்த கஜத்தின் மேற்கொண்டு மங்கலமாய் மகத்தாயிருக்கிற சிதம்பரநாதரைப் பிரதட்சிணம்வர வியாக்கிரபாதர் கற்பிக்கச் சங்கவாத்தியங்கள் முழங்க **ஆத்திமாலை மார்பனான இரணியவன்மன்** பிரதட்சிணமாக வந்து கற்பு மிகுந்த இராசலட்சுமி உறைகின்ற திருமாளிகைக்குள்ளே புகுந்தான் என்றவாறு. (10)

தார்புனை யாரணி செம்பிய னெம்பியர் தானல்கும்
பாரும தூரும தாக வெனாவணி தார்பட்டம்
போர்தரு சாமரை தோரைகள் நீளகுடை பொற்பீடம்
தேரணி மாவய மாநிதி யாதிகள் சேர்வித்தான்.

இ-ள்: தாராகத் தொடுத்த ஆத்திமாலையை அணிந்த இரணியவன்மனானவன் தம்பிமாரை அழைத்து உங்களுக்கு நலம் பொருந்தின தேசமும் கௌட தேசமாகக் கடவது: படை வீடும் கடகமேயாகக் கடவது என்று கற்பித்து, ஆபரணமும் மாலையும் கொடுத்துப் பட்டங்கட்டி, பொருந்தி வீசும் உபய சாமரையும் பீலிக்குடை

தவளச்சத்திரம் பொற்பீடம் தேர்நிறை மகத்தான ஆறுபோல மத அருவி பாயும் யானைகள் குதிரைகள் பதாதிகள் முதலானவையும் கொடுத்தான் என்றவாறு. (11)

வென்றி நடந்தொழு தம்பியர் வந்தடி மேல்வீழ்வுற்(று)
அன்றவர் சென்றபின் மன்றம் வணங்கி யவன்றந்தை
முன்றொழு தந்தணர் வந்தனை மாளிகை முன்செய்வான்
இன்றரு ளென்றவை யெங்கு மிலங்க வெடுப்பித்தான்.

இ-ள்: அந்தத் தம்பிமார் சிதம்பரநாதருடைய வெற்றி பொருந்தின ஆனந்தக் கூத்தை வணங்கி வந்து தன்னையும் வந்து நமஸ்கரித்து அனுப்பிக் கொண்டு போகத்தக்கவர்களை அனுப்பப் போனபின், சிதம்பர மூர்த்தியினுடைய சேவை பண்ணின இரணியவன்மனானவன் தன்னுடைய பிதாவாகிய வியாக்கிரபாதரை முன்தொழுது, தில்லை வாழந்தணரை அவரவர் திருமாளிகையிலே சென்று நமஸ்கரித்து, திருமாளிகைகளும் கட்டுதற்குத் திருவுளம் பற்றும் என்று அநுஞ்ஞை பெற்றுக்கொண்டு வந்து, எவ்விடத்தும் விளங்க மூவாயிரம் திருமாளிகை கட்டி முடிக்கத் தொடங்கினான் என்றவாறு. (12)

ஏழ்நிலை மாளிகை சூளிகை சாளர மேரார்சீர்
வாழ்மதில் தோரண வாயில்கள் தேரணி மாவீதி
சூழ்வுற மேருவி னேர்பல கோலிய சோழேசன்
தாழ்வுடன் மாதவர் யாரையு நீள்குடி சார்வித்தான்.

இ-ள்: **எழுநிலை மாளிகையாகச் சமைத்து மகுடங்கள் வைத்துப் பலகணி வைத்து அழகு நிறைந்த மதில் வாழ்வு பெறப் பண்ணி நிலைத் தோரணம் பொருந்தின வாசல்கள் நிலைத்தேர் நிறைந்த பெரிய திருவீதிகள் சுற்றும் பொருந்த இப்படி மகாமேருவை ஒத்த திருமாளிகை கட்டின இரணிய வன்மச் சக்கரவர்த்தி தாழ்ச்சியுடனே மகாதவசுகளையுடைய திருவுடை அந்தணர் எல்லாரையும் குடியேற்றுவித்தான் என்றவாறு.** (13)

இற்றகு பண்ட மிலங்க நிலங்களை மேய்வித்து
மற்றவர் தம்மி லொருத்த னிருத்தம் மகிழ்ந்தாடும்
பற்றரு சின்மய வம்பர மும்பர் பரிந்தாகம்
பெற்ற பயன்திரு வம்பல மொன்று செயப்பெற்றான்.

இ-ள்: இல்வாழ்க்கைக்கு வேண்டத்தக்க பதார்த்த பண்டம் கொடுக்கும்படி நிலங்கள் உண்டாக்கிக் கொடுத்து அந்தத்

திருவுடையந்தணருக்குள்ளே ஒருவரான சிதம்பர நாதர் நிருத்தம்செய்யும் பசு பாச ஞானத்தால் அறியப்படாத ஞானமயமாகிய அம்பலத்தைத் தேவர்கள் ஆதரத்துடனே உடல் பெற்ற பிரயோசனமாக ஒப்பற்ற பொன்னம்பலத்தைத் தானும் திருப்பணி செய்யப் பெற்றான் என்றவாறு. (14)

பொன்னணி மாநவ மாமணி யாதி பொருப்பாக
முன்னர் கொணர்ந்து குவித்தருள் பெற்று முனிச்செல்வன்
தன்னிசை வோடுயர் வானவர் கம்மியர் தம்மைக் கொண்டு
உன்னரு மம்பல மொன்று சமைத்தணி யொப்பித்து.

இ-ள்: சுவர்ணம் ஆபரணம் மகத்தான நவரத்தினம் முதலான எல்லாம் மலை போலே முன்னே கொண்டு வந்து குவித்துத் தம்பிரானார் திருவருள் பெற்ற வியாக்கிரபாதர் அனுமதியுடனே பெரிய **தெய்வத்தச்சரைக் கொண்டு மனத்துக்கு எட்டாத ஒப்பற்ற அம்பலம் ஒன்று சமைத்து அழகு பெற அலங்கரித்து என்றவாறு.** (15)

காண விலக்க வொழுங்கணி வித்தவை கைக்கொண்டுட்
பூணு மணிக்குற டொத்த தளத்தியல் பொற்பாரத்
தூணிரை யுத்திர நற்பல கைத்திரள் தொல்கோவைக்
கோணமர் கைத்தொகை முச்சி யணைத்தணி கொள்வித்து.

இ-ள்: கண்ணியம் என்றும் போதராணம் என்றும் இரண்டு வகையாகச் சொல்லும் இவைகளில் கண்ணியத்தின் வகைப்படியிலே உபாநாதித் தூபி அந்தமான உயரத்தைக் கண்ணியத்தில் இத்தனை அங்கிஷம் இன்ன அவயவம் என்று கற்பித்துக் கொண்ட பட்டோலை செய்து கையிலே பிடித்துக் கொண்டு, அதிட்டானவசத்தாலே அதிட்டானத்துக்குப் பொருந்த உட்பீடம் என்கிற பணியை இரத்தினங்களினாலே செய்து, அதிட்டானத்துக்குச் சொன்ன கூற்றிலே அதிட்டானம் பன்மணிகளாலே பண்ணி அதிட்டானம் பண்ணி முடிந்த இடத்திலே பொற்பலகையாக நன்றாகத் தளமிசைத்து, இதின் மேல் தூணுக்குச் சொன்ன கூற்றிலே பிரமகாந்தம், விஷ்ணுகாந்தம், உருத்திர காந்தம், சூரிய காந்தம், சூரிய கண்டு பேதம், சந்திரகாந்தம், வியாளபாதம், அத்திபாதம், சிங்க பாதம் இவை முதலாகவுள்ள பல தூண்களைப் பற்றி அடைவே நிறுத்திப் பலவகைப் போதிகையும் உட்பட நிறுத்திப் பிரஸ்தாரத்தில் சொன்ன கண்ணியத்திலே உத்திரத்தின் அவயவங்களுக்கு அங்க போதத்தின் அவயவங்களும் கூடப் பலகால் சாதனம் பண்ணி, வித்தார்த்திலங்கிசத்தில் அங்கிச வழியிலே கைக்கு நீளங் கொண்டு

இந்தக் கையழகு பொருந்த வக்கிரமாக வெட்டி முகந்தாயதே சேர்ப்பித்து இதற்கு அக்கிரத்துக்கு அணிந்ததாகச் சந்திரகாந்தத்திலே அதனைப் பலகால் சாதனம் பண்ணுவித்து இதின் மேல் தூபிக்குச் சொன்ன அக்கிசத்தால் தூபிப் பிரதிட்டை பண்ணினான் என்றவாறு. (16)

பன்மணி மாலைகள் கொண்டணி தொங்கல் பயிற்றிச்சூழ்
பொன்மலி முன்மதில் கோபுர வாயில் பொருந்தச்செய்(து)
என்மல மங்கவருங்கரு மூல விறைக்கும்பொன்
தன்மய மாமொளி ராலய மொன்று சமைப்பித்தான்.

இ-ள்: பல இரத்தின மாலைகளைக் கொண்டு அழகு பெற நிரை சிறக்க நற்றி, பிரதமாவரணம் முதலான பொன்மதில்களும் அந்த மதில்களில் கோபுரங்கள் பிரதிபந்தம் பாதபந்தம் போதம் முகமாலை பக்கசாலை கூடம் பஞ்சரம்அந்தராளம் கும்பலதை விருத்தசூடிதம் தோரணம் கண்டம் வேதிகை சிகரம் பூரண கும்பம் தூபி இந்த வகைப் பொற்சொரூபமாக வாசல்கள் தோறும் விதிப்படிப் பொருந்தச் செய்து, புசு பாச ஞானங்கள் நீங்கத் தோன்றி **அருளின் கருமூல காரணன் என்கிற திருநாமத்தை யுடையவரான ஸ்ரீமூலத் தானமுடைய தம்பிரானார்க்கும் ஞானமயமான கனகாலயம் ஒப்பறக் கற்பித்தான் என்றவாறு.** (17)

வேறு

இன்னவகை திருப்பணிகள் பலவுஞ் செய்த
இரணியவன் மனைமுனிவர் யாரு மேத்திப்
பன்னரிய புகழ்கூறி நீறு சாத்திப்
பரந்தகலை வழிவழிபா டதற்குப் பல்க
மன்னுவகை யினினிபந்த வகுப்பு நாதன்
வைத்தபணி யெனமுனியை வணங்கி வாழ்த்திச்
சென்னியிலஞ் சலிசெய்திங் களித்த தன்றோ
திருந்துதவ மெனக்கென்றான் செங்கோன் மன்னன்.

இ-ள்: **இந்தப் பிரகாரம் கனகமயமாகப் பஞ்சாவரணத்துக்குட்பட்ட திருச்சிற்றம்பலம், ஈசுவரி ஆலயம், புண்டரீகப் புட்கரணி மற்றுமுள்ள மண்டபங்களும் ஆவரணத்துக்குப் புறத்தில் வியாக்கிரபாதர் பதஞ்சலி பூதப் பசாசு காளி மூவாயிரவர் பிரமதேவர்களால் பூசிக்கப்பட்ட சிவலிங்க மூர்த்திகளுக்கு ஆலய முதலான மண்டபங்கள் கோபுரம் மதில்கள் முதலான திருப்பணிகள்**

பலவிதமாகச் செய்வித்த இரணிய வன்மச் சக்கவர்த்தியை இருடிகளெல்லாரும் புகழ்ந்து ஆசீர்வாதம் சொல்லித் திருநீறு சாத்தி விரிந்த ஆகமங்களிலே நித்திய பூசைக்குச் சொன்ன பத்ததியின் கட்டளைப்படி, தம்பிரானார் அருளிச் செய்தபடி என்று வியாக்கிரபாதர் அநுக்கிரகிக்க அவரை நமஸ்கரித்துத் துதித்து முகத்தாவிலே அஞ்சலியத்தனாய்த் தேவரீர் கற்பித்ததன்றோ அடியேனுக்குக் குற்றமற்ற தவசு என்று இரணியவன்மன் சொன்னான் என்றவாறு. (18)

இத்தகைய முனிவருட னொருநாள் மன்னன்
இலங்கியபே ரம்பலத்தி னிருந்து நூலின்
வைத்தமுறை யிறைவற்கு மஞ்ச னந்தூ
மலரமுது முதலான மல்க வைத்து
நித்தவிழா வெழவேண்டுஞ் செல்வ நல்கி
நிலவுபதஞ் சலிமுனியா னிறுத்து வித்த
புத்தகமின் புறமுனிவர் யானை யேற்றிப்
பொற்கோயில் வலங்கொண்டு புகுவித் தார்கள்.

இ-ள்: இப்படி மகத்தான வியாக்கிரபாதர் பதஞ்சலி மூவாயிரவர் முதலான இருடிகளுடனே இரணியவன்மன் ஒரு நாள் அப்பேரம்பலத்திலிருந்து பூசாபத்ததியில் சொன்ன கிரமத்திலே தம்பிரானார்க்குத் திருமஞ்சனம் திருப்பள்ளித் தாமம் நைவேத்தியம் முதலானவை குறைவறக் கற்பித்து நித்தியோற்சவம் நடத்துவதற்கு வேண்டிய எல்லாம் கட்டளை செய்வித்துக் கொடுத்துப் பிரசித்தரான பதஞ்சலிமகா இருடியினாலே சங்கிரகிக்கப்பட்ட சித்தாந்த இரத்தினாவளி என்கிற ஆகம ஏட்டை அதிகப்பிரியத்துடனே இருடிகளெல்லோரும் யானைப் பிடரியின் மீது வைத்துப் பொற்கோயிலைப் பிரதக்ஷிணமாக வருவித்து உள்ளே புகுவித்தார்கள் என்றவாறு.(19)

மனங்குளிர வன்னவர்கள் பின்னு முன்னூல்
மருவியநை மித்திகங்கள் வகுப்பான் மாதத்
தினங்கடொரு முணர்த்துமது மாத மேவத்
திருந்துதம னகவிதியைச் செலுத்து முன்னா
அனங்கனது வள நகர மணையுங் காலை
அந்நகர்போன் மன்னவனிங் கமைக்க வென்ன
இனங்கொளிருஞ் சனங்கள்பணிந் தின்ப மெய்தி
எந்தைதிரு வசந்தவிழா வெழுவித் தார்கள்.

இ-ள்: இரணியவன்மன் சித்தம்களி கூர இதுவுமன்றி அந்த இருடிகள் அந்த ஆகமத்தில் பொருந்தின நைமித்தியங்கள் வகுப்பறுக்கும்படிக்கு மாதம் நக்ஷத்திரங்களின் அடைவே மாதபூசை விசாரித்துச் சித்திரை மாதம் பொருந்தக் குற்றமற்ற தமநகவிதியாகிய கொழுந்து சாத்தும் கிரியையை மூட்டித்தற்கு முன்னாகக் காமராசன் தனதான பட்டினப்பிரவேசம் பண்ணுகிற காலத்தில் அந்தப் பட்டினத்தின் சவுபாக்கியம் போல இந்த நகரியையும் இராசாவே அலங்கரிப்பாயாக என்று இருடிகள் கற்பிக்க இராசாவுக்கு இஷ்டமான பிரதம மனிதர்கள் நமஸ்கரித்துச் சித்தம் களிகூர்ந்து தம்பிரானாருடைய வசந்தோற்சவத்தை மிகவும் நடத்துவித்தார்கள் என்றவாறு. (20)

விரிந்தபுதுப் புனல்விளையாட் டாடிமாதம்
விரவுதிரு வாண்டெழுந்து விழவு மோங்கப்
பொருந்தும்வகை புரிந்தாடி புரட்டா திக்குள்
புகழ்பதினான் கட்டமிக ளொன்றிற் பூசை
தருந்தகுதி மிகுதிகுறை தவறு நீங்கத்
தந்துநவந் தருபந்தாச் சமைத்து யாகம்
பரந்தவிர தாங்கமுடன்பவித்தி ரத்தைப்
பயில்வித்தைப் பசிப்பூரப் பரிச மைத்தார்

இ-ள்: பரந்த புதுப்புனல் விளையாட்டு ஆடி மாதத்திலே கூடத் திருவாண்டெழுந்திட்டுத் திருநாளும் விளங்கப் பொருந்த நடத்தி முடித்து ஆடி முதல் புரட்டாசிக்குட்படக் கற்பித்துச் சதுர்த்தசியிலாவது அட்டமியலாவது ஒன்றிமொன்றிலே நித்திய பூசைக்குக் கற்பித்தபடியில் ஏற்றக் குறைச்சலறக் குற்றம் தீரமுந்நூல் ஒரு நூலான ஒன்பது நூலான இருபத்தேழு இழையாலே பந்துமாலையாகப் பண்ணி அங்குரார்ப்பணம் மண்டப பூசை வேதிகார்ச்சனை அக்கினி காரியம் ஸ்தாலிபாகம் பவுத்திரா திவாசம் வினியோகம் சயனம் பிரார்த்தனம் மண்டப பூசை முதலாக விரிந்த பவுத்திரம் சாத்தி ஐப்பசிப் பூரத் திருநாளைக்குக் கட்டளை பண்ணுவித்தான் என்றவாறு. (21)

அந்தமிலெண் ணான்கறமுந் திருக்கண் சாத்தி
அவற்றின்மிகத் தனித்தென்னை யாண்ட வன்னை
எந்தைபிரான் மைந்தர்களோ டெழுச்சி கொள்ள
எழுந்தருளி வருந்திருநோன் பியைய வைத்துச்
சிந்தையின்மா லயனாண் வெழுந்த செந்நீத்
திரளுருவண் ணலைநோக்கித் திகழ்க ணங்கள்

வந்தெவையு மழலாகி மல்கல் போலும்
வளங்கொடிரு விளக்கீடு விளங்க வைத்தார்

இ-ள்: முடிவில்லாத முப்பத்திரண்டு அறங்களையும் திருக்கண் சாத்தியருளி அந்த முப்பத்திரண்டு அறத்திலும் பார்க்க மிகுதியாக என்னைத் தனியே ஆண்டுகொண்டருளிய லோகமாதாவாகிய சிவகாம சுந்தரி முன்னும் செகற்பிதாவாகிய சிதம்பரமூர்த்தி பின்னும் விநாயகர் சுப்பிரமணியர் அவர்க்குப் பின்னுமாகத் தண்டு சாத்தி எழுந்தருளி வருகிற திருப்பூரத் திருநாள் நடத்துவித்துப் பிரமா விஷ்ணுக்கள் மனதின் அகங்காரங்கள் கீழ்ப்பட மேலிட்ட தழற்பிழம்பான சோதிலிங்கத்தைத் தியானித்து வந்த கணங்கள் எல்லாம் அந்தத் தழல் வடிவு பெற்றுச் சோதிலிங்கத்தில் ஒத்த வளம் பொருந்திய தீபோற்சவத்தை விளங்க நடத்தினான் எ-று.

திரளுறு அண்ணல் என்பது சொக்கப்பனை. திகழ் கணங்கள் என்பது திருக்கோயில் நிறைய விட்ட திருவிளக்கு. (22)

மார்கழியா திரைநாளின் முனிவ ரெல்லாம்
வந்துதடம் படிந்துபொது வணங்கி வாழ்த்திப்
பார்தகுமா தொழுதகன்றார் முன்ன மென்று
பன்னமுனி மன்னவனீர் பயிற்று மிந்தச்
சீர்தருமா தினமென்னத் தில்லை வாழும்
திருவுடையந் தணரெந்தை திருநா ளென்று
சார்தருமா நவதீர்த்த நீத்தங் கொண்டு
தஞ்சனமஞ் சனவிழவு தகுவித் தார்கள்.

இ-ள்: திருமார்கழித் திருவாதிரை நட்சத்திரத்திலே இருடிகளெல் லாரும் வந்து சிவகங்கையிலே ஸ்நானம் செய்து சிதம்பர சேவை பண்ணித் தோத்திரம் செய்து பூமியிலே அட்டாங்கமாக நமஸ்கரித்து முத்தராய்ப் போனார்கள் முன்னாளில் என்று வியாக்கிர பாதர் சொல்ல, இரணியவன்மச் சக்கரவர்த்தியானவர் நீங்கள் இந்தத் திருநாளை விதிப்படியே நடத்துங்கள் என்று சொல்ல, தில்லை வாழும் திருவுடையந்தணர்கள் யாரும் எம்முடைய தம்பிரானார் திருநட்சத்திரம் என்று பிரியப்பட்டுக் கொண்டு தம்தம்முடைய பாவங்கள் போக வந்து சிவகங்கைபடிந்து சிதம்பரக்ஷேத்திரத்தில் உண்டான நவ தீர்த்தமும் அது நீங்கலாக மற்றும் உண்டாகிய எண்ணிறந்த தீர்த்தவெள்ளம் எல்லாமும் கொண்டு அருளின தண்ணளிபோன்ற திருமஞ்சனத் திருநாள் நடத்தினார்கள் எ-று.

இதில் சிதம்பரத்தில் தீர்த்தங்கட்குவகை "பாம்போடை புலிவாவி நந்தன்குட்டம் பாளைமான் சிவகங்கை பந்தன் கேணி, தேம்புனல் சேர் கொள்ளிடம் சீர் மணிமுத்தாறு திரை அலைக்குங் குய்யமவை முதலாயுள்ள, வாம்பயிலு வனவாவி யாவும்தில்லை அம்பலத்தைச் சூழ்தலயன் திருமாலொக்கும், பூம்புனல்சேர் புண்டரிகப் பொய்கைமன்றிற் புனிதனருள் எனப் புலவர் புகன்றா ரன்றே" என்பதனால் கண்டு கொள்க.

போனகமால் வரைபோன்மா நிவேத னத்தைப்
பொருந்தியதைப் பூசத்திற் புணர்வித் தேத்தி
ஈனமிலா முனியரசன் தன்னை நோக்கி
இமையவர்கள் அனைவரும்வந் தேந்தி வாழ்த்தும்
ஆனியென வருமாண்டி லானி மாதத்
தருள்விரவுத் திரதினம்வந் தணுகிற் றென்னத்
தேனகுதா ராணிமன்ன னிறைஞ்சி யானித்
திருநாளிங் கெழவிழவு செய்க வென்றான்.

இ-ள்: சோற்றுமாலை போல மகத்தான நிவேதனமாகிய திருப்பாவாடையைத் தை மாதத்தில் பொருந்தின பூசத்திலே விதிப்படி பொருந்த அமுது செய்யப் பண்ணித் துதித்துக் குறைவற்ற தவத்தையுடைய வியாக்கிரபாதர் இரணியவன்மனைப் பார்த்துத் தேவர்களெல்லாரும் பூலோகத்திலே வந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்யும் ஆனி மாதத்திலேயாயிருக்கும் மாதோகலைவம் என்னத்தக்கதாக மற்ற வருஷத்தில் அருள் பொருந்தும் திரு ஆனியுத்திரம் வந்து ஆணித்தானது என்று சொல்ல, வண்டு மகிழும் ஆத்தி மாலையையுடைய இரணியவன்மச் சக்கரவர்த்தி வியாக்கிரபாதரை நமஸ்கரித்து வந்து ஆனித் திருநாளில் இரதோற்சவம் இந்தத் திருப்படை வீட்டுக்கு ஒழிவில்லை எனத்தக்கதாக நடத்துங்கள் என்று பிரதான மந்திரிகளோடே சொன்னான். எ-று.

தாரும்பா ருந்தரித்த தடந்தோ ளானும்
தாவிலரு முனிவர்களுந் தலைவன் முன்னின்(று)
ஈரொன்பான் முதலான லோரொன் பானாள்
எந்தைபிரான் திருவெழுச்சி யின்ப மெய்த
வாரும்பா ருள்ளோரும் வானுள் ளோரும்
மாலயனும் மேலவரு மலங்கள் நீங்கி

யாரும்பா தம்பணிதற் கென்று வாயில்
இலங்கவிடைக் கொடிவலங்கொண் டேற்று வித்தார்.

இ-ள்: ஆத்திமாலையையும் பூமியையும் தரித்த புயத்தையுடைய இரணியவன்மச் சக்கரவர்த்தியும் குற்றம் இல்லாத மகா இருடிகளும் ஆன்மநாயகரான சிதம்பரநாதர் முன்னின்று பதினெட்டு நாள் முதலான ஒன்பது நாளாகிய இருபத்தேழு நாளும் என்னுடைய பிதாவாகிய தம்பிரானார் திருநாள் தொழுது கண் களி கூர வாருங்கள்; பூமியில் உண்டான மனிதரும் சுவர்க்கத்தில் உண்டான தேவர்களும் பிரம இருடிகளும் உருத்திர மகேசுராதிகளும் உங்கள் பாசங்கள் நீங்கி, எல்லாரும் தம்பிரானார் ஸ்ரீ பாதசேவை பண்ணுதற்கு என்று பேரிகை தாடனம் முதலான தேவதாகானத்தைப் பண்ணி இடபக் கொடியை பிரதட்சிணமாகக் கொண்டுவந்து ஏற்றுவித்தார்கள் என்றவாறு. (25)

மண்ணுலகி லுண்ணிறைந்த மைந்தர் மாதர்
வானவர்க ளரமகளிர் மற்றுள் ளோரும்
எண்ணரிய மகிழ்ச்சியுடன் திசைகள் தோறும்
எய்துவார் மெய்தகுநோ யிரித்தோ மென்பார்
கண்ணிறைபொற் கோபுரங்கை தொழுது வீழ்வார்
கனகமயத் திருவீதி கண்டு வாழ்வார்
அண்ணல்பொதுப் பணிந்தயர்வார் நடமுன் போற்றி
ஆடுவார் பாடுவா ராயினார்கள்

இ-ள்: பூலோகத்தில் ஸ்திரீ புருஷர்களாய் உள்ளவர்களும் தேவலோகத்தில் உள்ள தேவர்களும் தெய்வ ஸ்திரீகளும் மகேசுராதிகளும் எண்ணரிதான பிரியத்தோடும் பத்துத் திசைகளிலும் வந்து பொருந்துவார்; சனன வியாதியைத் துறந்தோம் என்பார்; காட்சிக்கு நிறைந்த பொற்கோபுரங்களைக் கும்பிட்டு நமஸ்கரிப்பார்; பொன்மயமான திருவீதிகளைக் கண்டு பெருவாழ்வுபெற்று வாழ்வார்; தம்பிரானாரது சிதம்பரத்தை நமஸ்கரித்துத் தம்மை மறந்து நிற்பார்; ஆனந்த நிருத்தத்தைக் கண்டு துதித்து ஆனந்த பரவ சராய் ஆடுவாரும் பாடுவாரும் ஆயினார் என்றவாறு. (26)

வேறு

இப்பெற் றியில்வரு மெத்திக் கினருமி
தெம்மிற் றகுமென நம்மிற்றுத்
துய்ப்பொய்ப் பிறவிகள் துய்த்ததற் கெனமகிழ்
துணிவால் வருபவ ரணிவாழத்

தப்பற் றுயர்தவ மூவா யிரவர்கள்
தாவா மறையொடு தேவாரக்
கைப்பற் றியபணி முற்றப் புலிமுனி
கழலான் விழவெழு தொழில்செய்வான்.

இ-ள்: இந்தப் பேறு பெறும் எல்லாத் திசையிலுள்ளோரும் இந்தப் பாக்கியம் பசு பாச ஞானம் நீங்கினவர்களுக்கு அல்லவோ கிடைக்கும் என்று அகங்காரங்கள் நீங்கித் தீரப் புசித்துத் தொலைக்க வேண்டின சஞ்சிததாதிகளில் தோற்றம் நஷ்டமிடுதற்கு நிச்சயம் என்று வருகிற அடியார் நிறை வாழ்வு பெற விச்சின்னமில்லாத பெரிய தவசுகளை உடையரான மூவாயிரவர் ஒழியாத வைதிக சைவமந்திரங்களுடனே சோடச உபசாரம் முதலான பூசைக்கு வேண்டினவைகள் சேர வியாக்கிரபாத மகாஇருடி பாதபத்தரான **இரணியவன்மன் மாதோற்சவத்துக்குத் தக்க திருநாட்படிகளைச் சோடிப்பான் ஆயினான்** என்றவாறு. (27)

நண்ணித் தினகரன் முதலோர் கிழமைகோள்
நலமார் தவமணி யணிமேவப்
பண்ணிப் பரிகல முதலா யினபகர்
திருவா சிகையரி பயில்பீடம்
விண்ணிற் றிகழ்தரு மகரத் தொழிலின
விரிவெண் குடைமிடை கொடியென்றென் (று)
அண்ணற் குரியன வெண்ணற் கரியன
அம்பொற் படிதிரு முன்புய்த்தான்.

இ-ள்: விதிப்படிக்குப் பொருந்த ஞாயிற்றுக்கிழமை முதலான ஏழு வாரத்துக்கும் மாணிக்கம் முத்துபவளம் மரகதம் புட்பராகம் வைரம் இந்திர நீலம் கோமேதகம் வைடூரியம் இந்த இரத்தினம் ஏழு கிழமைக்குமாகவும் எண்ணிறந்த திருவாபரணம் அந்தந்த வாரப்படியாகப் பண்ணிப் பரிகலம் முதலானவைகளும் சுடர்த்திருவாசிகை வட்டப்பூ சத்திரப்பூ முதலாகச் சொல்லும் திருவாசிகைகளும், வீரசிங்காதனங்களும் ஆகாசத்தில் விளங்கும் மகரத் தொழிலையுடைய கொடி விரிந்த வெண் கொற்றக் கொடை நடுவே பொருந்தும் கொடிகள் என்றென்று வெகுவிதமாகச் சொல்லப்பட்ட பரமசிவத்துக்கு உரியனவும், எண்ணுதற்கரியனவுமாகிய சத்திர சாமரங்கள் எண்ணிறந்தன பொற்படியாகப் பண்ணுவித்துச் சன்னிதியில் கொண்டு வந்து குவித்தான் என்றவாறு. (28)

கடமா றெனவுமிழ் களியா னையினணி
கதிர்மா மணிநிலை தகுநேர்முன்
திடமாய் நடைபெறு வடமால் வரைபுரை
சிலதேர் கவரியி னிரைதோரை
மிடைவான் முகிறொடு கொடியா டைகள்விட
விழியா ரிசைவளர் மொழியார்பொற்
படகா திகள்நட மிடுவா ரொலிகடல்
பலவா மெனநனி பயில்வித்தார்.

இ-ள்: மதங்கள் ஆற்றுக்கால் போல ஊறிவரும் மத்த கஜங்களின் நிரைகள் ஒளிபொருந்தின திவ்விய இரத்தினங்களினாலே பண்ணப்பட்ட நிலைத்தேர் முன்னே திடமாக நடக்கும் தொழிலைப் பெற்ற பெரிய மகாமேருவை ஒப்பான சில தேர்கள் சாமர நிரைகள் பீலிக் குடைகள் நெருங்கி உயர்ந்து மேகங்களை அளாவின துகிற்பதாகைகள் ஆலாலம் போன்ற விழியார் சங்கீதம் பொருந்தி வரும் வார்த்தை யுடையவர்கள் பொலிவினை உடைத்தாகிய படகாதிவாத்தியக்காரர் நிருத்த மாடுவார்களால் உண்டாக்கப்பட்ட ஆரவாரம் அநேகங்கடல் போல மிகப் பண்ணுவித்தார் என்றவாறு. (29)

மேவும் பர்கள்மிடை மகுடஞ் சொரிமணி
விலகிப் பொலவிதிரு வலகிட்டுத்
தூவண் புனன்மது மலர்வெண் பொரிநனி
துதைவித் தெழின்மறு குயர்தெற்றி
பாவுந் துகில்பொதி யுறவங் கமுதணி
பலகும் பழுநிலை வளர்செம்பொன்
தீபங் களுமலி தரமங் கலவணி
திகழத் திசைதொறும் நிகழ்வித்து.

இ-ள்: இரதோற்சவத்துத் திருவீதியில் வந்து பொருந்தும் தேவர்கள் நெருக்கத்தினாலே உதிர்ந்த மகுட இரத்தினங்களை இருமருங்கும் தள்ளி நன்றாகத் திருவலகினாலே திருவலகிட்டுச் சுத்தம் செய்து, யாகசலத்தினாலே இடையறத் தெளித்து, பரிமள புட்ங்கள் வெண் பொரிகள் இவைகளினாலே மிகவும் நிறைத்து அழகு பொருந்திய திருவீதியில் அவரவர் வாயில் தோறும் இட்ட உயர்ந்த வேதிகையில் பொருந்தின காவணத்தில் அஸ்தரபரிவேஷிதமாய்ச் சலபூரிதமானபல பூரண கும்பங்களும், நிலை பொருந்தின பொற்குத்து விளக்குகளும், அதில் விளங்கும் தீபங்களும் வளமை தர, இப்படிச் சொல்லப்பட்ட

மங்கலார்த்தமானவை எல்லாம் ஒளி சிறக்க நாலு வீதிகள் தோறும் செய்வித்து என்றவாறு. (30)

பொற்பா லிகைமுளை பொலிவித் தளவறு
களபப் புதுவுரை மெழுகிச்சீர்
இற்பான் மணவணி தரவா யில்கள்கமு
கேரார் கதலிகள் சேர்வித்து
வெற்பா மெனமுகில் வரவர ணநிரை
வெருவா தெதிர்பொரு கரமானக்
கற்பா வியநெடு நிலைமா ளிகைமணி
கட்டா வளர்கொடி விட்டார்கள்

இ-ள்: பொற்பாலிகைகளிலே அங்குரார்ப்பணம் பண்ணி அளவிறந்த சந்தனம் கஸ்தூரி கர்ப்பூரம் மிருக மதாதிகளினால் மெழுகிச் சீர்விளங்கும் இந்த வீடுகள் தோறும் கல்யாண ஒழுங்கு சிறக்க எழுநிலை மாளிகை வாயில்கள் தோறும் கமுகும் வாழையும் அழகு பெற நாட்டி, மலை என்று சொல்லி மேகம் படிய வரப் பயப்படாமல் எதிர்ப்பட்டு யானைகளது துதிக்கையினால் தள்ளியும் வீசியும் அடித்தும் பிடித்தும் பொருமாறு போல நவரத்தின ஒளி பரந்த நெடுநிலை மாளிகைகள் தோறும் நீவிய கொடிகளினாலே மணிகளைக் கட்டிப் பறக்க விட்டார்கள் என்றவாறு. (31)

இடமால் வரைநிரை கணநாதர்களுடன்
இறையா மெனவெழு நிலைநீடு
மடமா னவைதொறு மதிமா சுணநதி
மருவா வளர்சடை யினர்பாதத்(து)
அடைவார் வடகலை தொடர்வார் திருவமு
தடுவா ரடுவென வடைவாவைத்(து)
இடுவா ரரகர விடுவார் வரவர
எண்டா னறவெதிர் கொண்டார்கள்.

இ-ள்: இடமாகிய பெரிய கயிலாயத்தில் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீ கண்டபரமேசுரரும் அவரைச் சேவித்திருக்கிற கணநாதர்களும் போல எழுநிலை உயர்ந்த எழுநூறு மடங்கள் தோறும் சந்திரன் சர்ப்பம் கங்கை பொருந்தாத நீண்ட சடா தாரிகளும் அவர்களை நமஸ்கரிக்கிறவர்களும் ஆகமசாத்திரம் படிக்கிறவர்களும் திருவமுது சமைக்கும் அவ்வும் சமைத்த அமுதைப் பந்தி வைத்துப் படைப்பாருமான இவர்கள், அரகர

என்று வரும் எண்ணிறந்த பேர்களை வாருங்கள் என்று எதிர்கொண்டு நிற்பார்களாயினர் என்றவாறு. (32)

விண்ணோர் வனிதையர் மகவான் முனிவர்கள்
விரிபா ரிடமிகு கணநாதர்
மண்ணோ ரெனவுரு வினராய் வழிபட
மதமார் கயமுகன் முதலானோர்
எண்ணோ ரளவறு கனிபான் முதலிய
இசைவித் தலையவன் மிசைவித்துப்
பண்ணோ டியன்மொழி யவளோ டிறைதரு
பரவும் பவனிகள் பயில்வித்தார்.

இ-ள்: தேவமாதர்கள் இந்திரன் இருடிகள் பூதங்கள் மிகுந்த கணநாதர்கள் இவர்கள் எல்லாரும் மானிட வேடத்தைக் கொண்டு திருநாளில் ஊழியம் பண்ணி மதமார்ந்த வேழ முக விக்கினேசுரருக்கு ஒவ்வொன்று எண் நிறைந்த முப்பழம் திரட்டுப்பால் பணியாரம் முதலான அவலோடு கூட்டி, முதல் திருநாளில் அமுது செய்யப் பண்ணி, பண்ணுடனே பொருந்தின திருவார்த்தையையுடைய சிவகாமசுந்தரியம்மையுடன் தேவராசனான தம்பிரானார் எல்லாரும் பரவக் காட்சி தந்தருளும் திருப்பவனிகள் நாள்தோறும் விருஷபயாகம் துவாசரோகணம் பெரிதாடனம் அங்குரார்ப்பணம் யாகசாலை அஸ்திர யாகம் பேரிதான மயாக்கிரமம் பரிவேடமிரோசனம் துகபந்தனம் தீர்த்தசங்கிரகணம் சூர்ணோற்சவம் தீர்த்தத் துவாசவரோகணம் தபனம் ஆன அப்பதினாறு அங்கம் முண்டந்த அங்கம் நீங்கலான அங்கங்களும் சிறக்க ஆயுத பாணியர் குதிரையணியாகவும் அதன்பின் பசுபதாதிகளாகவும் அவர் பின் மகாவிரதராகவும் மகா சைவராகவும் அவர்பின் பிராமணராகவும் அவர் பின் தேவர்களான சோடசபத்ததியில் உள்ளவர்களாகவும் அவர்பின் கணபதி சுப்பிரமணியராகவும் அவர் பின் உருத்திர கணிகையராகவும் அவர் பின் காயகராகவும், அவர் பின் நிருத்தகாராகவும் அவர் பின் மத்தளாதி வாத்தியக்காரராகவும், விதிப்படியே அணிவகுத்து இந்த அணிக்குப் பின்பாகத் தம்பிரானார் பார்வதி சகிதராக எழுந்தருளவும் தம்பிரானார் சூழத்திக்குப் பாலர்களும் ஆயுத மூர்த்திகளும் சேவித்து வரவும் வியாக்கிரபாத பதஞ்சலி முனி முதலாயுள்ள இருடிகள் திருப்புறக் கொடை சேவிக்கவும் தக்க திருநாளை நடத்துவித்தார் என்றவாறு. (33)

செழுவான் மதிபுனை பவனா னியில்வரு
திருநாள் விழவெழு பொழுதாரத்
தொழுவார் பிறிவரு நிலையா யினைவொரு
துணிவான் மொழியொரு பொருள்தேய்வற்(று)
எழலா லழிவுறு தொழிலால் விழிமழை
இசைவா லிருபய னிலதாவுற்(று)
அழியா தகமலி கசிவா லருளை
அடைந்தா ரினையார் மிடைந்தார்கள்.

இ-ள்:; வளமை நீட்டித்த சந்திரசேகரனான திருவம்பல முடைய தம்பிரானர் ஆனித் திருநாளில் எழுந்தருளிப் புறப்பட்ட அவதாரத்தில் அனுபவசித்தமான பரமானந்த சுகத்தை வெளிப்படக் கண்ணாரக் கண்டு தொழுவார் எண்ணிறைந்த பேர் இரண்டற்ற நிலையினாலே அன்னியமின்றி ஒருணர்வாதலால் வாசனையால் பண்ணுகிற தோத்திரங்களுக்குச் சுட்டில்லாத படியாலே ஒரு பொருளில் பொருந்தாமல் தழுதழுத்தலால் பிரதட்சிண நமஸ்காராதி கன்மங்களும் நழுவுதலால் கண்ணீர் மழைத்தாரை கொள்ளுதலால் இதஅகிதமில்லா தபடியினாலே ஒன்றைப் பற்றி மயங்காமல் ஞானானந்தக் களிப்பினாலே அருளாக்கமான முத்தான்மாக்கள் அனந்தங்கோடி பேர் நெருங்கிச் சேவித்தார்கள் என்றவாறு. (34)

மன்றா டியதிரு நடரா சனதுயர்
மணிமா ளிகைவெளி வளர்வானில்
குன்றா விறன்மணி முடிவா னவரணி
குழுமா னுடர்திர ளொடுகுடி
நின்றா ளெனவகி னயமே வியவுரு
நேசத் தவரவர் பாசத்தே
சொன்றாய் நிழலெழு மொளிமே னியிலென
உயருத் திரவிழ வயர்வித்தார்.

இ-ள்: மன்றினில் ஆடியருளிய நிருத்தரசருடைய பெரிய திருமாளிகையின் உள்ளாடு வெளியிலே உயர்ந்த சுவர்க்கத்தில் குறையாத வீரத் தன்மையையுடைய மணிமுடிவானவரது கூட்டங்கள் திரட்சியான மிகுந்த மக்கட் கூட்டத்துடனே கூடி, தங்களிடத்துத் தேசோரூபத்திலே இவர் இரட்சியாவண்ணம் பிரதிபலிக்க நின்றாற் போலவும் தம்பிரானார் சாத்திக் கழித்த சாந்துதரித்தவடிவுடைய பத்தசனங்கள் தம்தம்முடைய பாசத்தின் ஒளி திரண்டு நிழல் எழுந்தாற்

போலவும் நெற்றியில் விளங்கும் பெரிய திருஆனி உத்திரத்திருநாளைத் துவாசரோகணத்துடனே ஆனந்தமாக நடத்தி முடித்தார்கள் என்றவாறு. (35)

அருணற் புரவல னெதிர்முற் கதைமுனி
அறைவா னெருநிரு தனைவேறற்(கு)
இரணத் திறல்கரு விருளிற்றரவர
இகலா னெனவெறி கயிறாலே
மரணத் தினையுற வருணற் கதுபழி
வழியா யொருகடி வடிவாகிச்
சரணத் திருகரம் விரவக் களமொடு
சந்தித் திடுநெறி பந்தித்து.

இ-ள்: **அருள் சிறந்த நல்ல இரணியவன்மச் சக்கரவர்த்திக்கு** வியாக்கிரபாதர் பூர்வ கதை ஒன்று, அனுக்கிரகிப்பார். ஒரு நிசாசரனை வெல்லும்படிக்கு யுத்தம் செய்து வெல்லும் உபாயம் கற்பிக்க இராத்திரி இருளில் வருணகுரு வர, கபட வேடத்தைக் கொண்டு மாற்றான் வந்தான் என்று எறியப்பட்ட பாசத்தினாலே குரு மரணத்தைப் பொருந்த வருணனுக்கு அந்தக் குரு நாசமான பிரமகத்தி பாவமான பழி ஒரு பசாசு ரூபமாகிக் கையும் காலையும் கட்டிக் கழுத்திலே ஏறிட்டுமுழங்கால் முழங்கை தலை எல்லாம் கூட்டிஒன்றோடு ஒன்று சந்திக்கக் குண்டு கட்டாகக் கழலாமற் கட்டி என்றவாறு. (36)

காரார் கடலிடை நெடுநா ளிடுமிடர்
கடவா னொருவரின் முடியாதாய்
நீரா யினபெற லரிதாய் மழைவிழ
நினையா தலமர நிலன்வானோர்
வீரா மடவர லருகா நடமிடு
விரகா விரைவிரி தருகொன்றைத்
தாரா வருணன துயர்பா தகவிடர்
தவிரா யெனநனி தொழுதார்கள்

இ-ள்: கருமை பொருந்தின நடுக்கடலிலே கட்டுடனே கொண்டு போய்ப் போட நெடுநாளாக வரும் துக்கமாகிய இந்தப் பாசத்தை நீக்கும்படி ஒருத்தராலும் முடியாதாகி மழை பெய்தற்கு நினைவுமற்று வருணன் மோகித்துக் கிடக்க, தண்ணீர் என்பது கிடையாமல் நிலத்திலுள்ளோரும் வானில் உள்ளோரும் புரமெரித்த தீரனே! சத்தியிடத்திலே பிரியத்தையுடையவனே! கூத்தாட வல்ல சதுரனே!

மணம் விரிந்த கொன்றை மாலையுடையவனே! வருணனுடைய மகாபாதகமான துக்கத்தை நீக்கிஅருளுவாய் என்று மிகுதியாகத் துதித்து நமஸ்கரித்து வேண்டிக் கொண்டார்கள் என்றவாறு. (37)

தேசிற் பொலிபொது நிறையற் புதனொலி
செறிநற் கடலெதிர் திகழ்வுற்றுப்
பாசத் தளையற வருளச் சலபதி
பரவித் தினமிதுபடிவுற்றோர்
ஆசற் றுயர்கதி யடையக் கடவுளும்
அணுகப் பெறவர மதுபெற்றான்
மாசித் திருமக மெனமற்றதுதக
மலிபொற் கொடியது பொலிவித்தான்

இ-ள்: எல்லாப் பிரகாசத்திலும் மேலான பிரகாசத்தை யுடைய சிதம்பரத்திலே பரிபூரணராய் இருக்கிற அற்புதரான சிதம்பரமூர்த்தி ஆரவாரம் பொருந்தின நல்ல கடலுக்கு எதிரே எழுந்தருளிப் பாசபந்தமற்றுப் போம்படிக் கடாட்சித் தருள, வருணனானவன்மிகவும் துதித்து இந்த நாளிலே யார் ஒருவர் இந்தத் துறையிலே ஸ்நானம் செய்கிறார்களோ அவர்கள் பந்தபாசம் நீங்கிப் பரமுத்தி பெறவும் தம்பிரானார் வந்து திருக்கண் சாத்தி அருளவும் வரம் பெற்றான்; அது மாசித் திருமகத்திலேயாயிருக்கும் என்று வியாக்கிரபாதர் சொல்ல, மாசிமகத்திருநாள் பொருந்த விதிப்படியே விளங்கக் கொடி ஏற்று வித்தார்கள் என்றவாறு. (38)

எந்தன் மையினல முய்க்குஞ் சலபதி
இறைசேர் தரவர முறுநாளோர்
பத்தொன் பதுவிழ வுய்க்கும் படிகளி
பயிலுங் கயமுக னயிலுந்தேன்
மொய்த்தங் கொளிர்கனி யப்பம் பயறவன்
முதலா யினபல வுதவாவாழ்
நித்தம் பொலிவிழ வத்தன் றரமிக
நெஞ்சார் கரைவுற நைஞ்சார்கள்

இ-ள்: எல்லாப் பிரகாரத்திலும் சுகப்பிராப்தி பெற்ற வருணன் தம்பிரானார் கடற்கரைக்கு எழுந்தருள வரப் பெற்ற நாள் ஒருபது என்ன முன் ஒன்பது திருநாள் விக்கினம் வராமல் நடப்பதற்கு மதம் பொருந்தின யானை முகத்தையுடைய விக்கினேசுவரருக்கு அமுது செய்யத் தக்கதான தேன் பலவன்னங்களையுடைய எண்ணிறந்த பழம் திருப் பணியாரம்

பயறு அவல் முதலாயுள்ள பதார்த்தங்களை அமுது செய்யப்பண்ணி நித்தியம் பெருவாழ்வு மிக்க திருநாட் பவனி தம்பிரானார் எழுந்தருளி யாவர்க்கும் காட்சி கொடுத்தருளக் கண்டோர் யாவரும் நீராளமாக நெஞ்சம் கரைந்து தம்மையிழந்து எண்ணிறைந்த பேர்கள் உருகினார்கள் என்றவாறு. (39)

கண்ணா யிரமுடையவன்மா தவன்மலி
கமலா லயன்முத லெனலாகும்
விண்ணா டுடையவர் வடநீ டணிமுலை
விடவாள் விழியுடை மடவாரா(று)
எண்ணா யிரமுனி கணநா தருமறை
இசைநா ரதரணி யெனையோரிபம்
மண்ணாள் பவருட னண்ணா வளர்திரு
மன்றா வருள்புரி யென்றார்கள்.

இ-ள்: இந்திரன் விஷ்ணு மிகுந்த கமலாசனன் முதல் எண்ணத்தக்க தேவலோகத்திலுள்ளவர்கள் எல்லோரும், கச்சு விடாத ஆபரணம் பொருந்தின முலைகளையும் விடமும் வாளும் ஒத்த விழிகளையுமுடைய தெய்வமாதர்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும் கணநாதர்களும் வேதங்கள் இசை பொருந்தின நாரதரும் அணி பொருந்தின ஒழிந்த தெய்வ இருடிகளும் இந்தப்பூமியில் மனிதருடனே கூடிக் கொண்டு, ஞான நேயம் மிகுந்த சிதம்பர நாதனே! எங்களையும் கடாட்சித் தருள் என்று வேண்டிக் கொண்டார்கள் என்றவாறு. (40)

புகழும் பவனிக ளகமின் புறுநெறி
புனிதன் றரவிழி புனல்கொண்டிட்(டு)
இகழும் பரகதி யெனவந் தரன
தெழுச்சிக் கமரர் பழிச்சிக்கைத்
திகழுஞ் சலியொடு மிகுமங் கலவணி
செய்வித் தலர்தட மேவிச்சேர்
அகமங் ககற வமுதந் தருகுழி
ஆடிக் கடல்வழி கோடித்தார்.

இ-ள்: எல்லாராலும் தோத்திரம் பண்ணப்பட்ட திருப்பவனிகள் மன்மகளிகூறுமாறு அநாதிசுத்தராய் இருக்கிற சிதம்பரமூர்த்தி தந்தருள, விழிநீர்த் தாரை கொண்டு திருட்டி கோசரமான பரமசுகம் அங்கு இல்லாதபடியினால் மூதான் மாக்களாலே பரகதி இகழப்படும் என்று

தேவர்கள் எல்லாரும் இங்கே வந்து பரமானந்தமூர்த்தியுடைய திருவெழுச்சிக்குப் பிரீதராய்த் தோத்திரம் செய்து அஞ்சலி அத்தத்துடனே மிகுந்த மங்கலார்த்தமான பதார்த்தங்களைக் கூட்டித் திருவீதிப் பெருவழியைப் பொருந்தின பாவங்களைப் போக்குகிற அந்த விரதமான தீர்த்த சலங்களிலே ஸ்நானம்பண்ணிக் கடலுள் எழுந்தருளுகிற வழியை மங்கலமாகக் கோடித்தார்கள் என்றவாறு. (41)

ஆனைத் திரள்கட லடையக் கருமுகில்
அணியிற் பொலிவுற வரவஞ்சேர்
சேனைத் தொகைநதி யோதத் தினுமிசை
திகழப் புயல்துயில் பயில்தாழைக்
கானத் திடையெழு காலுய்த் தெனவிழு
கைதைத் துகள்வழை யெய்தக்குத்
தேனக் கனவன மானப்பொழிமழை
சேரும் வகைதரு திருவீதி.

இ-ள்: திருப்பவனி சேவித்து முன்னே சென்ற யானையணி கடலுக்குள் அனேக தூரம் சென்ற அளவில் கடலிலே படிகிற மேக பந்தியிலும் பெருத்த காட்சி உண்டாக ஆர்ப்பரவம் பொருந்தின பதாதி சமுத்திரத்தில் சமூகமாகச் செல்வது ஆறுகள் எல்லாம் ஒருமுகப்படக் கூடிச் சமுத்திரத்திலே செல்லும் பிரவாகத்திலும் மேலிட்டு முழங்கிச் செல்ல மேகங்கள் நித்திரையைப் பயிலும் தாழைக் காட்டில் நின்று எழுந்தோறும் எழுந்தோறும் தள்ளிப் போடும் தாழைப் பூவின் நீறானது சுரபுன்னைப் பூங்கொத்திலே மேக பரிசத்தினாலே நெகிழ்ந்து விழ, பூமியிலே தேன் உடைந்து விழுந்தாற்போலச் சொரியும் இது சத்தியமாகப் பொழிகிற மழையை ஒக்க ஆறு ஓடி வந்த சேறாடும் வகுப்பைத் தரும் திருவீதி எ-று. (42)

கொத்தார் மலரளி குலவும் புள்ளொலி
குழுமித் திசைதொறும் விழிமுத்தத்
தொத்தார் துதிவளர் தொண்டத் திரளொடு
சூலப் படைதிசை யடைகாவல்
பத்தா யுதவுரு வினர்சூழ் படையோடு
பயில்தூ ரியமிக வுயர்வானோர்
இத்தா ரணியின் ருடனே விரவிமுன்
ஏவற் கொடுபுடை சேவித்தார்.

இ-ள்: பூங்கொத்துக்களில் நிறைந்த வண்டுகளின் இசை அந்த நிலத்துலுண்டான பக்ஷிகளுடைய ஆரவாரத்துடனே கூடின திக்குகள் தோறும் ஆனந்தக் கண்ணீராகிய முத்துமாலை நிரம்பின தோத்திரம் மிகப் பண்ணும் அடியார் கூட்டத்துடனே சிவாஸ்திரமும் சிவாஸ்திரத்தைச் சூழும் தசதிக்கில் காவலாகிய தசாயுதரூபிகளும் தம்பிரானாரைச் சூழ்ந்து புறக்காவலாக வரும் தொண்ணூற்றெட்டு ஆயுதங்களையும் தரித்த எண்ணிறந்த சேனையுடனே பொருந்தின அனேக கோடி வாத்தியம் மிக முழங்க மேலான சுவர்க்கத்திலுள்ள தேவர்கள் இப்பூமியிலுள்ள மனிதருடனே கலந்து அநாதியிலே தங்களுக்குக் காவல் கற்பித்த முறைமையிலே அந்தந்தத் தானங்களைக் கைக் கொண்டு சேவித்து வந்தார்கள் என்றவாறு. (43)

வருமா தெரிபவ ரெனவான் மிசையெழ
வளரா வளைதலை யினதாய்முத்(து)
அருமா மணிதிமி னுரைவாழ் சலசர
மலையா வரைபுரை திரைமோதிப்
பொருமா மிகவிரை தருமா கடலிடை
புளினத் தலைதகு வெளியுற்றுத்
திருமா லறிவரு பெருமா னணைவகை
திகழுஞ் சலபதி யெதிர்கொண்டான்.

இ-ள்: தம்பிரானார் எழுந்தருளி வருகிற பிரதாபத்தை ஆதரத்துடனே கண்டவர்களைப் போல, ஆகாசம் அளவாக உயர்ந்து களித்து எழுந்திருந்து வணங்கின, தலையையுடைய தாகி முத்துக்கள் அரியமகத்தான நவரத்தினங்கள் மரக்கலங்கள் நுரை தன்னிடத்தில் வாழும் மகரம் மச்சம் முதலானவைகளை அலைத்துத் தள்ளிப் போட்டு, மலைகளை ஒத்த திரைகளினாலேயே கரையை மோதிப் போகுமாறு போல, மிகவும் ஆர்ப்பரவத்தைத் தருகிற கடற்கரையில் மணற்குன்றின் மேல் உண்டான வெளியளவாகச் சென்றேறி விஷ்ணுவினால் தவ பலத்திலும் அறிவரிய தம்பிரானார் எழுந்தருளுகிற சவுபாக்கியத்தின் விரிவைப் பாசம் நீங்கி விளங்கும் வருணராசன் எதிர்கொண்டான் என்றவாறு. 44

கட்டங் கியவொளி தெளியச் சலபதி
காணும் பொழுதிடை யடைதுன்பக்
கட்டங் கறவருள் சரணங் களிலலை
கரமின் புறவிழ மழுவும்பொற்

கட்டங் கமுமுடை யவன்முன் பொலிமலி
கடன்மண் டியவவர் களுமாயைக்
கட்டங் கழிவுற மிகுமன் பிறையொடு
கற்றா வெனவருள் பெற்றார்கள்

இ-ள்: தன்னிடத்திலே தியான ரூபமாயிருக்கிற பிரகாசம் திருட்டி கோசராமாகத் திருமேனி கொண்டு எழுந்தருளக் கண்ட அவதாரத்தில் வருணன் அந்தராயத்தில் பொருந்தின திரைக்கரங்கள் முன்னாக ஆனந்தத்துடன் நமஸ்கரிக்க, குருத் துரோக பாசபந்தத்தை நீக்கி அருளிய திருவம்பலமுடைய தம்பிரானார் ஸ்ரீ பாதத்திலே மழுவும் தேசிட்டமான கட்டங்களும் ஆயுதமாகவுடைய தம்பிரானார் சன்னிதியில் ஆரவாரம் மிகுந்த சமுத்திர ஸ்நானம் பண்ணின பக்த சனங்களும் மாயா பாசபந்தம் அவ்விடத்திலே அற்றுப் போகிற திறத்தைப் பொருந்தத் தங்களிடத்திலே தம்பிரானார் வைத்தருளிய மிகுந்த காருணியம் எங்ஙனம்? எனில், புனிற்றீற்றுப் பசுப் போலவும் தாங்கள் இளங்கன்று போலவும் மிகுந்த திருவருளைப் பெற்றார்கள் என்றவாறு. (45)

குரையார் கடல்குட கரைமே லொளிவளர்
குணபாலுளவள னெடுநீளத்
திரையார் கரமலி கலனா நவமணி
திரள்மா நிதியகில் துகில்சீரை
நரையார் கவரிகள் விரையார் தருமத
நற்பூ நிறைபுனல் கர்ப்பூரம்
வரையார் மதகரி நிரையா திகளொடு
வாழ்பொற் றிருவடி சூழ்விப்ப.

இ-ள்: ஆரவாரம் அதிகரித்த கடலின் மேற்கரையின் மேல் பிரகாசம் மிகுந்த கீழ்க்கரையிலுள்ள வளமையுடனே மிகவும் நீண்ட திரைக்கரங்களினாலே படகு முதல் சொங்கு ஈறான எண்ணிறந்த மரக்கலம் அங்கு உண்டான நவரத்தினங்கள் விலையில்லாத பட்டு வஸ்திரங்கள் அகில் சீனத்தில் உண்டான அபூர்வ வஸ்துக்கள் வெண்சாமரங்கள் மணவிய சவ்வாது முதலானவைகள் குங்குமப் பூ பனி நீர்ச் செம்புகள் கர்ப்பூர வகை மலைகளில் உயர்ந்திருக்கிற மத்த கஜங்கள் முதலான பின்னும் எண்ணிறந்த வகைகள் எடுத்துக் கொண்டு வந்து எல்லார்க்கும் வாழ்வு கொடுத்தருளும் செங்கமலப் பொற்பாதத்தில் காணிக்கையிட்டான் என்றவாறு. (46)

பாசத் தளையாறு துறையுற் றிமையவர்
படியிற் படிபவ ருடனாடிப்
பூசற் றெழில்புரி திரைநற் பொலிவுயர்
புளினத் தலைதரு வெளியுற்றுத்
தேசத் தவரொலி கடலிற் பொலியொலி
சின்னத் தொலிதிசை மன்னச்சீர்
வாசப் பொழிலிடை யாறிக் கணபர்கள்
வானோ ரொடுகழி வழிவந்தான்.

இ-ள்: பாசம் அறுத்தான் துறையிலே எழுந்தருளித் தேவர்கள் பூமியில் பொருந்தின மனிதர் இவர்களுடனே திருமஞ்சனம் செய்தருளி இருந்து இந்தத் தேசத்தில் மானிடராக ஒன்றுக்கு ஒன்று மாறிப் பொரும் தொழிலைச் செய்யும் திரைகள் மிக விளங்கி ஓங்கும் மணற் குன்றின் மேல் நல்ல வெளியிலே எழுந்தருளியிருந்து இந்தத் தேசத்தில் மானுடர் வாக்கில் எழும் மகா ஓசை சமுத்திரத்தில் மிகுந்த ஓசை திருச்சின்னங்களின் ஓசை திக்குகளைப் பொருந்த இலக்குமிகரமான மணவிய பூங்காவின் நடு நிழலில் அரக்கர் கணநாதர்கள் தேவர்கள் சேவித்து வரக் கழிகள் பொருந்தும் வழியளவாக எழுந்தருளினார் என்றவாறு. (47)

அன்றன் றலைகடல் வளனங் களவில்
படிகொண்ட டடியிணை தொழுதன்பால்
இன்றென் றிடவர மென்றும் பெறவரம்
இறைதா வெனவிரை வுடனெய்தி
மின்றங் கியகழல் துதிகொண் டருளொடு
விரவுஞ் சலபதி விடைகொண்டான்
புன்றன் கதிர்மதி புனையும் பரன்மிகு
பொன்னம் பலமத னுள்புக்கான்.

இ-ள்: அந்தத் திவசத்தில் சமுத்திர பாரிசத்தில் பூர்வ பதார்த்தங்கள் அளவிறந்தன கொண்டு வந்து கழிக்கரையில் தம்பிரானார் ஸ்ரீ பாதத்திலே காணிக்கையாக விட்டு நமஸ்கரித்துத் தேவரீருடைய கிருபையினாலே இனிமேல் வருகிற மாசி மகத்துத் திருநட்சத்திரங்கள் தோறும் இந்த மாசிமக நட்சத்திரத்தைப் போல் அடியார்களும் யானும் இந்தச் சௌபாக்கியத்தைப் பெறத்தக்கதாக, சுவாமியே திருவுளம் பற்றியருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்து வேண்டிக் கொண்ட வரமும் உடனே பெற்றுச் சுத்தப் பிரகாசம் பொருந்தின ஸ்ரீ பாதங்களைத்

துதித்து நமஸ்கரித்துத் தம்பிரானார் அருளினால் சேவித்து வந்த வருணன் மீண்டு போனான்; குளிர்ந்த பால சந்திரனை அணிந்தருளும் ஞானத்துக்கு மேலான நேயமாகச் சிதம்பரேசுரனார் பாசாதீதமான ஞானமயமாகிய சிதம்பரத்தில் எழுந்தருளினார் என்றவாறு. (48)

என்றென் றிகழ்வறு மாதந் தருதினம்
யாவும் புகழ்விழ வெழவாழ்வுற்(று)
ஒன்றும் புலிமுனி யுரகந் தருதவன்
ஒளிருங் கனகம துருவாகி
முன்றங் கியபுர வலனங் கிகள்வளர்
மூவா யிரவர்கள் தேவாரும்
மன்றங் கியவிரு மன்றந் தொழுதுவ
ரந்தான் விரவ விருந்தார்கள்.

இ-ள்: இந்த வகையிலே குற்றமற்ற மாதங்களிலும் தினங்களிலும் யாவரும் புகழ்கின்ற திருவிழா முதலியவற்றை நடத்தி, மனப்பிரியத்துடனே வாழ்வு பொருந்தும் வியாக்கிர பாத முனியும், பதஞ்சலி மகா இருடியும் பிரகாசமான கனக வடிவாகி முன்னே பொருந்தின இரணியவன்மச் சக்கரவர்த்தியும் முத்தீ வளர்க்கும் மூவாயிரவர்களும் திவ்விய மயமான சிதம்பரேசுரர் பொருந்தின கனகசபையை நமஸ்கரித்து நன்மை பொருந்த இருந்தார்கள் என்றவாறு. (49)

ஈரா றுயிருடன் மூவா றமரு
மெழுத்துப் புகன்முதல் விரியென்றும்
தாரா தரமென வுலகோர் பலகலை
தருமா விரணிய வருமாமுன்
சீரார் தரவரு திருநாள் படிமுதல்
சிலநாள் வழிசெல மிகநவ்விக்
கூரார் படையின னருளா லரசர்கள்
கொண்டா டிடுநெறி கண்டார்கள்.

இ-ள்: அகரம் முதல் ஔகாரம் ஈறான பன்னிரண்டு உயிரும், ககரம் முதல் னகரம் ஈறான பதினெட்டு மெய்யும் எனச் சொல்லுகின்ற முதலெழுத்துகள் முப்பதுமே காரணமாக எந்தக் காலமும் கைம்மாறு வேண்டாது பயன் தரும் மேகத்தை ஒப்பாக உலகத்திலுள்ளவர்களுக்கு ஆதாரமாகிப் பலவகைப்பட்ட கலைகளும் உண்டானமைபோல, **ஆதியில் இரணியவன்மச் சக்கரவர்த்தியால் நித்திய நைமித்திய**

முதலியவை சிறப்புப் பெறச் சில நாள் நடந்துவரப் பிற்காலத்தில் கூர்மையுள்ள மழுப்படை தாங்கிய நடேசர் திருவருளால் சோழ மன்னர்கள் திருவருட் செல்வம் பெருகுமாறு அவற்றை விசேடமாக யாவரும் கொண்டாடும் நடத்தி வந்தார்கள் என்றவாறு (50)

சொற்றா னுமைபொரு ளரனா மிகுபொருள்
துணிவ லவரருள் தொகுமாலிப்
பொற்றா மரைமலர் விரைசூழ் புனலணி
புலியூர் வளநகர் புகழ்தாமங்
கற்றா ருரைசெயல் பெற்றார் செவிகொடு
கவர்வார் பொருள்விரி பகர்வார்சீர்
உற்றா ரிருவினை யற்றார் மிகுபரி
வுடையார் திருவடி யடைவாரே.

இ-ள்: சொல் உமையாகவும், பொருள் சிவபெருமானாகவும், வேதாகமங்கள் நிச்சயித்த மிகுந்த பொருட்டுணிவாதலால் அவர்கள் இரண்டு பேர் அனுக்கிரகமும் இந்த நூலில் குடி கொண்டிருத்தலால் கனக தாமரை மலரினது பரிமளம் சூழும் தீர்த்தங்கள் பொருந்திய பெரும்பற்றப் புலியூர் என்னும் வளப்பத்தையுடைய திருப்படை வீட்டைப் புகழும் பாமாலையைக் கற்றாரும் பாடம் சொல்லும் செயலைப் பெற்றாரும் செவி கொண்டு கேட்பாரும் இப்பொருள் விரிவைச் சொல்வாரும் செல்வத்தைப் பெறுவர்; பாவ புண்ணிய வாதனையின்றும் நீங்குவார்; பரமசிவத்தினடத்தில் மிகுந்த பத்தியுடையவர் ஆவர்; திருவடியை அடைவர் என்றவாறு.

'மிகுபரிவுடையார்' என்பதற்கு ஆன்மாக்களிடத்தில் அளவில்லாத கருணை உடையவராகிய நடேசர் எனினும் அமையும். (51)

செடிசேர் பொழிலணி புலியூர் வளநகர்
செல்வம் பெருகு கதிருமன்றில்
கொடிசேர் விடையின னடிசே ரொளிதெளி
குறிகூ டுகுகுழு மறைசூழ்க
பொடிசேர் வடிவின ரடிசேர் முடியினர்
புனல்சே ரிருவிழி யினராகி
அடியே னெனதுய ரகல்கூ டிடுநெறி
ஆள்வா னடியவர் வாழ்வாரே.

இ-ள்: சிறுசண்பகம் முதலிய விருட்சங்கள் தங்கிய பொழில் சூழ்ந்த புலியூர் என்னும் பெருமை பொருந்திய சிவக்ஷேத்திரம் அருட்

செல்வத்துடன் ஓங்குக; சிற்சபையில் இடபக் கொடியை உடைய நடேசரது ஸ்ரீ பாதங்களை அடைதற்கு ஏதுவான சிவஞானத்தைத் தெளிகின்ற சைவ சமய மார்க்கம் உலகம் எங்கும் பரவுக; திரண்ட வைதிக மார்க்கம் தழைக; நிறணிந்தருளும் திருமேனியை உடையவராய்ச் சிற்சபாமத்தியில் ஆனந்த நிருத்தம் செய்யும் நீல கண்ட பரமேசுரரால் திருவடி தீட்சை பெற்றவர்களாகிய சீவன் முத்தர்களும் ஆனந்தபாஷ்பம் தாரை தாரையாய்ப் பொழியும் விழியினராகித் திருவடி சேர்பவர் பாதங்களைச் சிரசில் சூடிடும் நெறியாள்வானுக்குரிய மற்றை அடியவர்களும் வாழ்வாராக எ-று (52)

வேறு

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள னெல்லாம் பிறங்குக
ழைக வஞ்சசெழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

இ-ள்: மாதம் மும்மாரி பெய்யக் கடவது; அரசன் நீதியோடு செங்கோல் செலுத்தக்கடவன்; குற்றமற்ற பலவகையாகிய வளங்கள் எல்லாம் விளங்கக் கடவன; பழமையாகிய வைதிக சைவ மார்க்கம் உலகம் எங்கும் பரவக் கடவது. எ-று.

திருவிழாச்சருக்கம் முற்றிற்று

பின்னிணைப்பு II

பிச்சாவரம் பாளையக்காரர்களும் தோராய காலமும்

1. விட்டலேசுர சோழகோனார் (கி.பி. 1583இல் இருந்திருக்கிறார்)

2. இராமபத்திர சூரப்ப சோழனார்
(கி.பி. 1872இல் இருந்திருக்கிறார்)

3. ஆண்டியப்ப சூரப்ப சோழனார் (இரண்டாமவரின் மகன்)
(கி.பி. 1892இல் இறப்பு)

4. சாமித்துரை சூரப்ப சோழனார் (மூன்றாமவரின் மகன்)
(கி.பி. 1893 முதல் கி.பி. 1911 முடிய)
(கி.பி. 1908ல் தான் முடிசூட்டல்)

5. தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார்
(நான்காமவரின் பங்காளிச் சகோதரர்)
(கி.பி. 1911 முதல் கி.பி.1943 முடிய)
(இவரின் தந்தை இராமபத்திர சூரப்ப சோழனார்)

6. ஆண்டியப்ப சூரப்ப சோழனார் (ஐந்தாமவரின் மகன்)
(கி.பி. 1943 முதல் கி.பி. 1978 முடிய)

7. சிதம்பரநாத சூரப்ப சோழனார் (ஆறாமவரின் மகன்)
(கி.பி. 1978 முதல் இந்நாள் வரை)

பின்னிணைப்பு III

பிச்சாவரம் அரசர்களும் மணமுடித்த அரசிகளும்

சாமித்துரை சூரப்ப சோழனார்	x	முகாசாபரூர் ஜமீன் இளவரசி இராசாத்தி என்னும் சின்ன பாப்பா
தில்லைக்கண்ணு சூரப்ப சோழனார்	x	முகாசாபரூர் ஜமீன் இளவரசி இராஜலக்குமி
ஆண்டியப்ப சூரப்ப சோழனார்	x	உடையார் பாளையம் ஜமீன் இளவரசி இராசாத்தி
சிதம்பரநாத சூரப்ப சோழனார்	x	உடையார்பாளையம் ஜமீன் இளவரசி சாந்திதேவி
சம்பத்குமார் சூரப்ப சோழனார்	x	அழிஞ்சிமங்கலம் இந்திராவதி
இராஜகுமார் சூரப்ப சோழனார்	x	காட்டகரம் ஜமீன் இளவரசி மீனாட்சி

பின்னிணைப்பு VI

பிச்சாவரம் பாளையக்காரர்களின் ஆவணங்கள்



Revenue Department

No. 176.

Extract from the Minutes of Consultation under date 4th March 1844.

Read the following:—

Extract from the Proceedings of the Board of Revenue submitting a letter from the Collector of South Arcot and recommending that a pension may be granted for the payment of certain Cavil Pensions from the Commencement of Fasly 1252 and also recommending that the pension granted to the Caulgar of Pereya Vagapoo may be increased to Rs 771-9-8 and paid in arrear from the date from which it was conferred.

—

Para 1.— The most noble the Governor in Council Sanctions the five pensions recommended by the Board of Revenue in para 1 of the foregoing proceedings amounting in the aggregate to Rupees

அரசின் வருவாய்த்துறை கி.பி. 1844இல் மார்ச் 4 ஆம் நாள் கடிதம் எண். 176இல் பித்தர்புரம் ஜமீனுக்கு அதுவரை வழங்கி வந்த பென்ஷன் தொகையை முன் தேதியிட்டு உயர்த்தியும் அதன் மூலம் கிடைக்கும் பென்ஷன் நிலுவைத் தொகையைக் கணக்கிட்டுக் கூறியும் வெளியிட்ட அரசாணை.

முந்தைய பக்க ஆவணத்தின் தொடர்ச்சி...

1073-10-8) one thousand and seventy three, annas ten and Pice Eight, and authorizes payment of the same being made from the Commencement of Fusly 1252.

2 His Lordship in Council also grants authority for increasing the pension authorized to the family of the late Pitchavarum Cavilgar from Rupees 700-11-8 to Rupees (771-9-8) Seven hundred and Seventyone, annas nine and Pice Eight, in arrear from the 16th June 1842 the date on which the former amount was Sanctioned.

(Signed) G. L. Drewery.
Chief Secretary.

True copy

Reccan
Under Secretary to Govt

தென்ஞர்க்காட்டு ஜில்லா திண்டிவனம் தாலுகா பிச்சவரம் பேரியவகுப் பானையிர் இருந்த ஆண்டியப்பசூரப்பசோழகனர் குமார் சாமிதுரைசூரப்பசோழகனர்விகமும் வணக்கமாய் எழுதிக்கொண்ட விண்ணப்பம்:—

I. கவர்ன்மெண்டார் அவர்களால் என் முன்னோர்களான சூரப்பசோழனனர் அவர்களுக்கு 1750ஆவது ரூன்மீ 1ஆவில் எழுதிக்கொடுத்திருக்கிற உடன்படிக்கையில் கண்டபடிக்குப்பற்ற, பெண்திர, பாம்பரிபரமாயும் எத்தகாலமும் சந்திரன், சூரியன் நிலவரமாயிரும் அனுபவித்துக்கொள்ளுபடி அப்போது தூமல் மான்யமாக விடப்பட்டிருந்த கர்நாடக 166 காணி நிலங்களையும் பலவித வரும்படிகளையும் என் பாட்டனர் இராமதிரு சூரப்பசோழனனர் இருந்தவரையில் அனுபவித்துவந்தபடிக்கு பின்னிட்டும் கவர்ன்மெண்டார் அனுபவித்துக்கொண்டும் சுகத்திலிருக்கவொட்டாமல் என் பாட்டனர் இறந்தவுடனே அவைகளை ஜப்தி செய்து சர்க்காரில் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

II. அந்த காலத்தில் மைனராகவிருந்த எனது தகப்பனர் சுமார் 1-வருஷத்திற்குமுன் இறந்துபோன ஆண்டியப்ப சூரப்பசோழனர் நாவாசெய்தத்தின்பேரில் அந்த வரும்படி, நிலைய நிலங்கள் இதலுக்குப்பதிலாக வஞ்சும் 1-ஐ ரூபாய் 777—9—8 வீடிம் எனது தகப்பனர் இருவரையில் எங்களுக்கு வரும்படி செய்துவருகிறார்கள்.

III. எனது தகப்பனர் இறந்பிறகு அந்த வரும்படியை என்பேரில் ஜாரிசெய்யும்படி உத்திரவாருமென்று இதவரையில் எதிர்பார்த்தும் ஒன்றும் எனக்குக்கிடைக்கவில்லை.

IV. அதினல் பாளையிர் என்ற கவர்ன்மெண்டாரவர்களால் பட்டத்தைப் பெற்று பெருமைபொருந்திய எங்கள் குடும்பத்தின் சவரூனைக்கும் யோக்யதைக்கும் மிகவும் குறைவாகயிருந்துகொண்டிருக்கிறது.

V. இதசர்ஜாங்கத்திலும் அனேக ராஜாங்கங்களிலும் எங்களைப்போலொத்த பாளையபட்டகாரருக்கு பூமியில் விடப்பட்டிருந்த வரும்படி, மான்யவரும்படி இவைகளை அவர்கள் தகப்பர்களுக்கே பிரிவிலிருந்தி சுகத்திலிருக்கும்படி செய்துவந்திருக்க; எங்கள் குடும்பத்துக்கு மாத்திரம் அந்தப்படி அனுபவிக்கும்படி செய்துவந்தமல வரும்படி மான்யம் வகைகளை ஜப்திசெய்து அதற்குப்பதிலாக ரொக்கவரும்படி ஏற்படுத்துவதாது எங்களுடைய இஷ்டமாக இருந்தபோதிலும் அந்த ரொக்கவரும்படியாவது எங்கள் தகப்பனருக்குப் பட்டுவான அடையும்படி உத்திரவு பிறப்பிக்காமலிருப்பது என்னுடையகாலவித்தியாசத்தை எங்களுடைய கவர்ன்மெண்டாரவர்களுடைய சவரூனைக்கு மிகவும் கஷ்டமாயும் அவமானமாயுமிருக்கிறது.

ஆகையால் எங்களைப்போலொத்த பூமியில் மான்ய வகையாக விடப்பட்டும் பின்னிட்டு அதை ஜப்திசெய்து ரொக்கவரும்படி கொடுக்க உத்திரவு செய்தும் இருப்பதற்குண்டான சகல விசாரணைகளும் பார்வையிட்டு எனது தகப்பனர் அடைந்துவந்தபடிக்கு வேறு ரொக்கவரும்படியை தானும் அடைந்துவர செய்விக்கவேண்டியதாக

அவர்களுடைய மேலான கவனத்தைப்பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1893ஆம் செப்டம்பர் மீ ஆ

பாளையம் சூரப்ப சோழனார் ஆங்கிலேயருக்கு எழுதிய கடிதம்

1893 ஆம் ஆண்டு சாமிதுரை சூரப்ப சோழனார் ஆங்கிலேயருக்கு எழுதிய கடிதம்

REVENUE BOARD OFFICE MADRAS



Proceedings of the Board of Revenue

(Land Revenue),

Dated 2 October 1898.

No. 3086. ~~Mis.~~ Routine.

READ petition from Sami Durai Sur-pa Solaganar son of Andiapp Sura Solaganar Poligar of Pu-ram Chidambaram Taluk, arcot Dt. dated —

Endorsement

Rejected not being accompanied by the originals or certi and duly stamped copies of orde the local officers including the co-tor whom the petitioner should address in the first instance.

2. Petitioner is, however, inform [illegible] direct, regarding the allowance —

Ag. Secretary

To

Petr.

சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு ஆங்கிலேய அரசு எழுதிய பதில் கடிதம்



சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு ஆங்கிலேய அரசு எழுதிய பதிலின் தமிழாக்கம்.



திருச்சிற்றம்பலம்.

பட்டாபிஷேகப் பிரகடனம்.

ஆகியிலே கொடுங்கோபுடைய மூத்த குமார னுமே இரகியவன்மச் சக்கரவர்த்தி என்னும் காரணப் பெயர் பூண்ட கிருஷ்ணன்ச் சோழன்மரல் பதஞ்சலி மீயாசார்பதர்கள் ஆக்ஞைப்படி நில்லக்காட்டைத் திருத்தி தேவாலயமாக பிரதிஷ்டை செய்வித்தற் ஸ்ரீ சிதம்பர கடராஜபெருமான் சந்நிதியிலே நின்ற மூவாயிர முனிவர்கள் திருமுன்னே ஸ்ரீ பஞ்சக்ஷரப்படியின் மீதே ஷ்டி சோழ வம்சத்தினருக்குக் கொன்று தொட்டு பட்டாபிஷேகம் நடந்துவந்த சம்பிரதாயப்படி

அதிசோழ வம்சவழி வந்த
பித்தாபுரம் ஜமீன்தார்
கனம் நில்லக்கண்ணு சூரப்ப சோழனார் அவர்கள்
குமார் மகா-ரா-ரா-ஸ்ரீ
ஆண்டியப்ப சூரப்ப சோழருக்கு

ஈசனது சுபானுஷ ஆவணிஷ 3உ (19—8—43) குரு வாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை 5-க்குமேல் 10-க்குள் கன்யா லக்னத் தில் ஸ்ரீ சிதம்பரேசாலயத்தில் நடக்கும் சங்காபிஷேகத் திற்கும், பட்டாபிஷேகத்திற்கும், திருவீதி பிரதக்ஷிணத் திற்கும் அபிமானிகள் பலரும் இஷ்டமித்திரருடன் விஜயம் செய்து கண்டு களிப்படையும்படி பிரார்த்திக் கின்றேன். இங்ஙனம்,

சிதம்பரநாத சூரப்ப சோழனார்,
பித்தாபுரம் அரண்மனை.

சிவமயம்.

திருக்கலியாணத் திருமுகம்.

மகா-ரா-ரா-ஸ்ரீ நீலவாழ்ச்சோழ ஜமீன்அவர்களுக்கு.

ஐயா,

ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவருளால், விகாரம் சுபானுஷ ஆவணிஷ 4உ (20—8—43)ஞாயிற் றுக்கிழமை சேனி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை 9¾-க்குமேல் 11½-க்குள் தூல லக்னத்தில்,

பித்தாபுரம் ஜமீன்தார் கனம் நில்லக்கண் ணு சூரப்ப சோழனார் அவர்கள் குமார் மகா-ரா-ரா-ஸ்ரீ

ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்கும்

உடையார்பாளையம் அல்லூர்மம் வடக்கு சிவன் ஸ்ரீ மீன மகா-ரா-ரா-ஸ்ரீ ஸ்ரீமந் மகாராஜா சாமிதுரை என்கிற சுந்தரபள்ளிகொண்ட செல்லப்ப கனகக்கத் சோழ உடையார் அவர்கள்

ராஜகுமாரி சௌபாக்யவதி

இராஜாத்தி ஆயாள் என்கிற

ஜயலக்ஷ்மி ஆயாள் அவர்களுக்கும்

சிதம்பரம் வடக்குவீதி 101-ல் இருக்கில் நடக்கும் திருக்கல்யாணத்திற்கும், அதைச்சார்ந்திருப்பதிருக்குட் டும் தாங்கள் தங்கள் பந்துமித்ர சமேதராய் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி கோருகிறேன்.

இங்ஙனம்,

சிதம்பரநாத சூரப்ப சோழனார்,
பித்தாபுரம் அரண்மனை.

மகா-ரா-ரா-ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனாரின் பட்டாபிஷேகப் பிரகடனம்.

உ



திருச்சிற்றம்பலம்

மணிமுடி சூட்டு விழா

ஆதியிலே கௌட தேசாதிபனுடைய மூத்தகுமாரனாகிய இரண்யவன்மச் சக்ரவர்த்தி என்னும் காரணப் பெயர் பூண்ட சிம்மவன்மச் சோழனாரால் பதஞ்சலி வியாக்ர பாதர்கள் ஆக்ஞைபடி தில்லைக்காட்டைத் திருத்தி தேவாலயமாக பிரதிஷ்டை செய்யப்பெற்ற சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியிலே தில்லை மூவாயிர முனிவர்கள் திருமுன்னே ஸ்ரீ பஞ்சாக்ஷரப்படியின் மீதே ஷை சோழவம்சத்திலுக்குத் தொன்று தொட்டு பட்டாபிஷேகம் நடந்து வந்த சம்பிரதாயப்படி

அச்சோழவம்சா வழிவந்த மன்னர் பரம்பரை
உயர்திரு ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களின்
ஜேஷ்ட குமாரர்

திரு சிதம்பரநாத சூரப்ப சோழனார் B.A. க்கு

நாளது காளயுக்தி௵ ஆனிமீ 2உ (16—6—78) வெள்ளிக்கிழமை சித்திரை நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் சூரிய உதயாதி நாழிகை 7½க்குமேல் 11¼க்குள் (காலைமணி 9-00க்குமேல் 10-30க்குள்) கடக லக்னத்தில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆலயத்தில் நடக்கும் சங்காபிஷேகத்திற்கும், ஆயிரக்கால் மண்டபத்தில் நடக்கும் மணிமுடி சூட்டு விழாவிற்கும், வீதிவலம் வருவதற்கும், அனைவரும் தாங்கள் தங்கள் இஷ்டமித்ரர்களுடன் விஜயம் செய்து கண்டுகளித்து விழாவினை சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்

R. ரெத்தினசாமி சூரப்ப சோழனார்
(பிச்சவரம்) பித்தர்புரம் அரண்மனை

உ

திருச்சிற்றம்பலம்

☆ திருமணத் திருமுகம் ☆

உயர்திருவாளர் [illegible] அவர்களுக்கு ஐயா,

ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவருளால்

நிகழும் காளயுக்தி௵ ஆனிமீ 2உ (16—6—78) வெள்ளிக்கிழமை ஏகாதசி திதி சுவாதி நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் இரவு நாழிகை 56½க்குமேல் 60க்குள் (இரவு மணி 4-30க்குமேல் 6-00க்குள்) ரிஷப லக்னத்தில்

சிதம்பரம் தாலுக்கா பிச்சவரம் என்கிற
பித்தர்புரம் மன்னர் பரம்பரை
உயர்திரு ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களின்
ஜேஷ்ட குமாரர்

திரு சிதம்பரநாத சூரப்ப சோழனார் B.A.

அவர்கட்கும்

உடையார்பாளையம் சமஸ்த்தானம் ஜெயவிலாஸ் அரண்மனை ஜமீன் உயர்திரு சின்னகுழந்தை ராஜா. அவர்களின் ஜேஷ்ட குமாரி செல்வி

சாந்திதேவி என்கிற ஜெலஜெகந்தி ஆயாள்

அவர்கட்கும்

திருச்சி ஜில்லா உடையார்பாளையம் சமஸ்த்தானம் ஜெயவிலாஸ் அரண்மனையில் நடக்கும் திருமண வைபவத்திற்கும் அதைச்சார்ந்த சுபாடங்குகட்கும் தாங்கள் தங்கள் பந்து மித்ர சமேதராக விஜயம்செய்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

R. ரெத்தினசாமி சூரப்ப சோழனார்
(பிச்சவரம்) பித்தர்புரம் அரண்மனை

மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனாரின் பட்டாபிஷேகப் பிரகடனம் (1978)



6—11—11. தெம்பரம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ அகிலாண்டகோடி ப்ரும்மாண்டநாயகராகிய ஸ்ரீ ஜம்புகேசுவரஸ்வாமி தேவஸ்தானத்தார்களே ஸ்ரீ ஜகதாபரணபெரிய கோபாலகட்டுத்தாரில் சிவப்பிரகாச தேவஸ்தானம் பொது நிதியாகளுக்காக அறுபத்தைண்டு நிலத்தில் எழுதிக்கொண்டது.

தர்மதருமை வைஷ்ணவர்களாகிய தாங்கள் 6—10—11 ல் அனுப்பிய கடிதம் எங்கள் கோவிலுக்கு கிடைத்தது. தாங்கள் எங்கோயிலுக்கு செலவுகளுக்காக அதில் சற்று தொகையடைத்தோம். தாங்கள் அனுப்பிய கடிதத்தில் எழுபது முதலில் கைவசம் நிலத்தில் பகலில் பல்லாண்டிதானங்களும் கவாசிகருக்கு அரிதேத கைங்கரியங்களும், பிராம்மண சமாராதனைகளும், எழுதுவிக்கும்படிதேத்துகளுக்கும் முன்னானங்களும் வஸ்திரதானங்களும், தெரிவதில் தாலி சேவை முதல் ரூ 10 மாலை வரையில் குறிவே ரு வரைவேற்கைகளும், சாயரக்ஷை புறப்பாடத்தில் பிரதக்ஷணத்தின் மல்லி தானத்தில் பரிட்டபோக்கல் திருப்பாவாடை கைங்கரியங்களும் சாயங்காலத்தில் கோவில் முழுவதும் தீபாலங்காரங்களும், சாயரக்ஷையில் அபிஷேகாலங்கார பத்தில் கனகாபிஷேக மகா-ஸ-ஸ்ரீ சந்திரவர்ணியவர்களுடைய பிரமகர்த்தாவில் எங்கிருந்து நோபன்னியாவர்களும் பாஷதர் கதைகளும் பெரியோனும் சின்னமோனும் சங்கதங்களும் நிலைமையெல்லாம் தெரிவாய் தடத்தவேண்டியதாக எங்கள் பேரு மகாநாட்டில் ரூபா 1000—0—0 ஆயிரம் செலவுசெய்ய 12 பங்கிலங்களுக்கு எழுதிக்கொண்டிருக்கிறோம்.

1. கோ. வெங்கோசாமிசாஸ்திரி.
2. கே. சபாபதிசாஸ்திரி.
3. கே. நடேசாமிசாஸ்திரி.
4. கிருஷ்ணசாமிசாஸ்திரி.
5. கே. வைத்தியலிங்கசாஸ்திரி.
6. [illegible]
7. பொன்னுசாமிசாஸ்திரி.
8. கே. கே. [illegible]
9. ச. [illegible]சாமிசாஸ்திரி.
10. [illegible]
11. [illegible]
12. [illegible]

தில்லைவாழ் அந்தணர்கள், மகா-ரா-ரா-ஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனாருக்கு எழுதிய கடிதம் (5.11.1911)

பின்னிணைப்பு V

1978இல் மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனாருக்கு தில்லை நடராசர் கோயிலில் நடந்த முடிசூட்டு விழாக் காட்சிகள்



மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாத சூரப்ப சோழனார் பட்டமேற்க திருவீதி உலா வருதல்.



தண்டு, குடை ஆகிய விருதுகளுடன் தில்லை நடராசர் கோயிலுக்கு சோழ அரசர் அழைத்துச் செல்லப்படுதல்



தில்லை நடராசர் ஆலயத்தில் அரசர் தீபாராதனை பெறுதல்



அரசருக்கு தில்லை மூவாயிரவரும், பொதுமக்களும் வரவேற்பளித்தல்



கோவில் தீட்சதர் அரசருக்குப் பூர்ணகும்ப மரியாதை அளித்தல்



முடிசூட்டப் பெற்ற பிறகு அரசர் படைக்கலன்களுடன்
சிம்மாசனத்தில் வீற்றிருத்தல்



தாயார் ஜெலஜெகந்தி ராஜாத்தி ஆயாளுடன் அரசர்



சகோதரர்களுடன் அரசர். இடதுபுறமிருப்பவர்: மகா-ரா-ரா-ஸ்ரீ சம்பத்குமார் சூரப்ப சோழனார். வலதுபுறம்: மகா-ரா-ரா-ஸ்ரீ ராஜகுமார் சூரப்ப சோழனார்.



தாயார் மற்றும் உறவினருடன் அரசர்



மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கானூர் சாமிக்கண்ணு படையாட்சியாருடன் அரசர். (அரசருக்கு வலப்புறம் இருக்கும் முதியவர்)



கூத்தங்கோயில் மணியக்காரர் அரசருக்கு மரியாதை செய்தல்



சிதம்பரம் வன்னியப் பெரியவர்களுள் குறிப்பிடத்தக்கவரான
சி.என்.ஆர். அவர்கள் அரசருக்கு மரியாதை செய்தல்



தில்லையில் புகழ்பெற்ற மருத்துவர் நடராஜன் அவர்களின் தந்தை மன்னருக்கு மரியாதை செய்தல்.



சிதம்பரம் மேனாள் நகர்மன்ற தலைவர் வி.எம். சந்திரபாண்டியன் மன்னருக்கு மரியாதை செய்தல்



ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய மேனாள் தலைவர் சுண்ணாம்புக் குழி தியாகராஜன், வேந்தருக்கு மரியாதை செய்தல்.



ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து மக்கள் புடை சூழ மன்னர் வெளியே வருதல்.



நடராசர் பெருமானை வணங்கி விட்டு பொன்னம்பல வாயில்படி வழியாக மன்னர் இறங்குதல்



பொன்னம்பல வாயிலுக்கு முன்பாக மன்னருக்கு மாலை மரியாதை



பொன்னம்பலத்தின் வெளிப்பிரகாரத்தில் சந்திர சூரியர் திருவுருவங்களுக்கு முன்பாக மன்னரை தீட்சதர்களும் மக்களும் வரவேற்றல்.



முடிசூட்டு விழா முடிந்து மாளிகைக்கு வரும் மன்னரை பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றல்.

பின்னிணைப்பு VI

களப்பணியாளர்கள்



தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன், எம்.ஏ.,
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
மேனாள் இயக்குநர்.



புலவர் முத்து எத்திராசன், எம்.ஏ.,
மேனாள் தமிழ் ஆசிரியர்.



அருங்கலைச் செல்வர் மா. சந்திர மூர்த்தி, எம்.ஏ.,
தமிழக அரசு தொல்லியல் துறை
மேனாள் துணை இயக்குநர்.



ஆறு. அண்ணல், எம்.ஏ., எம்.ஃபில்.,
சமூக - வரலாற்று ஆய்வாளர்.



நா. முரளி, பி.ஏ.,
சமூக - வரலாற்று ஆய்வாளர்.

தொல்லியலறிஞர் நடன. காசிநாதன்

வாழ்க்கைக் குறிப்பு



பொங்குதமிழ் வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் நூலாசிரியருக்கு விருது வழங்கும் காட்சி.

கல்வி:

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், தொப்பளிக் குப்பத்தில் 01.11.1940ல் பிறந்த இவர், குழந்தைப் பருவத்திலேயே தமது தந்தையை இழந்துவிட்ட காரணத்தால், தாய்வழிப் பாட்டனார் ஊரானசிதம்பரம் வட்டம், தே. புதுப்பேட்டையில் வளர்க்கப்பட்டார். தொடக்கக் கல்வியைப் புதுப்பேட்டையிலும், புதுப்பூலாமேட்டிலும் முடித்து, சிதம்பரம் இராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார். பின்பு, 1963ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றில் இளங்கலைப் பட்டம் முடித்து, சென்னை பல்கலைக் கழகத்தில் தொன்மை வரலாறு மற்றும் தொல்லியல் பாடத்தில் முதுகலைப் பட்டத்தை 1965ல் பெற்றார். இரண்டாண்டு காலம் அதே பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவராகப் பயின்ற பின்னர், 1967ல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டாய் வாளராகப் பணியில் சேர்ந்தார்.

வட்டெழுத்தைப் படிப்பதில் வல்லமை:

கல்வெட்டாய்வாளராகப் பணிபுரிகையில், கன்னியாகுமரி மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியவற்றில் கல்வெட்டுக் கள ஆய்வு செய்துபல புதிய கோயிற் கல்வெட்டுக்களையும், நடுகல் கல்வெட்டுக்களையும் கண்டுபிடித்தவர். இவர் கண்டறிந்த பல வட்டெழுத்துக் கல்வெட்டுக்களைப் படித்து 'வட்டெழுத்தைப் பயில்வதில் வல்லவர்' என்ற பாராட்டையும் பெற்றார்.

செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள் கண்டுபிடித்தார்:

1947ல் பதிவு அலுவலராகப் பதவி உயர்வு பெற்று தஞ்சையிலும், சென்னையிலும் பணியாற்றியபோது, திருத்தணிக்கு அருகிலுள்ள வேலஞ்சேரியில் பல்லவ மன்னன் அபராஜிதன், சோழ மன்னன் முதலாம் பராந்தகன் காலத்திய இரு அரிய செப்புப் பட்டயங்களைக் கண்டறிந்து துறைக்குக் கைப்பற்றினார். சென்னையில் தனியார் ஒருவரிடம் இருந்த மராத்திய மன்னர் சரபோஜியின் திருவுருவச் சிலையையும், இராயப்பேட்டையில் ஒரு புற்றுக் கோயிலுக்கருகில் இருந்த பௌத்த புடைச் சிற்பத்தையும், எல்லிஸ் துரை கிணறுகள் அமைத்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டையும், காரனெட் நிறுவனத்தார் சிற்பக் கிடங்கில் இருந்த வட்டெழுத்துக் கல்வெட்டுடன் கூடிய பல்லவர் காலத் துர்க்கைச் சிலையொன்றையும் கண்டுபிடித்துத் துறைமூலம் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தினார்.

இராசராசனின் ஆயிரமாவது முடிசூட்டு விழா நடத்தினார்:

1981ல் துணை இயக்குநராகப் பதவி உயர்வு பெற்று பணி புரிந்து கொண்டிருக்கையில், இயக்குநர் பொறுப்பை 1983 ல் ஏற்று, தஞ்சாவூரில் 1984ல் சோழ மாமன்னன் முதலாம் இராசராசன் ஆயிரமாவது முடிசூட்டு விழாவை அந்நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் ஆகியோரைக் கொண்டு சிறப்பாக நடத்தி முடித்தார்.

இயக்குநராக நியமனம் பெற்ற பின்னர் செய்து முடித்த அரும்பணிகள்:

1989ல் துறையில் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்றுகையில் பல நில அகழாய்வுகள் நடத்தியும், ஆங்காங்கே அகழ் வைப்பகங்களை நிறுவியும் தமிழக வரலாற்றுக்குப் புத்தொளி ஏற்படுத்தினார். இவர் காலத்தில் நிகழ்ந்த அகழாய்வுகளில் அழகன்குளம் அகழாய்வு, பூம்புகார் நில அகழாய்வு மற்றும் கடல்

அகழாய்வும் குறிப்பிடத் தக்கவைகளாகும். இவர் ஏற்படுத்திய அகழ் வைப்பகங்களில் தஞ்சாவூர் முதலாம் இராசராசன் அகழ் வைப்பகம், பூம்புகார் ஆழ்கடல் தொல்லியல் அகழ் வைப்பகம் ஆகியவை முக்கியமானவையாகும். அகழாய்வு நடைபெற்ற இடங்களான கொடுமணல், அழகன்குளம், பூம்புகார் ஆகிய இடங்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ஆகியோரை அழைத்துச் சென்று, பொதுமக்கள் அவற்றின் சிறப்பை அறியும்வண்ணம் விழா எடுத்தார்.

மரபுச் சின்னங்கள் பாதுகாத்தல்:

1995ல் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது தஞ்சாவூர் மராத்திய அரண்மனையில் தர்பார் மண்டபம், மணிக் கோபுரம், ஆயுதக் கோபுரம், சார்ஜா மாடி ஆகியவற்றையும், சரபேந்திர ராசன் பட்டினம் (மனோரா) உப்பரிகை, மதுரை திருமலை நாயகர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் மற்றும்அங்குள்ள ஓவியங்கள், தரங்கம்பாடி டேனிசு கோட்டை ஆகியவற்றை அவற்றின் பழமைத் தன்மை கெடாமல் பாதுகாக்கும் பணி மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்தார்.

ஓலைச்சுவடி நூல் நிலைய வெளியீடு மற்றும் மேம்பாடு

சென்னை அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூல் நிலையத்தின் 51க்கு மேற்பட்ட சுவடிகளை நூல்களாக அச்சாக்கி வெளியிட்டார். மேலும், சுவடிகள் வைத்துப் பாதுகாக்கும் கூடத்துக்குக் குளிர்சாதன வசதி செய்தார்.

கோடைக் காலக் கல்வெட்டுப் பயிற்சியையும், ஓராண்டு கல்வெட்டுப் பட்டய வகுப்புப் பயிற்சியையும் மீண்டும் துறையில் தொடங்கி ஆண்டுதோறும் நடத்தினார். இவர் காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பல அரிய தொல்பொருட்கள் இவராலும் துறையின் பிற அலுவலர்களாலும் கண்டுபிடிக்கப் பெற்று வெளியுலகுக்குத் தெரிவிக்கப்பட்டன.

திரைப்பட வெளியீடு:

தமிழகத்தின் நாகரிகச் சிறப்பு குறித்து 'உங்கள் பெருமையை உணர்வீர்' என்னும் திரைப்படம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் துறையின் செயல்பாடுகள் குறித்து வீடியோ படம் தமிழிலும் தயாரித்தார்.

பூம்புகார் கடலகழாய்வு:

இவர் காலத்தில் நிகழ்ந்த பூம்புகார் கடலாய்வு மூலம் கடற்கரை

யிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் கடலுக்கடியில் 21 மீட்டர் ஐந்து கட்டடப் பகுதிகள் இருப்பதையும், பழைய காவிரி ஆற்றுப் போக்கு கடலுக்கடியில் தெரிவதையும் சின்ன வானகிரிக்கு எதிர்த் திசையில் நாலரை கி.மீட்டர் தொலைவில் கடலுக்கடியில் 19 மீட்டர் ஆழத்தின் தரை தட்டிச் சிதைந்த கி.பி. 18 ஆம் நூற்றாண்டுக் கப்பல் ஒன்று புதைந்து கிடப்பதையும், கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவில் ஏழு மீட்டர் ஆழத்தில் கருங்கல் கட்டங்கள் சில புதைந்திருப்பதையும், கரையின் ஓரமாக அலைகள் மோதும் இடத்தில் கடலுக்கடியில் சில செங்கற் கட்டங்கள் அழிந்திருப்பதையும் வெளியுலகுக்குத் தெரிவித்தார்.

கருத்தரங்குகள் நடத்தப் பெற்றமை:

பொதுமக்களிடையே மரபுச் சின்னங்கள், பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாவட்டந்தோறும் வரலாற்றுக் கருத்தரங்குகள் நடத்தவும், அதையொட்டி காட்சிகள் அமைக்கவும் ஏற்பாடு செய்தார். மாநில அளவில் ஆழ்கடல் அகழாய்வுக் கருத்தரங்குகள் சென்னையிலும், பூம்புகாரிலும் நடத்தினார். 1997ம் பிப்ரவரி திங்களில் அகில உலக ஆழ்கடல் அகழாய்வுக் கருத்தரங்கினைக் கோவா, ஆழ்கடல் ஆய்வுக் குழுவினர் ஒத்துழைப்போடு சென்னையில் நடத்தினார். இக்கருத்தரங்கைத் தமிழக ஆளுநர் மேதகு பாத்திமா பீவி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் முனைவர் க. அன்பழகன் அவர்களும், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் மண்புமிகு முனைவர் தமிழ்க் குடிமகன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இக்கருத்தரங்கில் ஆஸ்திரேலியா, மலேசியா, இசுரேல், இங்கிலாந்து, இலங்கை ஆகிய வெளிநாடுகளைச் சேர்ந்த பேராளர்களும், இந்திய நாட்டுப் பேராளர்களுமாக 70க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டு சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தளித்தனர். அக்கட்டுரைகளின் சுருக்கம் அச்சாக்கப் பெற்றுக் கருத்தரங்கம் நடைபெற்றபோதே, பேராளர்களுக்கு வழங்கப் பெற்றது.

வெளிநாடுகளுக்குச் சென்று பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு பெற்றாமை:

இந்தியாவில் நடைபெற்ற கல்வெட்டு, நாணயவியல், தொல்லியல், இடப் பெயர், வரலாறு சம்பந்தமான தேசிய கருத்தரங்குகளில் பங்கு

பெற்றுச் சிறந்த கட்டுரைகளை படித்தளித்ததோடு, சென்னையில் 1992ல் நடைபெற்ற பன்னாட்டுப் பௌத்த மத கருத்தரங்கு மற்றும் 1990ல் நடைபெற்ற பன்னாட்டுப் பாதை கருத்தரங்கு, 1981ல் மதுரை, 1995ல் தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்குகள், புதுதில்லியில், 1994ல் நடைபெற்ற பன்னாட்டு மூன்றாம் தொல்லியல் கருத்தரங்கு, ஆஸ்திரேலியாவில் 1997ல் நடைபெற்ற பன்னாட்டு ஆழ்கடலாய்வுக் கருத்தரங்கு மற்றும் யாழ்ப்பாணத்தில் 1976ல் நடைபெற்ற தெற்காசியக் கல்வெட்டுக் கருத்தரங்கு ஆகியவற்றில் இவர் கலந்து கொண்டு கருத்தரங்கு சார்பான சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தளித்தார்.

வெளிநாட்டுப் பயணம்:

1976ல் இலங்கைக்கும், 1986ல் அந்தமான் தீவுக்கும், 1997ல் சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவிற்கும், கல்வி சம்பந்தமான பயணம் மேற்கொண்டார்.

வானொலி, தொலைக்காட்சி உரை:

அகில இந்திய வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும், தமிழகத் தொல்லியல் துறையின் செயற்பாடுகள், மரபுச் செல்வங்களைப் பாதுகாத்தல், அகழாய்வில் வெளிக் கொணரப்பட்ட முக்கியத் தொல்பொருட்கள் ஆகியவை பற்றி உரை நிகழ்த்தியுள்ளார்.

பல்கலைக் கழகப் பாடத் திட்டக் குழு உறுப்பினர்:

தமிழகத்தில் உள்ள சென்னைப் பல்கலைக் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்லைக் கழகம் ஆகியவற்றின் பாடத் திட்டக் குழுக்களில் உறுப்பினராகவும், சில சமயங்களில் தலைவராகவும் இருந்து பணியாற்றி உள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆளவைக் குழு உறுப்பினர்:

2004, டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்துக்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆளவைக் குழு உறுப்பினராகத் தமிழக மேதகு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

அரசு உயர்மட்டக் குழுக்களில் உறுப்பினர்:

தமிழ்நாடு அரசு தமிழ்நாடு வரலாறு எழுதும் உயர்மட்டக் குழுவில் மூன்று முறை உறுப்பினராக இருந்தும், பல்லவ - பாண்டியர் வரலாறு, சோழப் பெருவேந்தர் வரலாறு, தமிழக வரலாறு (ஒரே தொகுதி) ஆகிய

நூல்களுக்குச் சில பகுதிகள் எழுதியும் பணிபுரிந்துள்ளார். மேலும் தமிழ்நாடு அரசு ஆலய நிர்வாக உயர்மட்டக் குழு, தமிழ் ஆட்சிமொழி உயர்மட்டக் குழு போன்றவற்றிலும், உறுப்பினராகச் செயல்பட்டிருக் கிறார்.

இவர் பெற்ற விருதுகள்:

- ★ முனைவர் ந. சஞ்சீவி அவர்களால் 'காசுநாதன்' என்று பாராட்டப் பெற்றார்.
- ★ 'கண்ணியம்' இதழ் இவரைக் 'கல்வெட்டுச் செம்மல்' என்று பாராடியுள்ளது.
- ★ பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பனார் இவரைத் 'தொல்லியல் அறிஞர்' என்று பாராட்டிச் சிறப்பித்துள்ளார்.
- ★ பொங்குதமிழ் வளர்ச்சி அறக்கட்டளை, 2002, பிப்ரவரித் திங்களில் இவருக்குத் 'தமிழ்ச் செம்மல்' என்ற விருதையும் 'வரலாற்றுத் திலகம்' என்ற விருதையும் வழங்கிப் பாராட்டியது.

தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் என்னும் அமைப்பை ஏற்படுத்துதல்:

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு 'தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம்' என்னும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதில் சில ஆய்வு அறிஞர்களை இணைத்துக் கொண்டு பல அரிய தொல்பொருட்களைக் கண்டுபிடிப்பதற்காக உதவியுள்ளார்.

மேலும் 'தொண்டை மண்டல வரலாற்றுக் கருத்தரங்குகளை' இவ்வமைப்பின் மூலம் விழுப்புரத்திலும் திண்டிவனத்திலும் புதுச்சேரியிலும் நடத்தியுள்ளார்.

இவர் எழுதியுள்ள நூல்கள் பட்டியல்

எண்	நூலின்பெயர்	ஆசிரியர் / பதிப்பாளர்	வருடம்
1.	கல்வெட்டின் கதை	ஆசிரியர்	1968
	கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (vol.I)	பதிப்பாளர்	1972
2.	கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (Vol. II)	பதிப்பாளர்	1972
	கன்னியர்குமரிக் கல்வெட்டுகள் (Vol. III)	பதிப்பாளர்	1962
3.	கல்வெட்டியல்	இணை ஆசிரியர்	1973

4.	கல்வெட்டு ஓர் அறிமுகம்	இணை ஆசிரியர்	1973
5.	காலச் சுவடுகள்	ஆசிரியர்	1973
6.	ஆய்வுக் கொத்து	இணை ஆசிரியர்	1973
7.	பூம்புகார்	இணை ஆசிரியர்	1973
8.	மனோரா	ஆசிரியர்	1975
9.	ஆய்வுத்தேன்	இணை ஆசிரியர்	1976
10.	முத்தரையர் (முதற் பதிப்பு)	ஆசிரியர்	1976
	முத்தரையர் (இரண்டாம் பதிப்பு)	ஆசிரியர்	1994
11.	தொல்லியல் கட்டுரைகள்	ஆசிரியர்	1977
12.	களப்பிரர்	ஆசிரியர்	1981
13.	தொல்லியல் கருத்தரங்கம் பகுதி - II	பொதுப் பதிப்பாசிரியர்	1983
14.	இராசராசேச்சுரம்	ஆசிரியர்	1984
15.	அருண்மொழி	பதிப்பாளர்	1988
16.	கல்லெழுத்துக்கலை (தமிழக அரசு பரிசு பெற்றது)	ஆசிரியர்	1989
17.	தமிழக வரலாற்றுச் சின்னங்கள்	ஆசிரியர்	1989
18.	கண்டி மன்னர் கல்லறை	ஆசிரியர்	1989
19.	வளரும் தமிழகத்தில் மலரும் மாவட்டத் தலைநகர் - நாகப்பட்டினம்	ஆசிரியர்	1991
20.	திருக்கோடிகா கல்வெட்டுகள்	பொதுப் பதிப்பாசிரியர்	1992
21.	கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும்	இணை ஆசிரியர்	1992
22.	தமிழகத்தில் தொல்மாந்தர் பண்பாடு	ஆசிரியர்	1993
23.	தமிழ்க் கீர்த்தனைகள்	பொதுப்பதிப்பாசிரியர்	1993
24.	திருக்குறள் பழைய உரை	பொதுப்பதிப்பாசிரியர்	1993
25.	திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்	பொதுப்பதிப்பாசிரியர்	1994
26.	தமிழர் நாகரிகம்	பதிப்பாளர்	1994-1996
27.	தமிழர் காசு இயல்	ஆசிரியர்	1995
28.	பெருமுக்கல் கல்வெட்டுகள்	இணைத் தொகுப்பாளர்	1998
29.	தொல்லியல் துறையின் அரிய கண்டுபிடிப்புகள்	இணை ஆசிரியர்	1998
30.	பூம்புகாரும் கடல் அகழாய்வும்	ஆசிரியர்	1999
31.	அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலக வெளியீடுகள் (மொத்தம் 49)	பொதுப்பதிப்பாளர்	1991-1998
32.	தமிழர் தெய்வங்கள்	ஆசிரியர்	2003
33.	வன்னியர்	ஆசிரியர்	2001
34.	தடயம்	இணை ஆசிரியர்	2000

35.	வரலாற்றுத் தடயம்	ஆசிரியர்	2002
36.	தொன்மைத் தடயம்	இணை ஆசிரியர்	2003
37.	மாமல்லபுரம்	ஆசிரியர்	2000
38.	தமிழ் எழுத்தியல் வரலாறு	இணை ஆசிரியர்	2004

ENGLISH

S.No	Name of the Book	Author/ Editor	Year
39.	Hero Stones in Tamil Nadu	Author	1978
40.	Functions of the Department of Archaeology	Author	1989
41.	Under Sea Explorartion off the shore of Pumpuhar	Author	1991
42.	The Metropolis of the Medieval Cholas - First Edition	Author	1992
	The Metropolis of the Medieval Cholas - Second Edition	Author	1998
43.	Seminar of Marine Archaeology	Editor	1992
44.	Art Panorama of the Tamils	joint Author	1993
45.	Padavedu Excavation	Author	1993
46.	Alagankulam - A Preliminary Report of Excavation	General Author	1994
47.	Collected Papers (Studies in Tamil Culture)	Author	1994
48.	Achievements of Archaeology	Author	1994
49.	Ancient Industries of Tamil Nadu	Author	1994
50.	Cultural Heritage of Tamil Nadu	Author	1997
51.	Ancient Ports of Tamil Nadu and their trade contact with Foreign Countries	Author	1997
52.	Tirukkoyilur Excavation	Joint Author	1998
53.	Archaeological Contributions of the Nadu to the Cultural Heritage of Tamil Nadu (Under Print)	Author	2000

அண்ணல் வெளியீடு பதிப்பித்து வரும் பழமையான நூல்கள்

ஜாதி சங்கரக சாரம்: மைலத்துக்கு அடுத்த குண்ணம் முனிசாமிப் பிள்ளையவர்களால் 1872 ஆம் ஆண்டில் எழுதி வெளியிடப் பட்டது. 461 பக்கங்கள் - டெம்மி அளவு - ஏராளமான சாத்திர, புராண, இதிகாச, சரித்திர மேற்கோள்களுடன் வெளிவந்த அரிய நூல். சாதிகளின் தோற்றங்களும், வளர்ச்சிகளும், பயன்களும், பாதிப்புகளும் இந்நூலில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. 132 ஆண்டுகளுக்குப் பின் இந்நூல் வெளிவரவிருக்கிறது.

வருண தருப்பணம்: வன்னியகுல க்ஷத்திரிய மகா சங்க இன்ஸ்பெக்டர் கா. ஆறுமுக நாயகர் அவர்களால் இயற்றப்பட்டு 1907 ஆம் ஆண்டு வெளிவந்த நூல். புராண இந்தியாவிலிருந்து வெள்ளைக்காரர்களின் கையிலிருந்த இந்தியா வரை நிலவி வந்த சமூகங்களைப் பற்றிய அரிய நூல். டெம்மி அளவில் 500க்கு மேற்பட்ட பக்கங்களில் பிரசுரமானது. இதுவும் தற்போது தமிழகம் காண வெளிவரவிருக்கிறது.

கச்சிப் பல்லவச் சோழ சரித்திரச் சுருக்கம்: வன்னியகுல ரிஷி கா. ஆறுமுக நாயகர் அவர்களால் எழுதப் பெற்று, பல்லவகுல சேகரர் கா.கோ. பலபத்திர நாயகரால் வெளியிடப்பட்ட மிக மிக அரிய நூல். கல்வெட்டுகளும், செப்பேடுகளும், சரித்திரச் சான்றுகளும் கொண்டு மிகத் தெளிவாக வரையப்பட்டிருக்கும் அந்நாளைய நூல். இதுவும் தற்போது உலாவரப் போகிறது.

அக்நிகுலாதித்தன் (தொகுதி - 1) : 1897 ஆம் ஆண்டு வன்னிய குலோத்தாரணர் கா. கோபால நாயகராலும் அவரின் மைந்தன் பல்லவகுல சேகரர் கா.கோ. பலபத்திர நாயகராலும் வாரமொருமுறை பிரசுரம் செய்யப்பட்ட தமிழ் இதழ். இவ்விதழின் முதல் தொகுப்பாக தற்போது வெளிவரவுள்ளது. கிடைத்ததற்கரிய செய்திகள் அடங்கிய நூல்.

வன்னியகுல விளக்கம்: 1891 இல் டி.அய்யாக் கண்ணு நாயகர், பி.ஏ. ஆங்கிலத்திலும், கா. அண்ணாசாமி நாயகர் தமிழிலும், கோரிங்கா பி. லட்சுமணசாமி வர்மா தெலுங்கிலும் எழுதிய மிக மிக அருமையான நூல். அதே தலைப்பில் சூளை ஆ. சுப்பிரமணிய நாயகர் எழுதிய வரலாற்றுச் செய்திகளோடு வெளிவரவுள்ளது.

தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் எழுதி வெளிவர உள்ள நூல்கள்

காடவரையர் வரலாறு

காடவரையர், சோழர் காலத்தில் இருந்த குறுநில மன்னர்களுள் மிகுந்த வலிமை வாய்ந்த குறுநில மன்னர்களாக விளங்கியிருக்கின்றனர். தொடக்கக் காலத்தில் தங்களைப் 'பள்ளிகள்' என்று கூறிக் கொள்கின்கின்றனர். பின்னர் தாங்கள் பல்லவர் தோன்றல்கள் என்று கல்வெட்டுக்களில் பொறித்துள்ளனர். காடவர்களின் தோற்றத்தைப் பல்லவர்களின் கிளை வழியைச் சேர்ந்தவனான இரணியவர்மன் காலம் தொட்டு ஆராய்தல் வேண்டும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பேரரசுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி வெற்றி கண்டவர்கள். அவர்களின் வரலாறு முதன் முதலில் முறையாக எழுதப்பட உள்ளது.

சிவகிரி ஜமீன் வரலாறு

சிவகிரி ஜமீன், பாண்டி நாட்டில், கி.பி. 18-19 நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கிய ஒரு பாளையமாகும். இப்பாளையத்தில் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த வரகுணராமப் பாண்டியன் சிறந்த போர் வீரராகவும், நீதி நெறியை நிலை நாட்டும் மன்னராகவும் விளங்கியிருக்கிறார். இம்மன்னரின் போர்த் திறனும், ஈகைத் திறனும் 'திக்கு விஜயம்' என்னும் நூலிலும், 'சிவகிரி காதல்' என்னும் நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

உடையார்பாளையம் ஜமீன் வரலாறு

இப்பாளையக்காரர்கள் தொடக்கத்தில் (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு) காஞ்சிபுரத்தில் ஆட்சி செய்து வந்திருக்கின்றனர். பின்பு விசய நகரப் பேரரசின் ஆணைக்கிணங்க செஞ்சி அதிபர்க்கு உதவுவதற்காக அனுப்பப்பட்டு அவருக்கு வெற்றி தேடித் தந்து பல சிறப்பு விருதுகளைப் பெற்றனர். அதன் பின்னர் இவர்களது விசுவாசத் தன்மையையும் வீரத்தையும் கண்டு வியந்த விசயநகரப் பேரரசு 'ஜில்லிகாவனம்' என்னும் நிலப்பகுதியை அரசாளும்படி அனுப்பி வைத்தது. அப்பகுதியில் உடையார் பாளையம் ஜமீன் அமைத்துக் கொண்டு 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சீரும் சிறப்புடன் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

அரியலூர் ஜமீன் வரலாறு

இப்பாளையக்காரர்கள் மழவர் வழித் தோன்றல்களாகக் காணப்படுகின்றனர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சுமார் 600 ஆண்டுகள் அரியலூரில் ஆட்சி செய்திருக்கின்றனர். இவர்களது அரசவையில்தான் கூடன் மாநகர் இருவாட்சிப் புலவரால் பாடப் பெற்ற 'திருக்கை வளம்' அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

வடகால் ஜமீன் வரலாறு

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் வடகாலில் இப்பாளையம் அமைந்துள்ளது. இப்பாளையமும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்தே இயங்கி வந்திருக்கிறது. தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்தில் இப்பாளையம் சிறந்து விளங்கியிருக்கிறது என்பது இம்மன்னர்கள் வழங்கியுள்ள நான்கு செப்பேடுகளினால் புலனாகின்றன. மேலும் 'திருக்கை வளம்' என்னும் நூலிலும் இப்பாளையக்காரர் புகழப்பட்டிருக்கிறார்.

சோழ வேந்தர் பரம்பரை
வன்னிய பாளையக்காரர் வரலாறு



அண்ணல் வெளியீடு
புதிய எண்.4, 2ஆம் முதன்மைச்சாலை,
கலைமகள் நகர் ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை 600 097.
தொலைபேசி : 044 - 22328407